விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
## Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆடி 09 வெள்ளிக்கிழமை (25.07.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 218

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# ஐ.நா விசாரணைக் குழுவினரை இந்தியாவிற்குள் அனுமதியுங்கள்



## விசா வழங்குமாறு மோடியிடம் ஜெயா வலியுறுத்து



*(சென்னை)*

***இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை நடத்த ஐ.நா விசாரணைக்குழு இந்தியா வர விசா வழங்க வேண்டும் என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா வலியுறுத்தியுள்ளார்.***

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், ஐ.நா. மனித உரிமை ஆணையர், நவநீதம்பிள்ளை, கடந்த ஏழு ஆண்டுகளாக இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை நடத்துவதற்காக, ஐ.நா. விசாரணைக் குழுவை நியமித்தார்.

இலங்கையின் போர்க்குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்கள் பற்றி விசாரணை நடத்த உள்ள இந்த ஐ.நா. குழுவிலே 3 நிபு

20 ஆம் பக்கம் பார்க்க....

# இஸ்ரேல் மீது சர்வதேச விசாரணை ஐ.நா தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவு

## இலங்கை விடயத்தில் தவிர்த்தது ஏன்?

பாலஸ்தீனத்தில்இடம்பெற்ற அனைத்துலக மனித உரிமை மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்கள் குறித்து விசாரிப்பதற்கு, சுதந்திரமான அனைத்துலக விசாரணைக்குழுவை அமைபபதற்கான தீர்மானத்துக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்துள்ளது.

காஸாப் பகுதிகள் மீது இஸ்ரேல் மேற்கொண்டு வரும் தாக்குதல்களின் போது இழைக்கப்பட்ட சர்வதேச மனித உரிமை மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்கள் குறித்து விசாரணை செய்ய சுதந்திரமான சர்வதேச விசாரணைக் குழுவொன்றை நியமிப்பதற்கு இந்தியா ஆதரவு தெரிவித்துள்ளது.

இஸ்ரேலின் இந்த தொடர் தாக்குதல்களில் 700க்கும் மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டுள்ள நிலையில், இது குறித்து ஆராய ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் அவசரக் கூட்டம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

இதன்போது, இத்தாக்குதல்களின்

19 ஆம் பக்கம் பார்க்க....

# பொதுநலவாய நிகழ்வில் மகிந்த பங்கேற்கார்!

## பாதுகாப்பு இல்லை என்கிறார் பீரிஸ்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னர் மேற்கொண்ட விஜயங்களின் போது, பிரித்தானிய அரசாங்கம் போதிய பாதுகாப்பு அளிக்கத் தவறியதாலேயே அவர் பொதுநலவாய நிகழ்வில் பங்கேற்கவில்லை என்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கிளாஸ்கோ தேவாலயத்தில் அடுத்த மாதம் 4ஆம் திகதி இடம்பெறவுள்ள முதலாம் உலகப் போர் நினைவு ஆராதனை நிகழ்விலும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்து கொள்வதில்லை என்று முடிவு செய்துள்ளதாக பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், பிரித்தானியாவின் கலாசார, ஊடக மற்றும்

20 ஆம் பக்கம் பார்க்க....

பகையான கருத்து

# ஞானசார தேரரின் முகநூல் முடக்கம்

(கொழும்பு)

பகையான கருத்துக்கள் மற்றும அடையாளங்களை உள்ளடக்கப்பட்டிருந்ததன் காரணமாவே பொது பல சேனா அமைப்பின் (முகநூல்) செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரின் முகநூல் கணக்கை நீக்க தீர்மானித்ததாக முகநூல் சமூக வலைத்தள அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

ஞானசார தேரரின் இந்த செயற்பாடுகள் முகநூல் நிறுவனத்தின் சமூக தரங்களை மீறியுள்ளதால், அது குறித்து பலர் தெரியப்படுத்திய

20 ஆம் பக்கம் பார்க்க....

# மீண்டும் விமான விபத்து



கோப்புப்படம்

அல்ஜீரியாவில் இருந்து புறப்பட்ட விமானம் நைஜரில் விழுந்து நொறுங்கியதில் விமானி உள்பட 116 பேரும் பலியாகினர்.

ஏர் அல்ஜீரியாவின் ஏஎச்-5017 என்ற விமானம் நேற்று மேற்கு ஆப்பிரிக்க நாடான பர்கினா பாசோவின் தலைநகர் ஒகடாகோவில் இருந்து அல்ஜியர்ஸ் நோக்கிச் சென்றது. இதில் 110 பயணிகளும், 6 ஊழியர்களும் இருந்தனர்.

இந்த விமானம் கிளம்பிய 50 நிமிடத்தில் ரேடாரில் இருந்து விமா

19 ஆம் பக்கம் பார்க்க....

# அமைச்சர் சம்பிக்கவின் முகநூல் மூடப்பட்டது

(கொழும்பு)

அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் முகநூல் கணக்கை முகநூல் நிறுவனம் எந்த முன்னறிவிப்பும் இன்றி மூடியுள்ளது.

இது தொடர்பாக மின்னஞ்சல் மூலம் தான் முகநூல் நிறுவனத்தின் நிர்வாகத்துக்கு முறையிட்டுள்ளதாக சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இந்த முறைப்பாட்டுக் கடிதத்தில், எதற்காக தமது முகநூல் கணக்கு முடக்கப்பட்டது என்பது தொடர்பில் விளக்கம் அளிக்குமாறு சம்பிக்க ரணவக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

20 ஆம் பக்கம் பார்க்க....

**முதன்முறையாக 100% விசா வெற்றி என்கின்ற உறுதிப்பாட்டுடன் திசைகாட்டி வழங்கும் செங்கென் விசா**

செல்வம் கொழிக்கும் குளிர்மைமிகு சுவிஸ், பிரான்ஸ், நோர்வே, இத்தாலி, ஜேர்மனி உட்பட 26 நாடுகளிற்கு செங்கென் விசா

**இணையும் இறுதிநாள்:-30.07.2014**

**உத்தேச பயணம்-நவம்பர் மாதம்.**

**விரைந்து வாரீர்.**

(7114)

*திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்*

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி 0212219016, 0215689090



# காஸா வன்முறைக்கு இலங்கை கண்டனம்

(கொழும்பு)

கிழக்கு ஜெருசலேம் உட்பட பலஸ்தீனத்தில் தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலைகள் குறித்து மனித உரிமை பேரவையில் நேற்று விசேட கூட்டம் கூட்டப்பட்டதை வரவேற்பதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அணிசேரா அமைப்பின் சார்பில் ஈரான் ஊடாக விடுத்துள்ள அறிக்கையிலேயே இலங்கை அரசாங்கம் இதனை கூறியுள்ளது.

இது குறித்து வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

காஸாவில் அதிகரித்து வரும் வன்

20 ஆம் பக்கம் பார்க்க....

# தமிழர்கள் மீது இந்தியாவிற்கு உண்மையான கரிசனை இல்லை

## ஜே.வி.பி தலைவர் வவுனியாவில் உரை

(கொழும்பு)

இந்தியா தலையிட்டு வடக்கு மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாணும் என அந்த மக்கள் எண்ணுவார்களாயின் அது மிகப்பெரிய ஏமாற்றம் எனபதுடன் அழிவும் கூட என ஜே.வி.பியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மனித வளத்தை கட்டியெழுப்புவதன் மூலமே நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

வவுனியாவில் அண்மையில் நடைபெற்ற ஜே.வி.பியின், எமது நோக்கு கொள்கை திட்டம் தொடர்பான கூட்டத்தில் உரையாற்றும் போதே அனுரகுமார திஸாநாயக்க இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியா இன்று வடக்கு கிழக்கு பிரதேசத்தில் மாத்திரமல்லாது நாட்டின் பொருளாதாரத்திலும் பெரும்

20 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் இடமாற்றம் கோரலுக்கான விண்ணப்ப தகுதிகள் வரையறுப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளரின் NP/20/ET/F/2/DT இலக்கத்தின் சார்பாக ஆசிரிய இடமாற்றங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் அறிவித்துள்ளார்.

இதற்கமைய வலயத்திற்குள்ளான, வலயங்களுக்கிடையிலான (மாவட்டத்துக்குள்), மாவட்டங்களுக்கிடையிலான மற்றும் மாகாணங்களுக்கிடையிலான இடமாற்றங்கள் காணப் படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இவ் இடமாற்றங்களுக்கு விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் நியமனக்கடிதத்தில் குறிப்பிடப்பட்ட சேவைக் காலத்தினை பூர்த்தி செய்தவர்கள், கஷ்டப்பிரதேசங்களில் தொடர்ச்சியாக ஐந்து வருடங்கள் சேவையாற்றியவர்கள்,

வசதியான பிரதேசங்கள் தொடர்ச்சியாக ஆறு வருடங்கள் சேவையாற்றியவர்கள், விசேட வைத்திய காரணங்கள் அல்லது வேறு விசேட காரணங்கள் தொடர்பாக இடமாற்றம் கோருவோர் (வைத்திய காரணங்களின் அரச வைத்திய அதிகாரியின் சான்றிதழ் விசேட காரணங்களை உறுதிப்படுத்தும் சான்றிதழ்) போன்ற ஆசிரியர்கள் விண்ணப்பிப்பதற்கு தகுதியானவர்களாக கருதப்படுவர்.

இவ்விண்ணப்பங்கள் யாவும் தமது பாடசாலை அதிபர், கோட்டக்கல்வி அலுவலர் ஊடக எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்க கூடியவாறு யாழ். வலயக்கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப் படுதல் வேண்டும்.

அத்துடன் சகல இடமாற்ற விண்ணப்பத்துடனும் முதல் நியமனக்கடிதப் பிரதி இணைக்கப்படுவதுடன் சான்றுபடுத்தக்கூடிய பொருத்தமான ஆவணங்களும் இணைக்கப்படல் வேண்டும்.

மேலும் எக்காரணத்தின் பொருட்டும் மேற்குறிப்பிடப்பட்ட திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது.

இது தொடர்பாக மேலதிக விபரங்கள் தேவைப்படின் யாழ்.வலயக்கல்வி அலுவலகத்தில் உள்ள விளம்பரப்பலகையில் பார்வையிட முடியும் என இவ் விண்ணப்பத்திற்கு விண்ணப்பிக்கும் ஆசிரியர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (செ)

## சோமாஸ் கந்தவேள் சுவாமிகளின் குருபூசை



(யாழ்ப்பாணம்)

யாழ். கந்தர்மடம் சிவகுருநாத குருபீடம் வேதாந்தமடத்தின் 7ஆவது குருபீடாதிபதி ஸ்ரீமத் சோமாஸ்கந்தவேள் சுவாமிகளின் 8 ஆவது ஆண்டு குருபூசை நிகழ்வு நாளை மறுதினம் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு வேதாந்த மடத்தில் இடம் பெறவுள்ளது.

வேதாந்த மடத்தின் 8ஆவது குருபீடாதிபதி ஸ்ரீமத் வேதவித்தியாசாகர சுவாமிகளின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நினைவு ஆலயத்திற்கு விசேட அபிடேக ஆராதனைகள் நடத்தப்படவுள்ளன.

முன்னதாக தாவடியூர் கே.எஸ்.ஆர். திருஞானசம்பந்தனின் பண்ணிசைக் கச்சேரி இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (செ)

# யாழ். மன்னர்களின் சிலைகள் நிறுவப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தினை ஆட்சி செய்த மூன்று மன்னர்களின் சிலைகளை மணிக்கூட்டுக் கோபுரத்தின் மூன்று மூலைகளிலும் வைப்பதற்கு யாழ்.மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா நடவடிக்கை எடுத்துள்ளார்.

யாழ் நகரப் பகுதியில் சுற்றுலாப்பணிகளின் வருகை அதிகரித்துள்ளது அதனடிப் படையில் யாழ்.சமூகத்துடன் கலந்துரையாடிய போது எமது வரலாற்று மன்னர்களின் சிலைகளை வைப்பதன் மூலம் வரலாற்று உண்மைகளை யாவருக்கும் காட்ட முடியும் என்ற நோக்கத்துடன் யாழ்ப்பாணத்தினை ஆட்சி செய்த மூன்று மனனர்களின் சிலைகளை நிறுவுவதற்கு யாழ்.மாநகர சபை நடவடிக்கையினை எடுத்துள்ளது.

இதன்படி யாழ்.மணிக்கூட்டுக் கோபுரத்தினை சுற்றியுள்ள மூன்று வளைவுகள் தற்போது யாழ்.மாநகர சபையினால் இடிக்கப் பட்டு அவ்விடத்தில் மன்னர்களின் சிலைகள் அமைப்பதற்காக தூண்கள் அமைக்கப் பட்டு மன்னர்களின் சிலைகள் அமைக்கப் படவுள்ளன.

இந்தச் சிலைகள் அமைக்கப்பட்டு அதன் திறப்பு விழா வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்த சுவாமி ஆலய கொடியேற்றத்தின் போது திறந்து வைக்கப்படவுள்ளதாக தெரிவித்துள்ளார். (செ-23)

## காளைகள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

இருபாலை கிழக்கு சிவன் கோயிலுக்கு அண்மையில் உள்ள வயல் வெளியில் கட்டப் பட்டிருந்த இரண்டு காளை மாடுகள் கடந்த 4 ஆம் திகதி திருட்டு போயுள்ளதாக மாட்டு உரிமையாளர் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது வரைக்கும் தமது காளை மாடுகள் பொலிஸாரினால் கண்டு பிடிக்கப்படவில்லை என உரிமையாளர் கவலை தெரிவித்துள்ளார்.

இதில்அதேயிடத்தைச்சேர்ந்தவினாசிசித்திரை நாதன் என்பரே இவ்வாறு முறைப்பாடு செய் துள்ளார். (செ)

# ஞாயிறுகளில் கடமைச்சுமை; நடவழிக்கை எடுக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அரச பொது விடுமுறை நாட்களிலும் வாரத்தில் வருகின்ற ஞாயிற்றுக் கிழமைகளிலும், மாணவர்களையும், ஆசிரியர்களையும் கல்வி அமைச்சின் சுற்று நிருபங்களுக்கு மாறாக கடமையில் ஈடுபடுத்துவோர் மீது கல்வி அமைச்சு கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள் ளது.

இது தொடர்பில் ஆசிரியர் சங்கம் விடுத் துள்ள பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

வாரத்தில் ஒரு நாள்தான் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் விடுமுறைநாளாகும். அந்நாளில்தான் அவர்கள் தமது சுய கடமைகளைச் செய்கின்ற ஓய்வுக்குரிய நாளுமாகும். அந்த நாட்களில் மாணவர்களை பாடசாலைக்கு அழைப்பதும், ஆசிரியர்களை கடமையில் ஈடுபடுத்துவதும் பல்வேறு துஷ்பிரயோகங்களுக்கு வழிவகுப்பதோடு மாணவர்களையும், ஆசிரியர்களையும் உளப் பாதிப்புக்களுக்கும் உள்ளாக்கும் செயற்பாடாகும்.

எனவே பொது விடுமுறை நாட்களில் இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று மத்திய கல்வி அமைச்சிடம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இதுபோன்ற அழைப்புக்களை விடுப் போர் மீது உரிய முறையில் புகார் அளித்தால் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வசதியாக இருக்குமென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (செ-4)


## தேவை

மிக்சர் பொதி செய்வதற்கு ஆட்கள் தேவை.

தொடர்புகளுக்கு:
0776042858

(C-7978)



## வாழ்க்கையில் வெறுப்பா?

பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள். இரகசியங்களைப் பேணுவோம்
காலை 9.00 - பி.ப 1.00

கைகொடுக்கும் நண்பர்கள்
104,4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
021 222 8117

(சி-7965)


## வட மாகாண கைத்தொழில் கண்காட்சியும் போட்டியும் - 2014

கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்யும் வடமாகாண உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக தேசிய அருங்கலைகள் பேரவையினாலும் புடவைக கைத்தொழில் திணைக்களத்தினாலும் தேசியமட்டத்தில் வருடாவருடம் கண்காட்சியும் போட்டியும் நடாத்தப்பட்டு வெற்றியாளர்களிற்கான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப் பட்டு வருகின்றன. அதற்கமைவாக இவ்வாண்டும் வடமாகாண கைத்தொழில் கண்காட்சியும் போட்டியும் வடமாகாண தொழிற்துறை திணைக்களத்தினால் நடாத்தப்பட்டு தெரிவு செய்யப்படுகின்ற ஆக்கங்கள் தேசியமட்ட போட்டிக்கு அனுப்பி வைக்கப்படுவதுடன் மாகாண மட்டத்தில் பரிசில்களு‌ம் சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன.

| | |
|---|---|
| இடம் :- | யாழ் மத்திய கல்லூரி |
| காலம் :- | 31.07.2014 - வியாழக்கிழமை |
| | 01.08.2014 - வெள்ளிக்கிழமை |
| நேரம் :- | காலை 9.00 மணிமுதல் - மாலை 5.00 மணிவரை |

பின்வரும் வகைகளின் கீழ் கைப்பணிகளை மேற்கொள்ளும் கைப்பணியாளர்கள் தங்கள் பிரதேச செயலகங்களில் உள்ள தொழிற்துறை திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்களை தொடர்பு கொண்டு அவர்கள் மூலமாக தங்கள் ஆக்கங்களை கையளிப்பதன் மூலம் கண்காட்சியில் பங்குபற்றி பயன் பெறுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

01,கைத்தறி நெசவு உற்பத்திகள்
02,களிமண் உற்பத்திகள்
03,தும்பு, ஓலை, புல் சார்ந்த உற்பத்திகள்
04,தும்பறை வடிவங்கள்(சணல், பருத்தி)
05, பிரம்பு, மூங்கில் குழாய் சார்ந்த உற பத்திகள்
06,உலோக கைப்பணிப்பொருட்கள்
07,ஆபரணங்கள்(உலோக,கற்பதித்த, நானாவித ஆபரணங்கள்)
08,முகமூடிகள் மற்றும் பாவைகள்
09,செதுக்கிய முகங்கள்
10,சங்கீத உபகரணங்கள்
11,துணிகள் மற்றும் துணிகளினாலான கைப்பணிப் பொருட்கள் (தையல் எம்புறொயிடர், இயந்திர எம்புறொயிடர், துணிகளில் வர்ணம், பெச்வேக், பாரம்பரிய துணி வேலைப்பாடு)
12,பட்டிக் (Batik)
13,ரேந்தை
14,வெண்கல மற்றும் சேசத்
15,மர உற்பத்திப் பொருட்கள்
16,தோற் பொருட்கள்
17,கற்கள் மூல கைப்பணிப் பொருட்கள்
18,பாரம்பரியக்கலை வரைபுகளும் சிற்பங்களும்
19,தென்னை,பனை சார்ந்த உற்பத்திகள
20,நானாவித கைப்பணிப் பொருட்கள் (கடதாசிப் பொருட்கள், பல்ப் சார்ந்த உறபத்திகள், மரத்தூள் பொருட்கள், சிப்பி ஓடுகள், பலதரப்பட்ட மூலப்பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட கைப் பணிப்பொருட்கள்)
21,நினைவுச்சின்னங்கள்

மேலதிக தகவல்களிற்கு பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

தொ.பே.இல: 0217538381
மின்னஞ்சல்: npinddept@gmail.com

தொழிற்துறை திணைக்களம்,
முதியோர் இல்ல வளாகம்,
கண்டி வீதி, கைதடி.

(சி-7983)


## உங்கள் ஆலய திருவிழாக்களில்...

அகில உலகப் புகழ் ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினரை அழைத்து மகிழ விரும்புகிறீர்களா? (30.07.2014 வரை)



தொடர்பு:- வில்லிசைச் சக்கரவர்த்தி கலைமாமணி, டாக்டர் எஸ். எஸ். சர்மா (குருஜி) சங்கானை, முருகமூர்த்தி கோவிலடி.

T.P.0777064247

(7048)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களைக் கொன்று குவித்துவிட்டு நீலிக்கண்ணீர் வடிக்கும் இனத் துரோகிகள்

## எதிர்த்தரப்பு மீது அஸ்வர் எம்.பி.தாக்குதல்; ஐ.தே.க.மீது இடி விழவேண்டும் எனவும் மன்றாட்டம்

கடந்த 1983 இல் கறை படிந்த ஜூலையை உருவாக்கி அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவித்து அவர்களின் சொத்துக்களை சூறையாடிய ஐக்கிய தேசியக் கட்சியினரோடு கூடிக்குலாவித்திரியும் தமிழினத் துரோகிகள் முஸ்லிம்களுக்காக நீலிக்கண்ணீர் வடிக்கத் தேவையில்லை. இவ்வாறு செயற்படுவதற்கு அவர்களுக்கு வெட்கமில்லையா? தமிழர்களைக் கொன்று குவித்த ஐ.தே.க. மீது இடி விழ வேண்டும் என்று ஆளும் கட்சி எம்.பி ஏ.எச்.எம். அஸ்வர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை அமர்வின் போது ஆளும் கட்சியின் சாந்த பண்டார எம்.பி.யினால் கொண்டு வரப்பட்ட 1983 இல் வேலை இழக்கச் செய்யப்பட்ட அரச ஊழியர்கள் தொடர்பிலான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த 1983 ஜூலையில் ஐக்கிய தேசியக் கட்சி தமிழ் மக்கள்மீது இனக்கலவரமொன்றை கட்டவிழ்த்துவிட்டு நாடு முழுவதும் தமிழ் மக்களைக்கொன்று குவித்தது. தமிழ் மக்களே அன்று இலக்கு வைக்கப்பட்டனர். அப்பாவித் தமிழ் மக்களின் வீடுகள், வர்த்தக நிலையங்கள் கொள்ளையிடப்பட்டன, அழிக்கப்பட்டன.

யாழ். பொது நூலகம் எரிக்கப்பட்டது. அன்று நடந்த இனப் படுகொலைக் கலவரத்தை அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன ஒரு வார்த்தையின் ஊடாக கட்டுபடுத்திருக்க முடியும். ஆனால், அதனை அவர் செய்யவில்லை. அப்படியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் இன்று கூடிக்குலாவிக் கொண்டிருக்கின்ற தமிழினத் துரோகிகளுக்கு வெட்கமில்லையா? நான் இந்த சபையில் தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்கும் போது யோகராஜன் இடையூறு செய்கிறார்.

தமிழினத் துரோகிகள் முஸ்லிம்களுக்காக இன்று நீலிக்கண்ணீர் வடிக்கின்றனர். இவர்களைப் பற்றி முஸ்லிம் சமூகம் நன்கு அறியும். மேலும் அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் மீது இடி விழ வேண்டும் என அவர் சபையில் ஆவேசமாக பேசினார். (6)

## என்னவொரு அழகு...



றம்புட்டான் சீசன் களை கட்டியிருக்கும் இவ்வேளை யாழ். ஆஸ்பத்திரி வீதியில் மக்களை ஈர்க்கும் வகையில் றம்புட்டான் பழங்களால் அலங்கரித்து வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவதைப் படத்தில் காணலாம்.

# குழு மோதலில் 7 பேர் படுகாயம்

யாழ்.இளவாலை வசந்த புரத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற குழு மோதலில் 7 பேர் படுகாயமடைந்து தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக இளவாலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இளவாலை, வசந்தபுரத்தைச் சேர்ந்தவர்களான மகேந்திரன் ரஞ்சித்ராஜ் (வயது 32), மகேந்திரன் அசோக்குமார் (வயது 30), மகேந்திரன் இராஜ்குமார் (வயது 28), மார்க்கண்டு கருணானந்தன் (வயது 21), ஆனந்தராசா கபிலன் (வயது 23), பூதப்பிள்ளை சுரேஸ்குமார் (வயது 31),இந்திரஜித் தவனேசன் (வயது 32) ஆகிய 7 பேருமே படுகாயமடைந்துள்ளனர்.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற உதைபந்தாட்டப் போட்டியொன்றில் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தினைத் தொடர்ந்து, வசந்தபுரத்தில் இந்த குழு மோதல் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தகவல் அறிந்து அவ்விடத்திற்குச் சென்று குழுச் சண்டையினைக்கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், இது தொடர்பில் இதுவரையில் எவரும் கைது செய்யப்படவில்லையெனவும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் இளவாலைப் பொலிஸார் தெரிவித்தனர். (6-4)

# மாட்டிறைச்சியுடன் நால்வர் கைதாகினர்

யாழ். கொடிகாமம், விடத்தல் பளைப பகுதியில் திருடிய மாட்டினை இறைச்சியாக்கி, அதனை யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வந்த சந்தேகத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நால்வரை கொடிகாமம் பகுதியில் வைத்து நேற்றுக் காலையில் கைது செய்ததாக கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், சந்தேகநபர்களிடமிருந்து 30 கிலோ இறைச்சியினையும் கைப்பற்றியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொட்டடி, ஐந்து சந்தி, பழம்வீதி ஆகிய இடங்களைச் சேர்ந்த 18, 19, 22 மற்றும் 25 வயதுடைய நான்கு சந்தேகநபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி சந்தேகநபர்கள், விடத்தல் பளைப் பகுதியில் மேய்ச்சலுக்கு நின்றிருந்த மாட்டினை திருடி அதனை அப்பகுதியிலுள்ள வயல் வெளியில் வைத்து இறைச்சியாக்கியுள்ளனர்.

இந்நிலையில், இந்த விடயத்தினை அப்பகுதி பொதுமக்கள் கொடிகாமம் பொலிஸாரிற்குத் தெரியப்படுத்தியதை அடுத்து, வடி வாகனத்தின் இலக்கத்தினை வைத்து, சந்தேகநபர்கள் நால்வரையும் கைது செய்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். (6)

# அரச சார்பற்ற நிறுவனங்களால் பாதுகாப்புக்கு கடும் அச்சுறுத்தல்

நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்லான எந்தவொரு விடயத்திற்கும் பாதுகாப்பு அமைச்சு இடம் கொடுக்காது. நாட்டில் இயங்கிக் கொண்டிருக்கும் முக்கிய சில அரச சார்பற்ற நிறுவனங்கள் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகவே செயற்படுகின்றன எனவே, அவற்றை கட்டுப்படுத்த வேண்டிய தேவை எமக்கு உள்ளது என தெரிவிக்கும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய இலங்கையின் சட்டதிட்டங்களை மீறி நாட்டுக்குள் எவரும் செயற்பட முடியாது எனவும் சுட்டிக்காட்டினார்.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடக மையத்தில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்..

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் தேசிய பாதுகாப்பு விடயத்தில் நாம் மிகவும் கவனமாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம். அதேபோல் தேசிய பாதுகாப்பினை சீரழிக்கும் வகையிலும் ஒரு சிலர் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். எனவே, அவர்கள் இவற்றினை ஏன் செய்கின்றனர் என்பது அண்மைய சம்பவங்களின் மூலம் தெளிவாக தெரிந்திருக்கும். அரச சார்பற்ற நிறுவனங்களை சேர்ந்த பலர் ஏன் போராடுகின்றனர் என்பது புதிதாக சொல்ல வேண்டிய விடயமும் இல்லை. இன்று சர்வதேச கூலியாட்கள் பலர் இலங்கைக்குள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். சர்வதேசத்தின் தேவையினைப் பூர்த்தி செய்ய இவர்கள் அந்த அமைப்புகளுக்கு விசுவாசமாகவும் செயற்படுகின்றனர். நாம் எவ்வாறு நாட்டை பாதுகாக்க முயற்சிகளை எடுக்கின்றோமோ அதே போல் தேசிய பாதுகாப்பினை மீறும் வகையில் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (6)

# நிறைவு நாள் நிகழ்வு

வட மாகாணக் கல்வித் திணைகளம் சோலைக்குயில் அவைக்காற்றுக்களம் இணைந்து உளவளத் துணை ஆசிரியர்களுக்கான அறிகை முறைமைகள் சார் விசேட பயிற்சி நெறியை நடத்தி வருகின்றது.

இதற்கமைய இதன் நிறைவு நாள நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை வட மாகாண கல்வித் திணைக்கள கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

மாலை 3.30 மணியளவில் திருமதி கோகிலா மகேந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் தயா சோமசுந்தரம் மற்றும் மாகாணக் கல்விப்பணிப்பாளர் இ.இராஜேந்திரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினராக வைத்திய கலாநிதி முல்லை பரமேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

பயிற்சிநெறியில் கலந்து கொண்டவர்களுக்கான சான்றிதழ்களும் இதன்போது வழங்கப்படவுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (6-23)

# இன்றைய இராசி பலன்

25.07.2014

(ஆடி 09,வெள்ளிக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு

சதுர்த்தசி பின்னிரவு 2.51 மணிவரை

திருவாதிரை பிற்பகல் 2.09 மணிவரை

இராகுகாலம் 10.32- 12.02 மணிவரை

சுபநேரம் 6.02- 7.32 மணிவரை

வளவன்

**மேடம்:** தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைப்பீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்கா[கும்], ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**இடபம்:** வருமானம் திருப்தி தரும், அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள் செய்தொழில் மேன்மையுண்டு புதிய முயற்சியொன்றில் ஆர்வ[ம்] காட்டுவீர்கள்.

**மிதுனம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்கள் தகுதியை உயர்த்தும், மனதில் இனம் புரியாத சிந்தனைகள் தோன்றும், போசன சுகமுண்டு.

**கடகம்:** அன்றாடப் பணிகள் நன்றாக நடைபெற ஆவனசெய்வீர்கள் (illegible) பீர்கள், அலைச்சல்களால் மனச் சோர்வு ஏற்படலாம், சுப செலவுகள் அதிகரிக்கும், உஷ்ண சம்பந்தமான ரோக நிலையுண்டு.

**சிம்மம்:** தொலைபேசி வழியில் சந்தோசம் தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வருமானம் திருப்தி தரும்.

**கன்னி:** உங்களின் திறமைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**துலாம்:** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், தடைகளைத் தகர்த்தெறிந்து தன்னிறைவு காணும் நாள், விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், எதிர்பாராத பயணங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்:** குடும்பப் பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பதன் மூலம் மனநிம்மதி ஏற்படும், எடுத்த காரியங்களை முடிப்பதில் சில சிரமங்கள் ஏற்படலாம்.

**தனுசு:** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், வராத உறவினர்கள் உங்கள் வீடுகளுக்கு திடீரென வரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மகரம்:** நாவன்மையால் நல்ல பெயர் எடுப்பீர்கள், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், தொழிலில் ஆர்வத்துடன் செயற்படுவீர்கள் உடல் நலம் சீராகும்.

**கும்பம்:** பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடையும் நாள், புதிய முதலீடுகள் செய்வது பற்றி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், அரச கருமங்கள் நன்மை தரும்.

**மீனம்:** மனதில் இனம்புரியாத சந்தேசம் குடிகொள்ளும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள் சுபகாரிய செலவுகள் அதிரிக்கும், முயற்சிகளில் அதிக பி[ரி]யாசை காட்டுவீர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்ற அமர்வை யாழ்.இளைஞர் புறக்கணிப்பு

யாழ் மாவட்டத்தினைச் சேர்ந்த இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்கள் நாளை சனிக் கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமையும் இடம் பெறவுள்ள இளைஞர் பாராளுமன்ற 9ஆவது அமர்வைப் புறக்க ணிக்கவுள்ளனர்.

கம்பஹாவில் இடம்பெற்ற 26 ஆவது இளைஞர் விளையாட்டுப் போட்டிகளின் ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் யாழ் மாவட்ட அணியினர் தாக்கப்பட்டமை வீரர்களு க்கு இடையூறு விளைவித்தமை, கீழ்த்தரமாக அம்பாந்தோட்டை மாவட்ட அணி நடந்து கொண்ட மைக்கு கண்டனம் தெரிவித்தும் தாக்கியவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரியுமே இளைஞர் பாராளுமன்ற அமர்வு களைப் புறக்கணிக்கவுள்ளனர்.

நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ்ப்பாணக் காரியாலயத்தில் இடம் பெற்ற கூட்டத்தின் போதே இம் முடிவு எடுக்க ப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான கடிதங்கள் இளைஞர் விவகார திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும, தேசிய இளைஞர் சேவைகள் மன்ற பணிப்பாளர் நாயகம் லலித் பியூம் பெரேரா உள்ளிட்டவ ர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட இளைஞர் பாராளுமன்ற உறுப பினர்கள் தெரிவித்தனர். (6-23)



நன்றி-அததெரண

# தந்தையும் மகனும் விபத்தில் சிக்கினர்

யாழ்.சுன்னாகம் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக முச்சக்கரவண்டியும் மோட்டார் சைக்கிளும் மோதிக் கொண்டதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் தெல்லிப்பழை மற்றும் யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு அனுமதிக்கப்பட்டுள்ளதாக சுன் னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியைச் சேர்ந்த 49 வயதுடைய கருணானந்தம் விஜயேந்திரன். அவரது மகனான 9 வயதுடைய விஜயேந்திரன் துசாந்த ஆகிய இருவருமே இவ்விபத்தில் படுகாய மடைந்தனர்.

வியாபார நிலையம் ஒன்றில் இருந்து, பிரதான வீதிக்கு செல்ல மோட்டார் சைக்கிளில் சென்ற போதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் படுகாயமடைந்த இருவரும் முதலில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்ட போதும், மகன் மேலதிக சிகிச் சைகளுக்காக யாழ்.போதனா வைத் தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இவ்விபத்து தொடர்பிலான விசார ணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (6)

# மாநகர மக்களது நலனைக் கருத்திற்கொண்டு வீடுகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை

(மானிப்பாய்)

யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் இந்தியன் வீட்டுத் திட்டத் திற்கு தெரிவான மக்களது நலனைக் கருத்திற்கொண்டு விரைவில் வீட் டினை பெற்றுக்கொடுக்க நடவடிககை எடுக்கப்பட்டு வருவதாக முதல்வர் - திருமதி யோகேஸ்வரி பற்குண ராசா தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபையின் விசேட கூட்டம் நேற்று முன்தினம் மாந கர சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதன்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களது நலனைக் கருத்திற் கொண்டு விரைவில் வீட்டினைக் கட்டி முடிக்க யாழ். மாநகர சபை நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றது.

அதன்படி யாழ். மாநகரசபை க்கு உட்பட்ட பகுதிக ளில் 334 பேர் இந்தியன் வீட்டுத் திட்டத்திற்கு தெரிவாகியுள்ளனர். எனினும் அவர்களில் 36 பேர் மட்டுமே தங்களுடைய ஆவணங்களை எம்மிடம் ஒப்படைத்துள்ளனர். ஏனையவர்களும் மிக விரைவில் தங்களது ஆவணங்களை சமர்ப் பிக்க வேண்டும்.

அதன்படி இந்தியன் வீட்டுத்திட் டம் 650 சதுர அடியிலேயே அமைக் கப்படுகின்றது.

அதனை அமைப்பதற்கான படத் தினை வரைய ஒரு சதுர அடிக்கு 8 ரூபா வீதம் வழங்க சபையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும் குறித்த படவரைஞர்கள் வீடுகள் அமையவுள்ள பகுதிகளு க்கு சென்று படங்களை வரைய வேண்டும். இதற்காக அவர்களு க்கு கொடுப்பனவுகளும் வழங்கப்ப டும் என அவர் மேலும் தெரிவித் துள்ளார். (6-23)



வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சி.சிறிதரன் , சுரேஸ் பிரேமச்சந்திரன், ஈ. சரவணபவன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் அண்மையில் மண்டைதீவுக்கு விஜயம் செய்த போது மண்டைதீவு திருவண்காடு சித்தி விநாயகர் ஆலயத்தில் வழிபாடு செய்தனர்.

ஆலய அறங்காவலர் பொ.வி. திருநாவுக்கரசுடன் வடக்கு மாகாண முதல்வர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம்.

# வில்லூன்றியில் ஆடி அமாவாசை

யாழ்ப்பாணம் வில்லூன்றி புனித தீர்த்தத்தில் ஆடி அமாவாசை நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை வழமை போல் இம் முறையும் சிறப்பாக நடைபெற வுள்ளது. வில்லூன்றி விநாயகராலயத் தில் அதிகாலை விசேட அபிஷேக பூசை களும் காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் இடம்பெறும்.

காலை 8 மணிக்கு வில்லூ ன்றி புனித தீர்த்தத்தில் தீர்த்தவாரி நடை பெற்றபின் பொதுமக்கள் அமாவாசை தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமா டவும் பிதிர்த் தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்ப ட்டுள்ளது. (6)




# கலாசார ஆடையுடன் நல்லூருக்கு வாருங்கள்

## யாழ்.மாநகர முதல்வர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்திற்கு வரும் பொதுமக்கள் இந்துக் கலா சார ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ஆடைகளை அணிந்து ஆலய தரிச னத்திற்கு வாருங்கள் என யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகே ஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

நல்லூர் கந்தசுவாமி ஆலய த்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முத லாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளை யும் யாழ். மாநகரசபை வழமை போன்று மக்களின் கருத்தினை யும் உள்வாங்கி மேற்கொண்டு ள்ளது.

அத்துடன், ஆலயத்தில் இடம் பெறும் திருட்டுக்கள், தொல்லை களை தவிர்த்து பொதுமக்கள் சுதந்திரமாக வழிபாடுகளை மேற் கொள்வதற்காக பொலிஸார் கட மையில் ஈடுபடவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (6)

# மின் தடை அறிவித்தல்

உயர் அழுத்த தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக் கிழமை காலை 8.30 மணியி லிருந்து மாலை 5.30 மணி வரை இளவாலை, மாதகல், பண்டத்தரிப்பு, பண்ணாகம், சுழிபுரம், வடலி யடைப்பு, இடும்பன், தொல்புரம், சில்லாலை, சாந்தை, சுன்னாகம், கந்தரோடை, மல்லாகம், கல்லாரை, ஏழாலை, அளவெட்டி, தெல்லிப்பழை, பன்னாலை, சிறுவிளான் ஆகிய பிரதேசங்களிலும் நாளை மறு தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை கொத்தியாலடி சுடலையிருந்து சுன்னாகம் சந்தி வரை, மலப்பை, சூராவத்தை, சுன்னாகம் சிவன் கோவிலடி, சங்கானை நகரப் பகுதி, தொட்டி லடி, மாகியப்பிட்டி, விளான், பண்டத் தரிப்பு, அளவெட்டி மேற்கு, தெற்கு, சண்டிலிப்பாய் இரட்டையப்புல வைரவர் கோவிலடி, தலங்காவில், திருநெல்வேலி, பரமேஸ்வரா சந்தி, கந்தர்மடம், இலுப்பையடி, ஆரிய குளம், ஸ்ரான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதியின் ஒரு பகுதி, பருத்தித்துறை வீதியின் ஒரு பகுதி ஆகிய பிரதே சங்களிலும் எதிர்வரும் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை பளை, எழுது மட்டுவாழ், ஆசைப்பிள்ளை ஏற்றம், படித்த மகளிர் குடியேற்றத்திட்டம், கரம்பகம், முகமாலை ஆகிய இட ங்களிலும் மின் விநியோகம் தடை ப்பட்டிருக்கும் என யாழ்.மின் பொறி யியலாளர் அறிவித்துள்ளார். (6)

# பரிசளிப்பு விழா

கொமர்சல் வங்கியின் சாவகச்சேரி கிளையின் அருணலு பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு வங்கி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் வங்கி கிளையில் அருணலு கணக்கில் இணைந்துள்ள ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை யில் அதி உச்ச புள்ளிகள் பெற்ற 20 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். (6-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படகில் செல்லும் ஈழ அகதிகள்; இந்தியா-அவுஸ்.பேச்சுவார்த்தை

அவுஸ்திரேலிய குடிவரவுத் துறை அமைச்சர் ஸ்கொட் மொரிசன் தமது முதலாவது உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இந்தியா சென்றுள்ளார். .

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ் மற்றும் உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்த சந்திப்பின் போது அவுஸ்திரேலியாவிற்கு சட்டவிரோதமாக 157 இலங்கை தமிழ் அகதிகளுடன் சென்ற படகு குறித்து பேச்சுவார்தை நடத்தப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய விசாரணையாளர்கள் மூலம் இலங்கை தமிழர்களுடனான இந்த படகு இந்தியாவில் இருந்து புறப்பட்டமை தெரியவந்துள்ளதாக ஸ்கொட் மொரிசன் இந்திய தரப்பினருக்கு தெரிவித்துள்ளார்.

இந்திய பிரதமர் மோடி பதவியேற்றதன் பின்னர் இந்திய மற்றும் அவுஸ்திரேலியாவுக்கு இடையேயான உயர்மட்ட சந்திப்பு இதுவென தெரிவிக்கப்படுகிறது.

சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள 157 தமிழ் அகதிகளை ஏற்றுக் கொள்ள அவுஸ்திரேலியா மறுத்து வருகின்றது.

அவுஸ்திரேலியாவுக்குச் செல்லும் வழியில் சர்வதேச நீர்ப்பரப்பில் இவர்கள் தடுக்கப்பட்டதனால் சர்வதேச சட்டங்களுக்கு அமைய அவர்களின் சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட வேண்டும் என்று அவுஸ்திரேலிய அரசாங்கம் தெரிவித்து வருகின்றது.

இந்த நிலையில், இலங்கை, ஆப்கானிஸ்தான், இந்தோனேசியா போன்ற நாடுகளில் இருந்து அவுஸ்திரேலியா செல்லும் அகதிகளின் எண்ணிக்கை பாரிய அளவில் அதிகரித்துள்ளதன் காரணமாக, அவுஸ்திரேலிய கடற்படையினர் தமது ரோந்து நடவடிக்கைகளை அதிகரித்துள்ளனர்.

அண்மைய காலத்தில் 41 சட்டவிரோத படகுகளை, இலங்கைக்கு அவுஸ்திரேலியா திருப்பி அனுப்பி வைத்துள்ளதாக அவுஸ்திரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (6)

## சம்பிக்கவின் பேஸ்புக் அவுட்

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் உறுப்பினர் மற்றும் தொழில்நுட்ப ஆய்வு அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் பேஸ்புக் கணக்கு செயலிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தமக்கு எவ்வித அறிவித்தல்களும்வழங்காது பேஸ்புக்கணக்கை முடக்கியுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தனது பேஸ்புக் கணக்கில் இருபத்தொறாயிரம் நண்பர்கள் இணைந்து கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். கணக்கு செயலிழந்துள்ளமை குறித்து பேஸ்புக் நிறுவனத்திடம் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். என்ன காரணத்திற்காக கணக்கு செயலிழக்கச் செய்யப்பட்டது என்பது குறித்த தகவல்களை பின்னர் அறிவிப்பதாக பேஸ்புக் நிறுவன்ம் தெரிவித்துள்ளது.

தமது பேஸ்புக் கணக்கை திட்ட மிட்டு முடக்க சிலர் முயற்சித்துள்ளதாக கருதுவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (6)


## ஆயுள்வேத வைத்தியர்களினதும் மக்களினதும் கவனத்திற்கு!

❖நீங்கள் முகப்பரு, சூரிய வெப்பத்தால் ஏற்படும் வறட்சி, சரும வியாதி, இளநரை, முடி உதிர்வு, பொடுகு, வாதம், கைகால் விறைப்பு, மூட்டுவலி, முதுகுவலி, இடுப்பு வலி, சொறி, சிரங்கு, தொடை இடுக் குகளில் வரும் சிரங்கு என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

❖இந்நோய்களுக்கு பல வழிமுறைகளிலும் தீர்வு தேடிச் சலித்து விட்டீர்களா? இந்நோய்களுக்கான தீர்வாக ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட தைலங்கள், மூலிகைப் பவுடர்கள் எம்மிடம் உண்டு.

### ஆயுள்வேத வைத்தியர்களின் கவனத்திற்கு!

❖எம்மிடம் நீரிழிவு, கொலஸ்ரோல், இரத்த அழுத்தம், நரம்புத் தளர்ச்சி, சளி, வறட்சி, இருமல், மலச்சிக்கல், வெள்ளை படுதல், மாதவி டாய்கால அதிக உதிரப்போக்கு, பாலியல் பிரச்சினை, இழுப்பு, சிறுநீர்க் கோளாறு, வாதம் போன்ற பல வகை நோய்களுக்குரிய அரிஷ்ட ஆசவங்கள், குவாதங்கள், சூரணங்கள், குளிகைகள், சிறப்வகைகளைமிகக்குறைந்தவிலையில்பெற்றுக்கொள்ளலாம்.

❖மற்றும் தரமான பஸ்பங்கள், செந்தூரங்கள், கோரோசனை மாத்திரைகள், கஸ்தூரி மாத்திரைகள், பாலசஞ்சீவி பேதிக் குளிகைகள் போன்றவற்றை மிகக்குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

### எதிர்காலத்தில் "பைபாஸ்" செய்வதை தற்போதே தவிருங்கள்!!!

❖இருதய நோய்கள் (பைபாஸ் செய்யாது குணமாவதற்கும்), உயர் இரத்த அழுத்தத்தைத் தடுத்து இரத்தத்திலுள்ள கொழுப்பைக் கரைத்து இரத்த நாளங்களை சுத்தப்படுத்துவதற்கும், புற்றுநோய் பரவுவதைத் தடுப்பதற்கும், சிறுநீர்ப்பையில் கல் போன்ற பலவகை நோய்களைக் குண மாக்குவதற்கும் உரிய மருந்து எம்மிடம் உண்டு (இம் மருந்து அமெரிக்கா உணவு மற்றும் ஔஷத அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்டது)

நீங்கள் நாடவேண்டிய இடம்:
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திர சந்திக்கு அருகில்)
தொலைபேசி:- 021 222 2567

(சி-7952)


## வலிகாமம் தெற்கு பிரதேச சபை

වලිකාමම් දකුණ ප්‍රාදේශීය සභාව

VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA

CHUNNAKAM

My No :Np/14/41(15)/03/06/07 Date: 23.07.2014.

### பகிரங்க ஏலவிற்பனை அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்குரிய பின்வரும் பாவித்த பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

- காலம் : 04.08.2014 திங்கட்கிழமை காலை 10.00 மணி
- இடம் : உடுவில் உப அலுவலகம் மருதனார்மடம்
- பொருட்கள் :

Computer set, Rack ,Wheel barrow, Tube light set, antenna, fan, JMC பிக்கப் உதிரிப்பாகங்கள், கதிரைகள், ' கூரை, மின்விசிறி, பாவித்த வாகன பற்றறிகள், பாவித்த ரக்டர் ரயர்கள், ரியூப்கள், மேசைத் தராசு கம்பூட்ஸ், ஓடுகள், பிக்கப் வாகன உடல் (Body) மர இறாக்கை, தட்டச்சு பொறி, இலக்கமிடும் பொறி, யன்னல்கள் நிலையோடு, கதவு நிலையோடு, பழைய மரங்கள், பழைய இரும்புகள்,

**நிபந்தனைகள்**

1.ஏலதாரராகக் கலந்துகொள்பவர் ரூபா 100.00 (NBT தவிர) மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக செலுத்த வேண்டும்.

2.சித்தியடைந்த ஏலதாரர் அன்றைய தினமே ஒப்புக்கொண்ட ஏலத்தொகையின் முழுத்தொகையினையும் செலுத்திப் பொருட்களை அலுவலகத்திலிருந்து அகற்றுதல் வேண்டும்.

3.28.07..2014 தொடக்கம் 01.08.2014 வரை அலுவலக நேரத்தில் (காலை 8.30 முதல் மாலை 4.15) உடுவில் உப அலுவலகத்தில் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும். மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் தொலைபேசி இலக்கம் - 0212240017 இல் தொடர்பு கொள்ளலாம்.

4. மேலதிக நிபந்தனைகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.

தி.பிரகாஷ்,
தவிசாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

(சி-7979)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை கலைப்பீடம் பல்கலைக்கழக அனுமதி -2013/2014

*மொழி பெயர்ப்புக் கற்கை நெறிக்கான தகுதிகாண் பரீட்சை*

*(03.08.2014 காலை 9.00am-12.00pm)*

மேற்படி பரீட்சை 03.08.2014 ஆம் திகதி நடைபெறும் கீழ்க்கண்டவாறு பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

| பரீட்சை நடைபெறும் இடம் | | பரீட்சார்த்திகளின் வதிவிட மாவட்டம் |
|---|---|---|
| 1. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (திருநெல்வேலி) | | யாழ்ப்பாணம்,முல்லைத்தீவு,கிளிநொச்சி,மன்னார் |
| 2.யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகம் (வவுனியா) | வியாபார கற்கைகள் பீடம் வவுனியா வளாகம் , மன்னார் வீதி, பம்மைமடு, வவுனியா | வவுனியா,குருநாகல், அனுராதபுரம் |
| | கலையரங்கம், வவுனியா வளாகம், பூங்காவீதி, வவுனியா | சிலாபம், கொழும்பு, காலி, கம்பஹா, களுத்துறை, கண்டி, கேகாலை, இரத்தினபுரி |
| | விரிவுரை மண்டபம், பிரயோக விஞ்ஞானபீடம், வவுனியா வளாகம், குருமன்காடு, வவுனியா | மாத்தளை, மாத்தறை, நுவரெலியா, பொலநறுவை |
| | விரிவுரை மண்டபம்-05, பிரயோக விஞ்ஞானபீடம், வவுனியா வளாகம், வவுனியா | புத்தளம் |
| 3.மட்டக்களப்பு | சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கை நிறுவகம் | திருகோணமலை, அம்பாறை, பதுளை, மொனராகலை |
| | கிழக்குப் பல்கலைக்கழகம் | மட்டக்களப்பு |

மாணவர்களுக்கான பரீட்சை மண்டப விபரங்கள் அனுமதி அட்டையில் குறிப்பிடப்பட்டு 3ஆம் திகதி நடைபெறும் பரீட்சைக்கு தபாலில் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளன. மேலதிக தகவல்களுக்கு கீழ்க்கண்ட தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

மின்னஞ்சல்:uj.registrar@gmail.com
தொலைபேசி இலக்கம்: 021 222 6714

பதிவாளர்
யாழ்.பல்கலைக்கழகம்

(சி-7980)


## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 33.5<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L / கட்டாரில் வேலை<br>தொ.இ: B/1641 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 1<br>கி.பா: 98.5 சூரி செவ் 1 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: கல்வியியற் கல்லூரி ஆசிரியர்<br>தொ.இ: G/2354 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 3<br>கி.பா: 21.75 செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BSc IT, MSc / Team Leader (UK)<br>எதிர்பார்ப்பு: PR உள்ள பெண்<br>தொ.இ: B/1642 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 2<br>கி.பா: 26<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: Fisheries, BA<br>தொ.இ: G/2357 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 4<br>கி.பா: 39.5 சூரி செவ் 12 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L / சொந்த வியாபாரம்<br>தொ.இ: B/1644 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 4<br>கி.பா: 48<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: CIMA / கணக்காளர்<br>தொ.இ: G/2361 |
| பிறப்பு: 1969 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 3<br>கி.பா: 33<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: Dip. in Computer (UK – PR)<br>தொ.இ: B/1649 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>கி.பா: 29.5<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: HNDA / வரவேற்பாளர், காசாளர்<br>தொ.இ: G/2362 |

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த ஆயுதங்கள் வேண்டுமென கோரிக்கை

(கொழும்பு)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மதுவரித் திணைக்கள அலுவலர்களின் பாதுகாப்புக்கு, ஆயுதங்கள் தேவையென மதுவரித் திணைக்கள தலைமை அலுவலகத்திடம் கோரிக்கையை முன்வைத்துள்ளதாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மதுவரித் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவடடத்திற்கு ஒரு மதுவரித் திணைக்களம் மட்டும் உள்ளது.

இந்நிலையில், இரண்டு மாவட்டங்களிலும் நிலவும் குற்றச் செயல்கள் தொடர்பில் மதுவரித் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கும் போது, அச்சுறுத்தல்களிற்கு உள்ளாகும் நிலைகள் ஏற்படுகின்றன.

அத்துடன், மதுவரித் திணைக்களத்தனரின் நடவடிக்கையின் போது பொலிஸாரினையும் அழைத்துச் செல்ல முடியாத நிலையிருக்கின்றது.

இதனால், அலுவலர்களின் பாதுகாப்பிற்கு ஆயுதங்கள் பயன்படுத்த அனுமதி வழங்கி ஆயுதங்களை வழங்கும் படி திணைக்களத்தினர் தலைமை அலுவலகத்திடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

இது தொடர்பில் அண்மையில் நடந்த கண்டாவளைப் பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டத்திலும் தெரிவித்திருந்ததாக திணைக்களத்தினர் மேலும் தெரிவித்தனர். (6)

# ரயில் மோதியதில் 8 பேர் காயம்

வனவாசல ரயில் நிலையத்திற்கு அருகில் மரண ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்கள் மீது ரயில் மோதியதில் சுமார் 8 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்தவர்கள், ராகமை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பளையிலிருந்து கொழும்பு நோக்கி பயணத்த ரயிலே இவ்வாறு, நேற்று பிற்பகல் 1.25 மணியளவில் வனவாசல ரயில் நிலையத்திற்கு அருகில் வைத்து மரண ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்கள் மீது மோதியுள்ளது.

இச்சம்பவத்தில், இரண்டு முச்சக்கர வண்டிகளில் பயணித்த ஐவரும் பாதசாரிகளும் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனால், கொழும்பு நோக்கி பயணிக்கும் ரயில் போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே கட்டுப்பாட்டறை தெரிவித்துள்ளது. (6)



அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டியின் திறனாய்வுப் போட்டியில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவியான சிந்துஜா பிரேமகுமாரன் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தினைப் பெற்று தங்கப்பதக்கத்தினை பெற்றுக் கொண்டுள்ளார்.

# 1008 சங்காபிஷேகம்

ஆவரங்கால் மேற்கு சர்வோதய வீதி திருவருள்மிகு ஞான வைரவர் திருக்கோவில் சங்காபிஷேகப் பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதன்போது 1008 சங்குகள் வைத்து சங்காபிஷேகம் இடம்பெறும். அத்துடன் மாலை 4 மணிக்கு வைரவர் வழிபாடு, தொடர்ந்து கிராமிய கலை நடனத்தோடு முத்துச் சப்பற கிராம ஊர்வலம் இடம்பெறவுள்ளது.

இரவு 7 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகம் இடம்பெற்று தொடர்ந்து இலங்கை, இந்தியா தலை சிறந்த தவில், நாதஸ்வர வித்துவான்களோடு இணைந்த இந்திய நாட்டுப் பெண்மணியான ஐஸ்வர்யாவும் தவில் வித்துவானாக கலந்து கொள்ளவுள்ளார்.

அத்துடன் அச்சுவேலியூர் தம்பிநாதன் குழுவினரின் கிருஷ்ணா வில்லுப்பாட்டுக்குழுவினர் வழங்கும் வள்ளி திருமண வில்லிசை நிகழ்வு இடம்பெறவுள்ளது. (6-134)

# மாநகர சபை உதவி

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் வைத்து அடித்து கொலை செய்யப்பட்ட சென். பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவன் அமலனின் குடும்பத்தினருக்கு மனிதாபிமான அடிப்படையில் யாழ். மாநகர சபை வீடுகட்டுவதற்கு உதவிகளை வழங்கியுள்ளது.

யாழ்.மாநகர சபையின் விசேட கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. சபைக்கு தெரியப்படுத்தும் முகமாக முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா இந்த அறிவிப்பினை சபையில் விடுத்திருந்தார்.

அமலனின் குடும்பத்தினர் மிகவும் வறுமையில் வாழ்ந்து வருகின்றனர். வீட்டினைக் கட்டி முடிப்பதற்கு உதவி செய்யுமாறு யாழ். மாநகர சபையிடம் கேட்டிருந்தனர்.

அதனையடுத்து மனிதாபிமான அடிப்படையில் வீட்டினைக் கட்டி முடிப்பதற்கு 10 பை சீமெந்தினை யாழ். மாநகரசபை வழங்கியுள்ளது.


எனவே அவர்களால் வீடு கட்டி முடிக்கப்பட்டதும் மாநகர சபையினர் நேரில் சென்று பார்வையிட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (6)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 500 |
| தக்காளி | 120 | 140 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 60 |
| கோவா | 100 | 150 | 120 |
| கரட் | 170 | 160 | 200 |
| பூசணி | 40 | 50 | 60 |
| புடோல் | 60 | 40 | 80 |
| வாழைக்காய் | 90 | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 60 | 80 | 80 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 150 | 180 | 140 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | 100 |
| பயற்றங்காய் | 60 | 160 | 100 |
| லீக்ஸ் | 60 | 80 | 80 |
| பீற்றூட் | 100 | 100 | 120 |
| கறிமிளகாய் | 290 | 250 | 200 |
| முருங்கைக்காய் | 20 | 50 | 80 |
| போஞ்சி | 130 | 160 | 150 |
| கத்தரிதம்புள்ள | 40 | 80 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 25 |
| தேசிக்காய் | 30 | 40 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 | 25-30 |
| இராசவள்ளி | 100 | 100 | 100 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like (85)

பி.ஜே கேமன்





விக்னேஸ் மாது




தீபன் சற்குணம்




பசங்கள நல்லவனா இருக்க விடுங்கடி




இ்ராசி என்கின்ற இராமநாதன் சிந்துஜன்




கிரி சிவராஜா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாட்டில் தலையிடும் அதிகாரம் புலனாய்வுத் துறைக்கில்லை

## பாராளுமன்றில் எதிர்க்கட்சி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் தொண்டர் நிறுவனங்களின் பதிவு தொடர்பான 1980 ஆம ஆண்டின் சட்டத்திற்கமைய அந் நிறுவனங்கள் அதன் விடயதானத்திற்கும் கொள்கைக்கும் அப்பால் சென்று செயற்படுவது சட்ட விரோதமாக்கப்படவில்லையென்று எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அத்தோடு அரசசார்பற்ற நிறுவனங்கள் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு புலனாய்வுத் துறையினருக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை 23 இன் கீழ் இரண்டின் கீழ் தாம் எழுப்பிய கேள்விக்கு பிரதமர் டி.எம். ஜயரத்ன பதிலளித்த பின்னர் மீண்டுமொரு முறை தெளிவுபடுத்தக் கோரி உரையாற்றிய போதே எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.



பிரதமர் பதிலளித்து வழங்கிய அறிக்கை குறித்து நான் கவலைப்படுகின்றேன். 1980 ஆம் ஆண்டின் அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் பற்றிய சட்டத்தின் பிரகாரம் அரச சார்பற்ற நிறுவனங்கள் அவற்றின் விடயப் பரப்புக்கு அப்பால் சென்று செயற்படுவது சட்டவிரோதமாக்கப்படவில்லை.

இவை ஒழுங்கு விதிகளை மீறியிருந்தால் அது தொடர்பில் ஒழுங்கு விதிகளுக்கு அமைய செயற்பட முடியும்.

அதுவும் ஆணையாளர் அல்லது பதிவாளரினால் மட்டும் தான் அது தொடர்பில் செயற்பட முடியும். இவ்வாறான நிலைமையில் புலனாய்வுத்துறையினர் செயற்பட முடிந்த சட்டம் பற்றி பிரதமர் எதுவும் கூறவில்லை.

வருமான வரி செலுத்தல் மீறப்பட்டிருந்தால் வருமான வரித் திணைக்களத்தாலும் தீர்வை வரி விடயங்கள் மீறப்பட்டிருந்தால் சுங்கத் தீர்வை திணைக்களத்தினாலும் செயற்பட முடியும்.

ஆனால், புலனாய்வுத் துறையினர் செயற்படமுடிந்த எந்தவொரு சட்டத்தையும் பிரதமர் கூறவில்லை.

புலனாய்வுத் துறையினர் அவ்வாறு செயற்படுவதற்கு எந்தச் சட்டத்திலும் அதிகாரம் அளிக்கப்படவில்லை.

பயங்கரவாதம் தொடர்பாக செயற்பட்டிருந்தால் புலனாய்வுத் துறையினர் அது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சுக்கு அறிக்கைகள் வழங்க முடியும். அத்துடன் கல்விக்கு உதவும் தொண்டர் நிறுவனமொன்று விவசாயத்துக்கு உதவினால் அது விடயத்திற்கு அப்பால் செல்வதாக அர்த்தப்பட்டு விடாது. அத்தோடு இதுவொரு பாரிய விவகாரமும் கிடையாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (6)

## மனு தள்ளுபடி

ஊவா மாகாண சபைக்காக பதுளை மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்படுகின்ற உறுப்பினர்களின எண்ணிக்கையை தேர்தல்கள் ஆணையாளர் குறைத்தமை தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவை, ஐக்கிய தேசிய கட்சியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்ணான்டோ மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எச். டபிள்யூ.டி.மிஹிமால் முனசிங்ஹ ஆகியோரே தாக்கல் செய்துள்ளனர்.

இந்த மனுவில் பிரதிவாதிகளாக தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். (6)

# பாதுகாப்பு அமைச்சின் மீதான விவாதம்; ஆளும்- எதிர்த்தரப்பு கடும் வாக்குவாதம்

(கொழும்பு)

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு மீதான விவாதம் நேற்று முன்தினம் இரண்டாம் நாள குழுநிலையில் விவாதிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் மங்கள சமரவீர எம்.பி.க்கு தொடர்ந்தும் ஆளும் கட்சியினர் இடையூறுகளை ஏற்படுத்திக்கொண டிருந்ததை அவதானித்த சபாநாயகர் சமல் ராஜபக்ஷ உங்களது (ஆளும் கட்சியினரைப் பார்த்து) நடவடிக்கைகளை பார்க்கையில் மங்கள சமரவீர எம்.பியின் கருத்துகளில் உண்மை இருக்கிறது என்றே எண்ணத் தோன்றுகின்றது எனத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை 2014 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தின் இரண்டாம் நாள் குழுநிலை விவாதத்தை ஐக்கிய தேசியக் கட்சியின் மாத்தறை மாவட்ட எம்.பி.யான மங்கள சமரவீர ஆரம்பித்து வைத்து உரையாற்றினார்.

இதன்போது, பேசிய மங்கள சமரவீர எம்.பி. மனித உரிமைகள் தொடர்பிலான விடயங்கள், கொம்பனித் தெருவில் வீடுகள் தகர்க்கப்பட்டமை, பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் பிரித்தானியாவின் கொன்சர்வேட்டிவ் கட்சிக்கு நிதியளிப்பு ஆகிய விடயங்கள் குறித்து பேசிக்கொண்டிருந்தபோது ஆளும் கட்சியினர் தொடர்ந்து இடையூறுகளை ஏற்படுத்தினர்.

ஏ.எச்.எம்.அஸ்வர், அமைச்சர் மேர்வின் சில்வா,- பிரதியமைச்சர் லலித் திஸாநாயக்க உள்ளிட்டோர் கடும் எதிர்ப்புகளை வெளியிட்ட வண்ணமிருந்தனர்.

சபையின் குழப்ப நிலையை கட்டுப்படுத்துவதற்கு சபாநாயகர் பல தடவை முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். எனினும், அது செவிமடுக்கப்படாததால் மங்கள கூறும் கூற்றுகள உங்களது நடத்தையினூடாக பார்க்கையில் உண்மையிருக் கிறது என்றே தோன்றுகின்றது என்றார்.

இதேவேளை, சம்பந்தன் எம்.பி. உரையாற்றியபோது ஆளும் கட்சியினர் இடையூறுகளை ஏற்படுத்திய அதேவேளை அமைச்சர் தினேஷ் குணவர்தன உரையாற்றிய சந்தர்ப்பத்தில் அவருக்கு ரவி கருணாநாயக்க மற்றும் மங்கள சமரவீர, எம்.ஏ. சுமந்திரன் ஆகிய எம்.பி.க்களும் முரண்பட்டனர்.

ஒரு சந்தர்ப்பத்தில் ஆவேசமடைந்த சுமந்திரன் எம்.பி. ஆளும் கட்சியின் சூரியப்பெரும எம்.பி.யைப் பார்த்து சிங்கள மொழியில் உச்ச தொனியில் திட்டினார்.

உங்களது கருத்தை எழுந்து நின்று கூறுமாறும் ஒளிந்து கொண்டு பேச வேண்டாம் என்றும் கூறினார். இதனால் சபையில் பெரும் குழப்பம் ஏற்பட்டது. (6)



யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு 2015 ஆம் ஆண்டிற்கான முதலாம் ஆண்டு அனுமதி தொடர்பான கலந்துரையாடல் யாழ். கல்வி வலய கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது யாழ். வலயக் கல் விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் உரையாற்றுவதையும் கல்வி உயர் அதிகாரிகள் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட அதிபர் களையும் படங்களில் காணலாம்.

# இலங்கைக்கு பிரித்தானியா ஆயுதம் விற்பனை செய்தது

## ஆய்வறிக்கையில் தகவல்

பிரித்தானிய அரசாங்கம் ஆயுதம் விற்பனை செய்த 27 நாடுகளில் ஒன்றாக இலங்கையும் உள்ளது.

27 பில்லியன் ஸ்ரேலிங் பவுண்ட் பெறுமதியான ஆயுதங்களை இலங்கை உட்பட 27 நாடுகளுக்கு பிரித்தானியா வழங்கியுள்ளதாக ஆயுதங்கள் ஏற்றுமதி கட்டுப்பாடுகள் தொடர்பான "மக்களவை குழுக்கள் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கைக்கு ஆயுதம் ஏற்றுமதி செய்ய ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த அனுமதிகளை பிரித்தானியா அனுமதித்தது.

98 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்ட் பெறுமதியான பலவகை துப்பாக்கிகள் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

மனிதவுரிமை மீறல் இடம் பெறுவதாக கூறிய நாடுகளுக்கு ஆயுதம் விற்கப்பட்டதை ஆயுதங்கள் ஏற்றுமதி கட்டுப்பாடுக்கான மக்களவை குழுக்களின் தலைவர் சேர் ஜோன் ஸ்ரான்லி விமர்சித்திருந்தார்.

இலங்கைக்கு 8 மில்லின் ஸ்ரேலிங் பவுண்ட் பெறுமதியான ஆயுதம் ஏற்றுமதி செய்யப்பட்டது மிகவும் பாரதூரமான கவலையை தோற்றுவித்துள்ளது" என அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# நால்வருக்கு மரண தண்டனை

(கொழும்பு)

கடந்த 2007 ஆம் ஆண்டு வாகனமொன்றை கடத்தி, அதன் சாரதியை கொலை செய்தமை தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த நால்வரை, குற்றவாளிகளாக இனங்கண்ட கண்டி மாகாண உயர் நீதிமன்ற நீதவான் மணிலால் வைத்திய திலக்க, அந்த நால்வருக்கும் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

புஸ்ஸல்லாவ, பலாகொல்ல பிரதேசத்தில் வசித்த சானக பெரேரா என்பவரை 1999ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 2ஆம் திகதி கொலை செய்த சம்பவம் தொடர்பில் ஐவர் மீது வழக்கு தொடரப்பட்டது.

வானுடன் கடத்தப்பட்ட இவர், பெல்மதுளை பகுதியில் வைத்தே கொலை செய்யப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பில் ஐவரு க்கு எதிராக குற்றஞ்சாட்டப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்கு கடந்த பல வருடங்களாக கண்டி மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்த நிலையில் சந்தேகநபர் ஒருவர் மரண மடைந்துள்ளார்.

இந்நிலையில் ஏனைய சந்தேக நபர்கள் நால்வர்யும் குற்றவாளிகளாக இனங்கண்ட நிலையில் நேற்று அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. (6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

872

# இளவரசியைக் கடத்தியவன்!



ஏமபுரி என்ற நகரத்தில் கதன், சுதன் என்ற பலே திருடர்கள் இருந்தனர்.

இருவரும் இணை பிரியாத தோழர்கள்.

அவர்கள் இருவரும் சேர்ந்தும் தனியாகவும் திருட்டு வேலைகளைச் செய்பவர்கள். பிறகு ஒருவருக்கு ஒருவர் செய்தியைப் பரிமாறிக் கொள்பவர்கள்.

ஒருநாள் சுதன் அரண்மனைக்குச் சுரங்கம் வைத்து இளவரசியின் படுக்கை அறைக்குள் புகுந்துவிட்டான்.

அவனைப் பார்த்துவிட்டாள் இளவரசி. ஆனால், பயப்படவும் இல்லை. கூச்சல் போடவும் இல்லை. பதிலாக அவனிடம் மோகம் கொண்டுவிட்டாள். அவனுக்கு நிறைய பொற்காசுகளும் பொருட்களும் கொடுத்து நாளைக்கு நீ இங்கு வந்தால் இதைப்போல் தருவேன் என்று சொன்னாள் இளவரசி.

சுதன் தன் தோழன் கதனிடம் சென்று தான் இளவரசியைப் பார்த்ததையும் அவள் தந்தையும் இனி அடிக்கடி அவளிடம் செல்லப் போவதாகவும் பெருமையாகச் சொல்லி மகிழ்ந்தான்.

மறுநாள் இளவரசி வரச்சொன் னபடி அங்கு சென்றான் சுதன். இரவு நிறைய மது அருந்தி குதூகலமாக இருந்து அங்கே படுத்துத் தூங்கிவிட்டான் சுதன். விடிந்ததும் காவலர்கள் சுதனைக் கைது செய்தனர்.

அரசனிடம் சென்று காவலர்கள் தகவல் தெரிவித்தனர்.

அவனை சிரச்சேதம் செய்யும்படி உத்தரவிட்டான் அரசன்.

தவிர குடும்பத்திற்கு அவமானத்தை உண்டாக்கிய தன் மகளை- விலங்கிட்டு அந்தப்புரத்தில் வைக்கவும் உத்தரவிட்டான்.

சுதனின் தோழனான கதனுக்குச் செய்தி தெரிந்தது. உடனே சிரச்சேதம் செய்யும் இடத்திற்கு விரைந்தான்.

இளவரசியைக் கடத்திப்போகும்படி கதனிடம் சுதன் கைசாடை மூலம் தெரிவித்தான்.

மறுநாள் சுரங்கத்தின் வழியே சென்று இளவரசியைக் கண்டான் கதன். தான் சுதனின் நெருங்கிய தோழன் என்று தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டான்.

தூக்குமேடையிலிருந்தபடியே உங்களை அந்தப்புரத்திலிருந்து மீட்டுச் செல்லுமாறு குறிப்பு மொழியால் தன்னிடம் கூறியதாகச் சொன்னான்.

அவளும் அதற்குச் சம்மதித்து தப்பி ஓடி கதனுடைய வீட்டிலே தங்கிவிட்டாள்.

மறுநாள் இளவரசி தப்பிச் சென்ற செய்தியை அரசன் அறிந்தான்.

சுதனுக்கு நெருங்கியவன் அல்லது உறவினன் எவனோ ஒருவன் இளவரசியைக் கடத்திச் சென்றிருக்கக்கூடும் என்று யூகித்தான் அரசன்.

ஆகையால் சிரச்சேதம் செய்யப்பட்ட சுதனின் உடலை எரிக்கவேண்டாம் என்று அவனுக்காக எவன் அழுதுகொண்டு வருகிறானோ அவனைக் கைது செய்யும்படி உத்தரவிட்டான். அரசன்.

அரசனுடைய உத்தரவை அறிந்த கதன் தன் தோழனுக்காக அழாமலோ இறுதிச் சடங்குகள் செய்யாமல் இருக்கவோ மனமில்லை. இளவரசியிடம் சொல்லிவிட்டு கதன் வெளியே சென்றான். ஒரு பானையில் தண்ணீருடன் அரிசியை கலந்து கையில் ஏந்தி பிச்சைக்காரனைப் போல் சுதனின் பிணத்துக்கு அருகில் சென்று தவறிக்கீழே விழுபவன்போல் விழுந் தான். அரிசியும் தண்ணீரும் பிணத்தின் மீது கொட்டியது. ஐயோ பிச்சை அரிசி கொட்டி போயிற்றே என்று அழுவதுபோல் தோழனுக்காக அழுதுவிட்டுத் திரும்பி வந்தான் சுதன்.

இளவரசியிடம் தான் செய்த தந்திரத்தை கூறினான்..

மறுநாள் மந்திரவாதியைப் போல் வேடம் அணிந்து சுதனின் பிணத்தைக் காவல் செய்து கொண்டிருந்த காவலாளிகளிடம் சென்றுதான் கற்ற சில மந்திர தந்திர வித்தைகளைச் செய்து காட்டினான்.

அவர்கள் ஏமார்ந்திருந்த சமயம் பார்த்து சுதனின் பிணத்தை உடனே தீ வைத்து எரித்து விட்டான். தன்னுடைய திட்டம் வீணாகி விட்டதைக் கண்ட அரசன்.... (தொடரும்)

07.2014
25

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1261 - கொன்ஸ்டன்டீனபோல் நகரை நிக்காயர்கள் கைப்பற்றி பைசண்டைன் பேரரசை அங்கு மீண்டும் அமைத்தனர்.
- 1547 - இரண்டாம் ஹென்றி பிரான்ஸ் மன்னனாக முடிசூடினான்.
- 1593 - பிரான்சின் நான்காம் ஹென்றி புரட்டஸ்தாந்து மதத்தில் இருந்து ரோமன் கத்தோலிக்கத்துக்கு பகிரங்கமாக மதம் மாறினான்.
- 1603 - ஸ்கொட்லாந்தின் ஆறாம் ஜேம்ஸ் பிரித்தானியாவின் முதலாவது மன்னனாக முடி சூடினான்.
- 1799 - எகிப்தில் பிரான்சின் முதலாம் நெப்போலியன் 10,000 ஒட்டோமான்களை சமரில் வென்றான்.
- 1868 - வயோமிங் ஐக்கிய அமெரிக்காவுடன் இணைக்கப்பட்டது.
- 1894 - முதலாவது சீன-ஜப்பானியப் போர் ஆரம்பமானது.
- 1898 - புவேர்ட்டோ ரிக்கோ மீதான ஐக்கிய அமெரிக்காவின் படையெடுப்பு ஆரம்பமானது. முதலாவது அமெரிக்கப் படையினர் குவானிக்கா துறைமுகத்தில் தரையிறங்கினர்.
- 1907 - கொரியா ஜப்பானின் ஆட்சியின் கீழ் வந்தது.
- 1908 - அஜினமோட்டோ கண்டுபிடிக்கப்பட்டது.
- 1925 - சோவியத் செய்தி நிறுவனம் டாஸ் நிறுவப்பட்டது.
- 1934 - ஆஸ்திரிய ஜனாதிபதி எங்கல்பேர்ட் டொல்ஃபஸ் நாசிகளினால் கொலை செய்யப்பட்டார்.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: இத்தாலிய சர்வாதிகாரி பெனிட்டோ முசோலினி பதவியிலிருந்து அகற்றப்பட்டார்.
- 1973 - சோவியத்தின் மார்ஸ் 5 விண்கலம் ஏவப்பட்டது.
- 1984 - சல்யூட் 7 விண்கலத்தில் சென்ற ரஷ்யாவின் ஸ்வெட்லானா சவீத்ஸ்கயா விண்ணில் நடந்த முதலாவது பெண் என்ற பெருமையைப் பெற்றார்.
- 1993 - ஷ்ரேல் லெபனான் மீது பெரும் தாக்குதலை ஆரம்பித்தது.
- 1994 - ஷ்ரேலுக்கும் ஜோர்தானுக்கும் இடையில் வோஷிங்டனில் அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டு 1948 ஆம் ஆண்டு முதல இருந்து வந்த முறுகல நிலை முடிவுக்கு வந்தது.
- 1997 - கே. ஆர். நாராயணன் இந்தியாவின் 10 ஆவது குடியரசுத் தலைவர் ஆனார். தலித் இனத்தைச சேர்ந்த ஒருவர் இப்பதவியை வகித்தது இதுவே முதற்தடவையாகும்.
- 2007 - பிரதிபா பாட்டில் இந்தியாவின் முதலாவது பெண் குடியரசுத் தலைவரானார்.

### பிறப்புகள்

- 1875 - ஜிம் கார்பெட், புலி வேட்டைக்காரர் (இ. 1955)

### இறப்புகள்

- 1980 - [illegible] (பி. 1928)

### பிரதிபா பாட்டில்



பிரதிபா பாட்டில் 1934 ஆம் ஆண்டு டிசம்பர் 19 ஆம் திகதி மராட்டிய மாநிலத்தில் உள்ள ஜல்கான் மாவட்டத்தில் பிறந்தார். அவரின் தந்தை பெயர் ஸ்ரீ நாராயண ராவ். ஜல்கானில் உள்ள எம்.ஜே. கல்லூரியில் முதுகலைமாணி (எம். ஏ.) பட்டம் பெற்றார். பின்னர் அவர் மும்பையில் உள்ள அரசு சட்ட கல்லூரியில் எல்.எல்.பி. பட்டம் பெற்று வக்கீலாகவும் பயிற்சி பெற்றார். இவரின் பரவலான அழைப்புப் பெயர்: பிரதிபா தாயி. இவர் இந்தியாவின் முதலாவது பெண் குடியரசுத் தலைவர் ஆவார்.

அத்துடன் மகாராஷ்டிரா மாநிலத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது குடியரசுத் தலைவரும் ஆவார். இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினரான இவர் ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி வேட்பாளர் ஆவார். ஜூலை 19, 2007இல் நடந்த குடியாராசுத் தலைவர் தேர்தலில் போட்டியிட்டு இவருக்கு எதிராகப் போட்டியிட்ட பைரன் சிங்க் ஷெகாவத் அவர்களைத் தோற்கடித்து வெற்றி பெற்றார்.


மகாராஷ்டிரா மாநில அவையில் உறுப்பினராக 1962 முதல் 1985 வரை இருந்தவர். நாடாளுமன்ற உறுப்பினராகவும் 1991 முதல் 1996 வரையில் இருந்தவர். 2004 ஆம் ஆண்டு முதல் ராஜஸ்தான் மாநில ஆளுநராக பணியாற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## "சாதனை நாயகனின் சரித்திரம்"






...ஆட்டம் முடியும் நேரம் என்பதால் வழக்கமாக நைட் வோச்மேனாக பந்துவிச்சாளர்களைத்தான் அனுப்புவார்கள். இது ஏன் என்று சிறுவனான சச்சினுக்குப் புரியவில்லை. தனக்குப் பதில் ஏன் பந்துவீச்சாளரை விளையாட அனுப்ப வேண்டும் என்ற கேள்வியை குழு மேலாளர் காமத்தை நேரடியாகவே கேட்டுவிட்டான். மாலைநேரம். வெளிச்சம் குறைவு. பேட்ஸ்மேன் டென்ஷனாக இருக்கக் கூடாது என்பதால் பௌலரை அனுப்புவார்கள். அடுத்தநாள் காலையில் பேட்ஸ்மென் புத்துணர்ச்சியோடு களம் இறங்கவே இந்த ஏற்பாடு. இதை சச்சினுக்கு எப்படி விளக்குவது என்று அவருக்குப் புரியவில்லை.

**ஆட்டம் முடியும் நேரம் என்பதால் வழக்கமாக நைட் வாட்ச்மேனாக பந்து வீச்சாளர்களைத் தான் அனுப்புவார்கள். இது ஏன் என்று சிறுவனான சச்சினுக்குப் புரியவில்லை. தனக்குப் பதில் ஏன் பந்து வீச்சாளரை விளையாட அனுப்ப வேண்டும் என்ற கேள்வியை குழு மேலாளர் காமத்தை நேரடியாகவே கேட்டுவிட்டான்.**

## முதல் ரஞ்சிக் கோப்பை செஞ்சுரி சாதனை

மும்பைப் அணித் தலைவர் வெங்சர்கார் மற்றும் இளைஞன் சச்சின் இருவரும் இணைந்து ஆடி 188 ரன்களைச் சேர்த்தனர். சச்சின் இரு இன்னிங்சிலும் எடுத்த ரன்கள் முறையே 59 மற்றும் 15. மும்பை இறுதியில் வெற்றி பெற்றது. உத்தரப்பிரதேசத்திற்கு எதிரான அடுத்த ரஞ்சி ஆட்டத்தில் மும்பை 422 குவித்தது. சச்சின் 75 ரன்கள் எடுத்தான். மும்பை 224 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.




டில்லிக்கு எதிரான இறுதிப்போட்டியில் வெங்சர்கார், சாஸ்திரி, மஞ்சுரேகர் ஆகியோர் டெஸ்ட் விளையாட்டுக்களில் கலந்துகொள்ளச் சென்றதால் மும்பை அணியில் இடம்பெறவில்லை. ஆனால், டெல்லி அணியில் மனோஜ் பிரபாகர், மதன்லால், மணீந்தர்சிங், ராமன் லம்பா என டெஸ்ட் அனுபவம் பெற்ற வீரர்கள் இருந்தனர். டெல்லி முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 409. சச்சின் 78 ரன்கள் எடுத்திருந்தாலும் மும்பையின் முதல் இன்னிங்சின் மொத்த ரன்கள் 321 ரன்தான். இரண்டாவது இன்னிங்ஸ் முடியாத நிலையில் ஆட்டம் டிரா ஆனது. ஆனால், முதல் இன்னிங்ஸ்ஸில் 88 ரன் அதிகம் எடுத்திருந்த காரணத்தினால் டில்லி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. சச்சின் ஆட்டத்தை வெகுவாக மணீந்தர் சிங் ரசித்தார். டில்லி திரும்பிய உடன் தனது நண்பர்கள் அனைவரிடமும் சச்சின் ஆட்டத்தை புகழ்ந்து தள்ளினார். விரைவில் இந்திய டீமில் ஒரு விடிவெள்ளி தோன்றப் போவதாகவும் சச்சின் விளையாடுவதைப் பார்க்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்றெல்லாம் கூறி பரவசப்பட்டார். இவ்வாறாக சச்சின் அந்த சீசனில் நடை பெற்ற அனைத்து ரஞ்சிக் கோப்பைப் போட்டிகளிலும் தவிர்க்க முடியாத ஆட்டக்காரராகத் திகழ்ந்தார்.

அப்போது பத்தொன்பது வயதிற்கு உட்பட்ட அணியினரைத் தேர்வு செய்து பாகிஸ்தானுக்கு எதிராக விளையாட அனுப்பி வைக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வந்தது. சச்சின் அதில் இடம்பெறுவார் என்று எல்லோரும் எதிர்பார்த்திருந்த வேளையில் பள்ளியின் இறுதித் தேர்வுகளும், பாகிஸ்தான் சுற்றுப்பயணமும் ஒரே திகதியில் வந்தன. படிப்பா விளையாட்டா என்று முடிபு எடுக்க வேண்டிய நிலைக்கு சச்சின் தள்ளப்பட்டான். சச்சினின் அம்மா ரஜினி மற்றும் தந்தை ரமேஷ் டெண்டுல்கர் இருவருமே சச்சினின் விருப்பத்திற்கு எப்போதுமே தடையாக இருந்ததில்லை. மகன் எதிர்காலத்தில் சிறந்த கிரிக்கெட் வீரனாக வருவான் என்ற நம்பிக்கை இருந்ததால் அவனது படிப்பு விடயத்தில் அவர்கள் கண்டிப்புக் காட்டவில்லை. (Jack of All Trades Master of None) என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். அதாவது, எல்லாவற்றிலும் அரை குறையாக இருப்பது. ஒன்றில் கூட முழுமை இல்லை என்பது இதன் பொருள். இதையேதான் ரமேஷ் தனது மகன் சச்சினிடம் அடிக்கடி கூறுவார்.

(தொடரும்)

**கே.ரமேஷ்**

# உங்கள் பிறந்த எண் 06 இல் கூட்டெண் 08 இன் பலன்கள்



**46**

### தோற்றம்

சுக்ரனில் சனி சேர்ந்து தரும் ஆதிக்கப்பலன். அளவான உயரம் இருக்கும். உடல் வாட்டசாட்டமாக கட்டுமஸ்தாக அமையும். கறுப்பு என்றோ சிவப்பு என்றோ கூறமுடியாத நிறத்துடன் செவ்விழிகளுடன் கோபக்காரரர் என்பது விளங்கும்படி இருப்பர். மொண்ணை மூக்கு உப்பிய கன்னம் உருண்டை முகம் பெரிய தலை துருத்திய காதுகள் சதைத்திரட்சி பெற்ற தாடை இருக்கும். முடி அடர்ந்திருக்கும்.கனவில் மிதப்பது போன்ற கண்கள் பார்வை இருக்கும்.

### குணம்

தெய்வ நம்பிக்கை மிக்கவர். அதிகம் வெளிக்காட்டி கொள்ள மாட்டார். உணர்ச்சி வசப்படுவர் உலக வாழ்க்கையை ரசிப்பார். வெட்டிப் பேச்சை வெறுப்பார். செயல் புரிய சிறந்த புரட்சிகரமான கருத்துக்களைக் கண்டு பிறருக்கும் போதிப்பார். தாமும் தம்மை சார்ந்தவரும் சாதனைபுரிய பேராவல் கொண்டிருப்பர்.

உழைப்பாளிகள் தாமே தம் கருத்திற்கு முன்னுதரணமாக இருப்பார். இடைவிடாத தடைகளும் 35 வயதிற்கு பிறகு ஏற்படும். அயராத முயற்ச்சியும் உறுதியும் கொண்டவர்.சாந்தமும் அறிவும் போகப்போக உண்டாகும்.

சிறுவயது வாழ்க்கை எளிதாக இனிதாக இருக்கும். நடுவயதில் சங்கடமான வாழ்வாகும். பின்னாளில் அமைதி கிட்டும்.

உறுதியும் கண்டிப்பும் சிக்கனமும் பிற்பகுதி வாழ்க்கையில் காட்டுவர். பிறர் வெறுப்பிற்கு ஆளாவர். பல சங்கதிகளைத் தெரிந்து கொள்ளுவர். நீதி நேர்மைக்கு பணிவர். பிறர் பசி கண்டு பொறார். விசித்திரமானவற்றை அற்புதங்களைப் பற்றித் தெரிந்துகொள்ள முயலுவர். மலிவான தந்திரம் செய்து கெட்ட பெயர் எடுப்பார்.

நிறைய ஊர் சுற்றுவர். சாமானிய மக்களை ஆதரிப்பார். அப்பட்டமாகப் பேசி நடப்பார். முரடர் எனப் பெயரெடுப்பார். ராட்சத சக்தி உள்ளவர். எதிர்ப்பும் எதிரிகளும் இவர்களுக்கு உண்டு. யார் என்ன தந்திரம் செய்தாலும் இவர்களை ஏதுவும் செய்ய முடியாது.

முதலில் கலை பிரியராக இருந்தவர் போகப் போகக் கலையை வெட்டிப் பொழுதுபோக்கு என்று கூறி வெறுப்பார்.

நீண்ட ஆயுளிருந்தாலும் முடிவு திடீரென ஏற்படும். பெயரெண் பிறந்த எண்ணுக்கு பொருந்தினால் வாழ்க்கை செல்வமும் செழிப்பும் சிரிப்புமாக இருக்கும். கூட்டு எண்படி அமைந்தால் வம்பும் வழக்கும் இழப்புமாகும். திடீரென முடியும்.

### குணம்

காதல் விவகாரம் இருந்திருக்கும். கல்யாணத்தில் நல்ல மனைவி கிடைப்பாள். ஆனாலும் மண வாழ்வு நன்கு செல்லும். நல்ல வாரிசுகள் உண்டாகும். பிற்பகுதி வாழ்வில் சற்று சிரமங்கள் ஏற்படும். இருமனைவிகள் அமையாலம். இராண்டாம் மனைவியால் தொல்லைகள் ஏற்படும். கடைசிக் காலம் அமைதியாகக் கழியும். பணவசதி இருக்கும். குழந்தைகள் கல்வி சிறக்கும்.

### தொழில்

கலையார்வம் இருந்தாலும் இன்ஜினியராவர். பத்திரிகை வியாபாரத் துறைகளில் முதலில் லாபம் அடைவர். பிறகு இழப்பை சந்திப்பார். இரும்புக்கடை தொழிற்சாலை லாபம் ஏற்படலாம். நிதிபதிகளாக பேராசிரியர்களாக ஓட்டல் முதலாளிகளாக பத்திரிகைத் துறையில் இருப்பவராக கல்விக் கூடங்களில் நிறுவனராக இருப்பர். எண்ணெய் எரிபொருள் மின்சாரம் தொடர்பான அமைப்புக்களில் அதிகாரிகளாக இருப்பார். கலை இலக்கியம் புத்தகம் கண்ணுக்கும் நெஞ்சுக்கும் இனிய வாசனையுள்ள ஆடை அலங்காரப் பொருள் தயாரிப்பு விற்பனையிலும் இருப்பார். உழைப்பும் தாக்குப்பிடிக்கும். உறுதியும் இவர்களுக்கு வெற்றியைத் தரும்.

### நோய்

வெப்பம் தொடர்பான அஜீரண சம்பந்தப்பட்ட வாதத்தைச் சார்ந்த கண்ணுக்கு வரும் கோளாறுகளால் பாதிப்படைவர். வயிறு பலவினமான இவர்கள் அதிக புளிப்பு, காரம், சாப்பிட்டால் குடியில் இறங்கினால், வயிற்றுப்புண், வயிற்று வலி, வயிற்றில் புற்றுநோய்க்கு ஆளாவர் மலச்சிக்கல், பி.பி,சர்க்கரை நோய் வரலாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

## இரகசிய விலங்கியல் பாகம் - 3



**YETI: The Snow man**

ஒரு சிறிய இடைவேளையின் பின் உங்களை மீண்டும் இரகசிய விலங்கியலிற்கு வரவேற்கிறேன். நாங்கள் மீண்டும் இரகசிய விலங்குகளின் உலகத்திற்குள் செல்வோம். இந்த முறை நாங்கள் பார்க்கப் போவது ஒரு புதிரான மனிதனை ஒத்த ஒரு விலங்கைப் பற்றியது ஆகும்.

பனி மனிதனைப் பற்றிய கதைகள் உலகம் எங்கும் பரவி இருக்கும் ஒன்று தான். உலகில் எங்கு பனி படர்ந்த பரப்பு



*Bigfoot photo: original?*

உள்ளதோ அங்கு ஒரு புதிரான பனி மனிதன் பற்றிய கதையும் இருக்கும்.

நீங்கள் 80 ஆம் ஆண்டுகளில் தொலைக் காட்சி பார்த்திருப்பீர்கள் ஆனால் பக்பூட் என்ற தொடரும் அதில் வரும் பனிமனிதனும் மறக்க முடியாதவையாக இருக்கும்.

பிக் பூட் (Big Foot), எடி (Yeti) என்று உலகின் பல பாகங்களில் பல பல பெயர்களால் அழைக்கப்படும் பனி மனிதன் உண்மையில் ஒரு புரியாத புதிர் தான். அமெரிக்காவின் பனிப் பகுதிகளில் பிக் பூட் என்று அழைக்கப்படும் பனி மனிதன் இமய மலை பகுதியில் எடி என்று அடையாளம் காணப்படுகிறான்.

பொதுவாக இந்தப் பனி மனிதன் உரோமம் கொண்ட சற்றே பெரிய அளவு தோற்




றம் கொண்ட மனிதன் ஆக உருவகப் படுத்தப்படுகின்றான்.

இந்தப் பனி மனிதனைப் பற்றி ஏராளமான கதைகள் உள்ளன. அவற்றில் சில மிகைப் படுத்தல்களாக உள்ள போதும் அநேகமான கதைகள் இந்த மனிதன் கூச்ச சுபாவம் உள்ளவனாகவும் மனிதத் தொடர்புகளை விரும்பாதவனாகவும் காண்பிக்கின்றன.

எல்லா இரகசிய விலங்குகளைப் போலவும் இந்தப் பனி மனிதனிற்கும் ஆதாரங்கள் போதிய தரவுகளைத் தரவில்லை. ஒரு புகைப்படம் மிகவும் தெளிவாக இருந்த போதும் இந்தப் படம் ஒரு ஏமாற்று வேலை என்றே (குரங்கு வேடம் போட்ட மனிதன்) பலராலும் பார்க்கப் படுகின்றது.


ஏனைய அவதானிப்புகளும் ஆதாரங்களும் அவ்வளவு முக்கியத்துவம் பெறவில்லை.

***Big foot's feet?***

ஆனால் மிகவும் முக்கியமான ஒரு விடயம் இந்தப் பனி மனிதன் சம்பந்தமான ஆதாரங்களில் உள்ளது. அது இந்தப் பனி மனிதனின் உரோமம் மற்றும் சிதைந்த திசுக்களின் சேமிப்பு.


ஆயினும் சமீபத்தில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் பனி மனிதன் சார்ந்த விஞ்ஞான ரீதியிலான ஆய்வு ஒன்றைச் செய்ய முனைந்தனர். இதற்காக உலகின் பல பாகங்களிலும் உள்ள பனி மனிதனின் உரோம சேகரிப்புகளை கொண்டு வந்தனர். இந்த உரோம மாதிரிகளில் இருந்து DNA பெறப்பட்டது. இந்த DNA இன் பகுதிகள் பெருக்கம் (amplify) செய்யப்பட்டு அந்தப் பகுதிகளின் தொடர் ஒழுங்கு (sequence) பெறப்பட்டு அதன் தன்மை ஆராயப்பட்டது.

இதில் பெறப்பட்ட முடிவுகள் பனி மனிதன் பற்றி நம்பிக்கை வைத்திருந்தவர்களிற்கு ஏமாற்றமளிப்பதாக இருந்தது. அநேகமான மாதிரிகள் மனிதன் மற்றும்



சாதாரண முலையூட்டிகளின் (mammals) உரோமம் என்றே முடிவு செய்யப்பட்டது. சில மாதிரிகள் பசு மாடுகளின் உரோமம் என்று முடிவு செய்யப்பட்டது. ஆயினும் ஒரு சில மாதிரிகள் அழிந்து போனதாக கருதப்படும் ஒரு வகை துரு வக்கரடிகளை ஒத்ததாகக் காணப்பட்டது.

இந்த முடிவுகள் பனி மனித ஆர்வலர்களிற்கு சிறிது சோர்வு அளிக்கக் கூடியது தான். எனினும் இந்த வகை மூலக்கூற்று ஆய்வுகளின் (Molecular analysis) முடிவுகள் முற்று முழுதாக தவறுகள் இல்லாதவை அல்ல என்பதால், அவர்கள் இன்னும் இன்னும் தொலைந்து போன இந்தப் பனி மனிதனைத் தேடும் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பார்கள்.



என்றாவது இந்தப் பனி மனிதனுடன் கை குலுக்கி விடலாம் என்ற நம்பிக்கையுடன்.

**க.கஜபதி**
**விரிவுரையாளர், விலங்கியல் துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

## வாரத்திற்கு ஒரு புதிர்! 114

மனிதத் தொகுதிச் சுற்றோட்டம் பற்றி முதலில் முழுமையான விளக்கம் அளித்தவர் யார்?

**புதிர் 114 இற்கான விடைகளை 04.08.2014 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:** **திரு.க.கஜபதி**
ஆசிரியர் பிரிவுA
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
விரிவுரையாளர், விலங்கியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.
**P.D.BOX** 57, திருநெல்வேலி.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு**
**ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**
இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக தாவரவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.A.C.தவரஞ்சித்திடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 113 க்கான 250/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

கே.இராஜகோபால், அடைக்கலம் தோட்டம், கந்தசாமி கோவிலடி, வட்டுக்கோட்டை.

**புதிர் 113 க்கான கேள்வியும் விடையும்:**

இயற்கையாக இதயத்தில் காணப்படும் இதயமுடுக்கி (Pacemaker) என்ன?

MERS CoV(Middle East Respiratory Syndrome corona Virus)

### யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 114

சரியான விடை:-........................................
முழுப்பெயர்:-........................................
முகவரி:-........................................
தொ.பே. இல:........................................
கையொப்பம்:........................................







சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் வருடாந்த பரிசுத்தினம் அண்மையில் நடைபெற்றது. இதன்போது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர் ஒருவருக்கு சான்றிதழ் வழங்கப்படுவதையும் மாணவிகளின் கலை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா.சபையின் விசாரணையை ஜனாதிபதி ஆணைக்குழு விஞ்சும்

## தலைவர் பரணகம உறுதியளிப்பு

இலங்கை மனித உரிமை விவகாரம் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைப் பேரவை நடத்தும் விசாரணையை விஞ்சும் வகையில் எமது குழுவின் விசாரணைகள் அமையும்.

எமது குழு ஐ.நா.மனித உரிமைப் பேரவையின் விசாரணையை விட சுயாதீனமானதும் நம்பகத்தன்மை வாய்ந்ததுமான விசாரணையை எமது நாட்டில் உள்ளக ரீதியில் நடத்தி அறிக்கையை வெளியிடும்.

இது விரிவுபட்டதாக அமையும் என்று காணாமல் போனோர் தொடர்பில் விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்வேல் பராக்கிரம பரணஹம தெரிவித்தார்.

இது நேருக்கு நேர் விசாரணையாகும். எனவே எமது உள்ளக விசாரணை சுயாதீனமாகவும் நம்பகத்தன்மை மிக்கதாகவும் அமையும். இந்த விசாரணை செயற்பாட்டில் புலம் பெயர்ந்தவர்களும் சாட்சியங்களை அளிக்கலாம்.

மேலும், யாருக்கு எதிராக முறைப்பாடு முன்வைக்கப்படுகின்றதோ அவர்கள் விசாரிக்கப்படுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

புதிய ஆணைக்கு அமைவாக சர்வதேச தரத்துக்குட்பட்ட வகையில் விசாரணைகளை நடத்துவதற்காக ஆலோசனை வழங்கவே சர்வதேச நிபுணர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை எமது விசாரணை அமர்வுகளில் பங்குபற்றுவதற்கு நாங்கள் அழைக்கவுள்ளோம் என்றும் பரணகம கூறினார்.

காணாமல் போனோர் தொடர்பாக விசாரிக்கும் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள ஆணையானது யுத்தகாலத்தில் சர்வதேச மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதா என்பதனை விசாரிக்கும் வகையில் விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் விரிவுபடுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (6)

# டெங்கு 60 வீதம் கட்டுப்பாட்டுக்குள்

(கொழும்பு)

கொழும்பு மாநகரில் டெங்கு நோய் நூற்றுக்கு 60 வீதம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் கடந்த ஜுன் மாதம் வரையிலான காலப்பகுதியில் 6 பேர் உயிரிழந்திருப்பதாகவும் கொழும்பு மாநகர சபையின் பிரதம வைத்திய அதிகாரி டாக்டர் விஜய முனி சொய்சா தெரிவித்தார்.

எதிர்வரும் நாட்களில் மழைக் காலம் ஆரம்பிக்கவுள்ளதால் பொது மக்கள் தமது சூழலை நீர் தேங்காத வண்ணம் சுத்தமாக வைத்திருக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

டெங்கு நுளம்புகள் உற்பத்தியாவதை தடுக்கவும் கொழும்பு மாநகரில் டெங்கு காய்ச்சல் பரவுவதை கட்டுப்படுத்தவும் கடந்த காலங்களில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டோம்.

கொழும்பு மாநகரசபை அதிகாரிகள் மற்றும் முப்படையினர் என 18 ஆயிரம் ஆளணியினர் இணைந்து கொழும்பு மாநகரில் 1,18000 வீடுகள் பரிசோதிக்கப்பட்டதோடு அரச, தனியார் பாடசாலைகளும் பரிசோதிக்கப்பட்டு டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்கள் கண்டுப்பிடிக்கப்பட்டன.

அசுத்தமான சூழலை வைத்திருக்கும் பிரதேசங்கள் கண்டுப்பிடிக்கப்பட்டு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (6)

## இளைஞன் கொலை

(கொழும்)

கொழும்பு வெல்லம்பிட்டி பகுதியில் நேற்று முன்தினம் இரவு கூரிய ஆயுதத்தால் தாக்கி இளைஞன் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவத்தில் கொலன்னாவ பகுதியை சேர்ந்த 22 வயதுடைய நபரே உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (6)

# உணவு ஒவ்வாமையினால் வைத்தியசாலையில் 67 மாணவர்கள்

(கொழும்பு)

ஹற்றன் கல்வி வலயத்திற்குட்பட்ட பொகவந்தலாவை ஆல்டி தமிழ் வித்தியாலய மாணவர்கள் 67 பேர் உணவு ஒவ்வாமை காரணத்தால் பொகவந்தலாவை மாவட்ட வைத்தியசாலையில் நேற்று முன்தினம் பிற்பகல் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மதிய உணவாக மாணவர்களுக்கு வழங்கப்பட்ட நூடில்ஸ், மற்றும் முட்டை என்பவற்றை உட்கொண்ட மாணவர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மாணவர்களுக்கு வாந்தி மற்றும் தலைசுத்து ஏற்பட்டுள்ளதாக பொகவந்தலாவை வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி எ.எஸ்.கே.ஜயசூரிய தெரிவித்தார்.

மேற்படி சம்பவம் தொடர்பில் பொகவந்தலாவையிற்கு பொறுப்பான சுகாதார பரிசோதகர் பி.கே.வசந்த பரிசோதனைகளை முன்னெடுத்துள்ளார். (6)

# யுத்த ஞாபகார்த்த திருப்பலிக்கான அழைப்பை ஏற்க ஜனாதிபதி மறுப்பு

கிளாஸ்கோ தேவாலயத்தில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுநலவாயத்துக்கான முதலாவது உலக யுத்த ஞாபகார்த்த திருப்பலியில் கலந்துகொள்ளுமாறு கிடைத்த அழைப்பை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்க மறுத்துள்ளார்.

புலிகள் சார்பு குழுக்கள் திட்டமிட்டிருந்த எதிர்ப்பின் மத்தியிலும் பிரித்தானிய அரசாங்கம் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்யவில்லை என அதிகாரிகள் கூறியதை காரணமாக காட்டி ஜனாதிபதி இந்த அழைப்பை மறுத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி கலந்துகொள்ளமாட்டார் என்பதை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் பொது நலவாய அமைப்பின் கலாசார ஊடகங்கள் மற்றும் விளையாட்டுக்கான இராஜாங்க செயலாளர் சஜிட் ஜாவிட்டிற்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு ஜனாதிபதிக்கு, பிரித்தானிய அரசாங்கம் விடுத்த அழைப்பு ஜுன் மாதம் 24 ஆம் திகதி கிடைத்ததாக அரசாங்க தகவல்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி முன்னர் பிரித்தானியா சென்றபோது தமிழீழ விடுதலைப் புலிகள் சார்பு புலம் பெயர்ந்தோர் குழுக்களால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களை அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த ஆர்ப்பாட்டங்களின் போது, எதிர்ப்பாளர்கள் போத்தல்களையும் வெற்று தகர பேணிகளையும், ஜனாதிபதி பயணித்த கார் உட்பட வாகனத் தொடர்மீது வீசியிருந்தனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் பிரித்தானியாவிலும் ஐரோப்பிய ஒன்றியத்திலும் தடை செய்யப்பட்ட இயக்கமாகும்.

இந்த கடிதத்தில், இச் சம்பவத்தின் போது சட்ட அமுலாக்க அதிகாரிகள் வெறுமனே பார்த்துக் கொண்டு இருந்ததையிட்டு அரசாங்கம் தனது வருத்தத்தை தெரிவித்துள்ளது என தெரியவருகிறது.

எலிசபெத் மகாராணியின் வைர விழா கடந்த 2012 ஆம் ஆண்டு ஜுன் மாதம் கொண்டாடப்பட்ட போது ஜனாதிபதி லண்டன் சென்றிருந்தார். இதன்போது பிரதான நிகழ்வில் இவ்வாறான பிரச்சினைகள் இருக்கவில்லை எனவும் அரசாங்கம் சுட்டிக்காட்டியிருக்கின்றது. (6)



அகில இலங்கை ரீதியாக இடம்பெற்ற தமிழ்த்தின நாடகப் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி முதலிடத்தைப் பெற்றுள்ளது. இதில் நாடகத்தில் பங்குபற்றிய மாணவ, மாணவிகள், நாடக நெறியாளர் மற்றும் அதிபர், ஆசிரியர்களுடன் நிற்பதை படத்தில் காணலாம். (படம்:-மானிப்பாய் செய்தியாளர்)

## நெடுஞ்சாலையில் இலங்கை வீரர்கள்

கிளாஸ்கோ நகரில் நேற்று முன்தினம் தொடங்கிய பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்ள சென்றிருந்த இலங்கையின் நான்கு துவிச்சக்கரவண்டி செலுத்தும் வீரர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

போட்டிகள் நடைபெறும் நகருக்கு அருகிலுள்ள அதிவேக நெடுஞ்சாலையில் அவர்கள் சைக்கிள் செலுத்திக் கொண்டிருந்தபோது, அவர்களைத் தடுத்த ஸ்கொட்லாந்து பொலிஸார் அந்த நெடுஞ்சாலையில் சைக்கிள் செலுத்துவது சட்டவிரோதமானது என்று அறிவுறுத்தியுள்ளனர். (6)

# அரச சார்பற்ற நிறுவனங்கள் அரசிற்கு பங்கமேற்படுத்துவதற்கு இடமளிக்க முடியாது

## பிரதமர் ஜயரட்ன உறுதிபடத் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் கல்வி அறிவை போதித்து மக்கள் மத்தியில் அறிவுள்ள சமூகத்தை ஏற்படுத்துகிறோம் என்ற போர்வையில் நாட்டுக்கும் அரசுக்கும் பங்கமேற்படுத்தும் அரச சார்பற்ற நிறுவனங்களின் நடவடிக்கைகளுக்கு இடமளிக்க முடியாது என பிரதமர் டி.எம். ஜயரட்ன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிலையியற் கட்டளை 23 இன் கீழ் இரண்டில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே பிரதமர் டி.எம். ஜயரட்ன இவ்வாறு தெரிவித்தார்.

அரசசார்பற்ற நிறுவனங்கள் சில தமது கொள்கைகளுக்கு அப்பால் சென்று அரச பாதுகாப்புக்கு பங்கமேற்படும் விதத்தில் செயற்பட்டிருப்பது தொடர்பாக கடந்த காலங்களில் புலனாய்வு அறிக்கைகள் மூலம் தெரிய வந்துள்ளதாக தெரிவித்திருந்தார்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் தமக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ள வட்டயங்களுக்கு அப்பாலோ அல்லது நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கு புறம்பாகவோ செயற்படுவதாக தகவல் கிடைக்கப்பெற்றால் நடைமுறையிலுள்ள சட்டத்துக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் தங்களுக்குரிய விடயதானங்களுக்கு அப்பால் சென்று சட்டத்தை மீறி தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் செயற்படுமேயானால் அது சட்டவிரோத செயலாக கருதப்படும்.

அரச சார்பற்ற நிறுவனங்களை நடத்துவதற்காக 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க தொண்டர் [illegible] சமூக சேவை அமைப்பு (பதிவு செய்தல், கண்காணித்தல்) சட்டத்தின் பிரகாரமும் பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகளை சுற்றுநிருபம் ஆலோசனைகளின மூலம் அமைப்புக்கள் செயறபட வேண்டிய முறைகள் பற்றி விரிவாக விதந்துரைக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று 1999/10/15ஆம் திகதிக்குரிய 1101/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல மூலம் வெளியிடப்பட்ட ஒழுங்கு விதிகள் 1999/02/26 ஆம் திகதிக்குரிய ஜனாதிபதி செயலாளரின் சுற்றுநிருபம் மூலமும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பான தேசிய செயலக பணிப்பாளர் மற்றும் பதிவாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட 2014/07/01 ஆம் திகதிக்குரிய எம்.ஓ.டி/ என்ஜிஓ எம்.ஓ.என் 04ஆம் இலக்க ஆலோசனை கடிதம் மூலமும் விதிமுறைகள் பற்றி பரிந்துறைக்கப்பட்டுள்ளன. அரச புலனாய்வு பிரிவினர் அறிக்கை தயாரிக்கும் போது ஏனைய புலனாய்வுத் துறையிரனதும் அறிக்கைகளை உள்ளடக்கியே இறுதி அறிக்கை தயாரிக்கப்படுகின்றது.

அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கையில் கல்வியறிவுள்ள சமூகமொன்றை உருவாக்குகின்றோம் என்ற போர்வையில் நாட்டை சீரழிப்பதற்கும் அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கும் சூழ்ச்சிகளை மேற்கொள்வதற்கு இடமளிக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திணறும் தமிழகம்!

மத்தியில் ஆட்சி செய்யும் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனைத்து வகையிலும் ஆதரவு கொடுக்கும் எண்ணத்தில்தான் அண்ணா திராவிட முன்னேற்றக்கழக எம்.பிக்கள், டெல்லியில் நாடாளுமன்றத்திலும் ராஜ்ய சபையிலும் பேசி வருகிறார்கள். தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவும் பிரதமர் நரேந்திர மோடியுடன் மோதல் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் செயற்படவில்லை.

மாறாக மத்திய அரசின் ரயில்வே வரவு-செலவுத் திட்டத்தை வரவேற்று அறிக்கை விடுத்தார். அடுத்து வந்தபோது வரவு- செலவுத் திட்டத்தையும் வரவேற்று அறிக்கை



கொடுத்திருக்கிறார். முன்பிருந்த ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் மீதும் அந்த ஆட்சியை வழி நடத்திய பிரதமர் மன்மோகன் சிங் மீதும் தொடுத்த ஏவுகணைகளை பா.ஜ.க தலைமையில் வழி நடத்தப்படும் தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் மீது அவர் தொடுக்கவில்லை.

கச்சதீவில் மீன்பிடிக்கும் உரிமை தமிழக மீனவர்களுக்கு இல்லை என்று மத்திய அரசு சென்னை உயர்நீதிமன்றத்தில் வாக்குமூலம் தாக்கல் செய்தபோதுகூட, முந்தைய அரசின் அதிகாரிகள் இப்படி ஏற்கனவே தயாரித்து வைத்திருந்த வாக்குமூலத்தை உங்கள் கவனத்திற்கு கொண்டு வராமலேயே நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பார்கள். அதில் கவனம் செலுத்தி கச்சதீவில் தமிழக மீனவர்களுக்கு மீன்பிடி உரிமையை பெற்றுக்கொடுங்கள் என்றுதான் பிரதமர் நரேந்திரமோடிக்கு கடிதம் எழுதியிருந்தார்.

தமிழகத்திற்கு போதிய மண்ணெண்ணெய் ஒதுக்காமல் விட்டதைச் சுட்டிக்காட்டி, நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதிய முதலமைச்சர் ஜெயலலிதா, சென்ற ஆட்சியில் இருந்த அதிகாரிகள் செய்ததையே இப்போதும் செய்கிறார்கள். அதில் தாங்கள் கவனம் செலுத்தி தமிழகத்திற்கு கூடுதல் மண்ணெண்ணெய் மத்திய அரசின் தொகுப்பில் இருந்து கிடைப்பதற்கு வழி செய்யுங்கள் என்றே கோரிக்கை விடுத்தார்.

அ.தி.மு.க. எம்.பிக்கள் நாடாளுமன்றத்தில் பேசும் போதுகூட, அம்மா மொடல் நிர்வாகத்தை மத்தியில் கடைப்பிடியுங்கள் என்று வேண்டுகோள் விடுக்கிறார்கள். குறிப்பாக தமிழகத்தில் ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு 2 கோடி ரூபாய் வளர்ச்சி நிதி ஒதுக்கியிருக்கிறார் அம்மா. அந்த அம்மா மொடலைக் கடைப்பிடித்து ஒரு நாடாளுமன்றத் தொகுதிக்கு உள்ள தொகுதி வளர்ச்சி நிதியை 12 கோடி ரூபாயாக (தற்போது 5 கோடி ரூபாய்) உயர்த்த வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார் அ.தி.மு.க. எம்.பி. பி.ஆர். சுந்தரம்.

அம்மா வரவேற்றுள்ள இந்த பட்ஜெட்டை நாங்களும் வரவேற்கிறோம். தமிழகத்தில் அம்மா மத்திய உணவு திட்டத்தை சிறப்பாக நடத்தி வருகிறார். அதற்கு நூறு சதவீத மானியத்தை மத்திய அரசு வழங்க வேண்டும் என்று கேள்வி எழுப்புகிறார் அ.தி.மு.கவை நாடாளுமன்றத்தில் வழி நடத்தும் டாக்டர் மு.தம்பித்துரை.

தமிழ் நாட்டில் உள்ள கூடங்குளம் அணு மின்நிலையத்தில் உற்பத்தியாகும் மின்சாரம் அனைத்தும் தமிழகத்திற்கு கொடுக்கப்படுமா என்று மத்திய மின்துறை அமைச்சர் பி.கோயலிடம் தம்பித்துரை வலியுறுத்த, அமைச்சரோ, தமிழகத்தில் மின்பற்றாக்குறையை சமாளிக்க மிகவும் நேர்த்தியான முறையில் தமிழக அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது. அதனைப் பாராட்டுகிறேன் என்று அ.தி.மு.க அரசை பாராட்டியிருக்கிறார்.

இதுபோன்று, அ.தி.மு.க. எம்.பிக்களுக்கும், பா.ஜ.கவிற்கும் சினேகிதம் சிறப்பாக இருக்கிறது. மத்தியில் இருப்பது நம் அரசு, நமக்கு ஆதரவான அரசு, அம்மாவிற்கு நட்பான அரசு என்ற சிந்தனையில்தான் அ.தி.மு.க. எம்.பிக்கள் அனைவரும் இருக்கிறார்கள்.

இந்த அடிப்படையில் பார்த்தால், முதல்வர் ஜெயலலிதாவும் சரி, நாடாளுமன்றத்தில் இருக்கம் அவருடைய எம்.பிக்கள் 37 பேரும் சரி, மோடி அரசுக்கு எதிராக ஒரு துரும்பையும் இதுவரை எடுத்துப் போடவில்லை. ஆனால், பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசோ அ.தி.மு.கவிற்கும் அக்கட்சிக்கு தலைமை தாங்கும் முதலமைச்சர் ஜெயலலிதாவிற்கும் தலைவலி கொடுக்கும் விடயங்களை தாராளமாக செய்துகொண்டிருக்கிறது.

ஆரம்பத்தில் ஆட்சிப்பொறுப்பேற்கும் நிகழ்ச்சிக்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை வரவழைத்து கௌரவப்படுத்தியது. பின்னர், மீனவர்கள் பிரச்சினை எழுந்த போது இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட மீனவர்கள் உடனுக்குடன் விடுதலை செய்யப்பட்டாலும் அவர்களின் படகுகள் இதுவரை விடுவிக்கப்படவில்லை. அதுமட்டுமன்றி, தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடிக்கப் போவதை தமிழக அரசு தடுக்க வேண்டும். உள்நாட்டுப் பிரச்சினையாக இருக்கும் மீனவர் பிரச்சினைக்காக இரு நாடுகளின் உறவுகளை தியாகம் செய்ய முடியாது என்று மத்திய அரசினால் தமிழக அரசுக்கு திட்டவட்டமாக தெரியப்படுத்தியது.

அடுத்து கச்சதீவு பிரச்சினை. அதில் தமிழக மீனவர்களுக்கு உரிமையில்லை என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் அறிவித்தது மத்திய அரசு. இப்போது அந்த தீவை திருப்பி வாங்கும் பிரச்சினைக்கே இடமில்லை என்று உச்சநீதிமன்றத்திலேயே முதல்வர் ஜெயலலிதாவும் முன்னாள் முதல்வர் கருணாநிதியும் தொடுத்த வழக்கில் சொல்லிவிட்டது.

அடுத்து, ராஜீவ் வழக்கில் தூக்குக் தண்டனை விதிக்கப்பட்டவர்களை விடுதலை செய்யும் விடயத்திலும் இதில் மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை என்று மத்திய அரசு தன் நிலைப்பாட்டை இந்திய உச்சநீதிமன்றத்தில் தெளிவுபடுத்தியிருக்கிறது. ஏன் சமீபத்தில் மத்திய-மாநில அரசுகளுக்கு இடையில் மோதல் ஏற்பட்ட ஐ.பி.எஸ். அதிகாரி அர்சனா ராமசுந்தரம் வழக்கிலயே மாநில அரசுக்கு எதிரான நிலைப்பாட்டைத்தான் மத்திய அரசின் சட்டமா அதிபர் முகுல் ரஸ்தோகி முன்னெடுத்துள்ளார்.

இதற்கெல்லாம் முத்தாய்ப்பு வைத்தாற்போல் ஹிந்தி மொழி விவகாரம் வேறு, தலை தூக்கியது. மத்திய அரசின் அலுவலகங்கள் முழுக்க முழுக்க ஹிந்தியைப் பயன்படுத்த வேண்டும் என்று ஏற்கனவே இருந்த காங்கிரஸ் அரசின் வலியுறுத்தலை அப்படியே பா.ஜ.க அரசு கடைப்பிடித்தது. அதனால் தமிழகத்தில் எதிர்ப்புக்குரல் கிளம்பியது. அனைத்துக் கட்சிகளும் கண்டன அறிக்கைகள் வெளியிட்டன. பிறகு, அந்த உத்தரவு ஹிந்தி பேசாத மாநிலங்களுக்கு இல்லை என்று மத்திய அரசு விளக்கம் அளித்தது.

ஆனால், ஹிந்தி மொழி வளர்ச்சியை ஊக்கப்படுத்துவதில் மத்திய அரசுக்கு குறிப்பாக பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசுக்கு ஆர்வம் அதிகமாக இருப்பதாகவே தெரிய வருகிறது. ஏனென்றால், அவருக்கு ஹிந்தி பேசும் மாநிலங்களான பீஹார், உத்தரபிரதேசம், ராஜஸ்தான் போன்ற மாநிலங்களிலும் மற்றைய வட மாநிலங்களிலும்தான் அதிக எம்.பிக்கள் கிடைத்திருக்கிறார்கள்.

அதை இன்னும் வலுப்படுத்திக்கொள்ள தங்கள் அரசு ஹிந்தி மொழி வளர்ச்சிக்காக பாடுபடும் அரசு என்பதை பறைசாற்றிக் கொள்ளும் நிர்ப்பந்தத்தில் நரேந்திரமோடி அரசு இருப்பதாகவே தெரிகிறது.

எல்லாவற்றிற்கும் உச்சகட்டமாக, எதிர்வரும் ஒகஸ்ட் 7 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் சமஸ்கிருத வாரம் கொண்டாடப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இது அறிவிப்பாக மத்திய மனிதவள மேம்பாட்டுச் செயலாளரிடமிருந்து தமிழக அரசின் தலைமைச் செயலாளருக்குக் கடிதம்மூலம் வந்திருக்கிறது. தமிழகத்தில் உள்ள சி.பி.எஸ்.இ, கேந்திரிய வித்யாலயா சங்கேதன் மற்றும் என்.சி.ஈ.ஆர்.டி போன்றவை இந்த சமஸ்கிருத வாரத்தைக் கொண்டாடும் என்று அறிவித்துள்ள அதேநேரத்தில் தமிழக அரசும், மாநில, மாவட்ட மற்றும் அனைத்து மட்டத்திலும் இந்த வாரத்தைக் கொண்டாட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தமிழகத்தில் சமஸ்கிருத வாரம் என்பது, ஹிந்தியில் அனைத்து மத்திய அரசு அலுவலகங்களுக்கு செயற்படும் என்பதன் அடுத்த கட்டம் என்றே தமிழ் அமைப்புகள் கொந்தளிக்கின்றன. அனைத்துக் கட்சித் தலைவர்களும் கண்டன அறிவிப்பு வெளியிட்டுவிட்டார்கள். அதைவிட முக்கியமாக முதலமைச்சர் ஜெயலலிதாவும் மோடிக்கு கடிதம் எழுதியிருக்கிறார்.

அவர் மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில், இப்படி சமஸ்கிருத வாரம் கொண்டாடச் சொல்வது பொருத்தமற்றது. சமூக நீதிமன்றும் மொழிப் போராட்டங்கள் வலுவாக நடைபெற்ற மாநிலம் தமிழகம். ஆகவே, இங்கே செம்மொழி வாரம் கொண்டாடுவதுதான் சிறப்பாக இருக்கும் என்று சுட்டிக்காட்டி, அனைத்து மாநிலங்களிலுமே அந்தந்த கலாசாரத்தை பிரதிபலிக்கும் மொழியின் வாரமாகக் கொண்டாட உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்.

தமிழ் மொழி வாரம் மட்டுமன்றி, கன்னட மொழி வாரம், தெலுங்கு மொழி வாரம், மலையாள மொழி வாரம் என இப்படி ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள மொழியின் வாரத்தைக் கொண்டாட வேண்டும் என்பதுதான் இந்த கோரிக்கையின் பின்னணியில் இருக்கும் விடயம்.

அது மாதிரி அந்தந்த மாநில மொழி வாரம் கொண்டாடுவதுதான் இந்தியாவின் பன்முகத்தன்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் பிரதமர் நரேந்திர மோடிக்கு, முதலமைச்சர் ஜெயலலிதா சுட்டிக்காட்டியிருக்கிறார். இதுமாதிரி கருத்துக்கள்தான் முதலமைச்சர் ஜெயலலிதா எதிர்காலத்தில் தனக்குப் போட்டியாக தேசிய அரசியலில் வருவாரோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

ஏனென்றால், ஏற்கனவே தேசிய அரசியலை மனதில் வைத்தே கம்யூனிஸ்ட் போன்ற கட்சிகளை கடைசி நேரத்தில் கூட்டணியிலிருந்து விலக்கி வைத்தார் ஜெயலலிதா. அதுமட்டுமின்றி தேர்தல் பிரசாரத்தில் மோடியா, லேடியா என்றால் இந்த லேடியின் ஆட்சியில் உள்ள தமிழகத்தில்தான் சிறந்த நிர்வாகம் நடக்கிறது என்று பிரசாரம் செய்தார். நாடாளுமன்றக் கட்டடத்தின் புகைப்படத்தினை கட் அவுட்களிலும் போஸ்டர்களிலும் போட்டே சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் வாக்கு கேட்டார்கள்.

அடுத்த பிரதமர் அம்மா என்ற கோஷத்தை அ.தி.மு.கவினர் மூலை முடுக்கெல்லாம் எடுத்துச்சென்றார்கள். இப்படியொரு எதிர்கால தேசிய அரசியல் திட்டத்தில் இருக்கும் ஒரு மாநில தலைவர் ஜெயலலிதா மட்டுமே. அதுவும் அவர் பா.ஜ.கவில் உள்ளவர்களுக்கும், பா.ஜ.கவின் கொள்கைகளுக்கும் பெரிய அளவில் வேறுபாடு இல்லாதவர் என்ற எண்ணம் நரேந்திரமோடியின் மனதில் நிழலாடிக்கொண்டிருக்கிறது. இவற்றை மனதில் வைத்தே அ.தி.மு.கவுடன் நட்புணர்வுடன் இருக்கிறோம் என்பதை பறைசாற்றுவது போல் மோடியின் அணுகுமுறைகள் இருந்தாலும், அ.தி.மு.கவும், பா.ஜ.கவும் வெவ்வேறு கட்சிகள் என்ற ஒரு தெளிவான பாடத்தை எடுக்க விரும்புகிறார் மோடி.

அதன் பிரதிபலிப்புதான் எவ்வளவுதான் அ.தி.மு.க. மோடி பக்கமாக நெருங்கிச் சென்றாலும், என் வழி தனி வழி என்ற ரீதியில் காய் நகர்த்துகிறார் பிரதமர் நரேந்திர மோடி. தேசிய அரசியல் என்ற ஒரு உறைக்குள், பிரதமர் பதவிக்கு ஆசைப்படும் இரு கத்திகள் உள்ளே இருக்க முடியாது என்பதை நரேந்திரமோடி ஆட்சியின் நடவடிக்கைகள் அ.தி.மு.கவிற்கு உணர்த்திக்கொண்டிருக்கின்றன என்பதுதான் இதன் ஹைலைட். இதை எவ்வளவு தூரம், எத்தனை நாளைக்கு அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா பொறுத்துக்கொண்டிருக்கப் போகிறார் என்பதுதான் அனைத்து அரசியல் பார்வையாளர்களுக்கும் இப்போது இருக்கும் அகாடமிக்கேள்வி!

*-எம்.காசிநாதன்-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசிலுக்கு எதிராக போராட்டம்; தயாராகின்றது சுதந்திரக் கட்சி



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் பதவியில் இருந்து அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நீக்கப்பட்டால், அதற்கு எதிராக போராட அந்த கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் பலர் தயர்ராகி வருவதாக சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தின் தகவல்கள் தெரிவித்தன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளரான அமைச்சர் பசில் ராஜபக்ஷ, தொடர்ந்தும் கட்சியின் செயலாளரான அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவை தாழ்த்தியும் புறந்தள்ளியும் வருகிறார்.

இது குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள கூடிய கவனத்தை செலுத்தி வருவதாக கூறப்படுகிறது.

அலரி மாளிகையில் கடந்த 22 ஆம் திகதி நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற குழுக கூட்டத்தில் ஜனாதிபதி வருவதற்கு முன்னர் அமைச்சர்கள் கூடி இந்த விவகாரம் குறித்து பேசியுள்ளனர்.

அங்கு கருத்து தெரிவித்த கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான பிரதியமைச்சர் எம்.கே.டி.எஸ். குணவர்தன, அமைச்சர் பசில் ராஜ பக்ஷவின் அமைச்சர் மைத்திரிபாலவுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு எதிராக பதில் வழங்காது போனால், தாம் உட்பட சிரேஷ்ட உறுப்பினர்கள் வீடுகளில் வைக்கப்பட்டுள்ள கொலு பொம்மைகள் போல் ஆகிவிடுவோம் என கூறியுள்ளார்.

அத்துடன் அமைச்சர் பசில் ராஜ பக்ஷ நடத்தும் கூட்டத்திற்கு எவரும் செல்ல வேண்டாம் எனவும் பிரதியமைச்சர் குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின்17 ஆணடு ஆட்சியில் அடிவாங்கி, சிறைகளில் இருந்து, உயிர்களை தியாகம் செய்து சுதந்திரக் கட்சியின் அரசாங்கம் ஒன்றை நாம் ஏற்ப டுத்திய பின்னர், அமெரிக்காவில் இருந்து வந்து இவர்கள் எமக்கு அரசாங்கத்தை நடத்துவது பற்றி பாடம் நடத்த முயற்சித்து வருகின்றனர் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (6)

## குற்றச் செயல்களை கட்டுப்படுத்த இலங்கை-வியட்நாம் இணைகிறது

(கொழும்பு)

தமது நாட்டில் இடம்பெறும் குற்றச்செயல்களை கட்டுப்படுத்த இலங்கையுடன் இணைந்து செயற்பட வியட்நாம் விருப்பம் வெளியிட்டுள்ளது.

வியட்நாம் உதவிப் பிரதமர் குயேன் சுவான் பிஹுகு இதனை தெரிவித்துள்ளார்.

இதில் முக்கியமாக வர்த்தக மற்றும் கடன் உட்பட்ட குற்றங்கள் உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் சட்டம் ஒழுங்குத்துறை அமைச்சின் செயலாளர் நந்தா மல்லவராச்சியுடனான சந்திப்பின் போது வியட்நாம் உதவிப் பிரதமர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சந்திப்பு நேற்று முன்தினம் ஹனோரயில் நடைபெற்றது.

இதேவேளை வியட்நாம், 2014-2016 ஆம் ஆண்டுகளில் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் பேரவையில் இடம்பெற, இலங்கை உதவியளித்தமைக்கும் அவர் நன்றி தெரிவித்தார். (6)

## சொற்பொழிவு

(திருகோணமலை)

வரலாற்று பிரசித்தி பெற்ற திருகோணமலை கங்குவேலி ஆதிசிவன் ஆலய தீர்த்தோற்சவத்தை சிறப்பிக்கும் முகமாக இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 9.30 மணிக்கு சைவப்புலவர் பொன். சுகந்தனின் சிறப்பு சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. (6)

## தலைநகரில் வறியவர்கள் அதிகம்; சுட்டிக்காட்டும் அமைச்சர் தினேஷ்

இலங்கையில் கொழும்பின் வடக்கு தொகுதியிலேயே உயர்கல்வியை பெற முடியாத பிள்ளைகள் அதிகளவில் இருப்பதாக அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற வைபவம் ஒன்றிலே அவர் இதனை கூறியுள்ளார்.

கொழும்பில் மிகப் பெரிய செல் வந்தர்கள் வாழ்ந்து வருகின்றனர், அதே போல் பெரும் எண்ணிக்கையில் வறிய மக்களும் வாழ்ந்து வருகின்றனர் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

அமைச்சர் தினேஷ் குண்வர்தன கடந்த காலம் முழுவதும் ராஜ பக்ஷ அரசாங்கத்திற்கு ஆதரவாக குரல் கொடுத்து வந்தார்.

இந்த நிலையில், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் கொழும்பு நகர அலங்காரத்தின் மூலம் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த முடியாது என்று அமைச்சர் மறைமுகமாக கூறியுள்ளதன் மூலம் ராஜபக்ஷ நிர்வாகத்திற்கு எதிராக கடும் தாக்குதலை தொடுத்துள்ளதாக அரசியல் வட்டாரங்களில பேசப்பட்டு வருகிறது. (6)

## ஜே.வி.பி. தயாராகிறது

(கொழும்பு)

ஜே.வி.பியின் பல முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட செயலாளர்கள் இணைந்து புதிய அரசியல் அமைப்பொன்றை தோற்றுவிக்க தீர்மானித்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் கடந்த காலங்களில் ஜே.வி.பியில் இருந்து விலகியவர்களாவர்.

ஒரு காலத்தில் அரசியலில் முன்னணியில் செயற்பட்டு, வேறு அரசியல் கட்சிகளில் இணைந்து கொண்டவர்களும் இந்த புதிய அரசியல் அமைப்பில் இணைய உள்ளதாகவும் தெரியவருகிறது. (6)

## இராணுவத்தினரின் நடவடிக்கையால் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர்

### செல்வம் எம்.பி.குற்றச்சாட்டு

இராணுவத்தினரின் நடவடிக்கைகளினால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுபபினர் செல்வம் அடைக்கலநாதன தெரிவித்துள்ளார்.

கிருமிநாசினிகள் பயன்பாடு தொடர்பில் நாடாளுமன்றில் நடைபெற்ற விவாதத்தில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வடக்கு மக்கள் கிருமிநாசினிகளைப் பயன்படுத்தி விவசாயம் செய்தவர்கள் அல்லது. தற்போது கிருமிநாசினிகள் பயன்படுத்தப்படுகன்றது. இதனால் இயற்கை வளம் அழிவடைகின்றது.

கிருமிநாசினி பயன்பாட்டினால் புற்று நோய் போன்ற ஆபத்தான நோய்களும் ஏற்படுகின்றன. கிருமிநாசினி பயன்பாட்டை நிறுத்த வேண்டும்.

நல்ல பழங்கள் என நம்பி வீட்டுக்கு வாங்கிச் செல்கின்றோம். அதனை உட்கொள்ளும் சிறுவர், சிறுமியர் நோய் வாய்ப்படுகின்றனர்.

எமது விவசாய நிலங்களில் விவசாயம் செய்ய இராணுவத்தினர் தடை விதித்துள்ளனர். எனினும் எமது விவசாய நிலங்களை [illegible] பற்றி, அதில் இராணுவத்தினர் விவசாயம் செய்கின்றனர்.

இராணுவத்தினர் குறைந்த விலைக்கு தமது விளைச்சலை விற்பனை செய்கின்றனர்.

இராணுவத்தினரின் விவசாய உற்பத்திகளுக்கும் எமது விவசாயிகளின் உற்பத்திகளுக்கும் இடையில விலை வித்தியாசம் உண்டு.

இராணுவத்தினர் விவசாயத்தல் ஈடுபடுவதனால் வடக்கு விவ சாயிகள பாதிக்கப்படுகின்றனர். அவர்களின் ஜீவனோபாய வழிகள் பாதிக்கப்படுகின்றன. இது குறித்து கவனம் செலுத்தபபட வேண்டுமென செல்வம் அடைக்கலநாதன் மேலும் தெரிவித்துள்ளார். (6)

## இன்று ஒரு தகவல்

### மனிதனும் மிருகமும்

ஒரு பெரிய காடு .

அங்கே ஒரு சிங்கம் இருந்தது.

ஒரு நாள் காலை நேரம் அதற்கு பசியெடுக்க ஆரம்பித்தது.

உடனேகுகையை விட்டு வெளியே வந்தது. ஏதாவது இரை கிடைக்குமா என்று அங்கும் இங்கும் பார்த்துக் கொண்டே வந்தது. அங்கே ஓர் அழகான மான். அப்பொழுதுதான் ஆற்றில் குளித்து விட்டு வந்து கொண்டிருந்து. பார்ப்பதற்கு நல்ல கொழுகொழுவென்று இருந்தது.

"ஆகா... அருமையான சந்தர்ப்பம். அதை அடித்து சாப்பிட்டு விட லாம் என்று நினைத்து சிங்கம் மெதுவாக அந்தப் பக்கமாக சென்றது. அந்தச் சமயம் பார்த்து நரியொன்று அந்தப் பக்கமாக வந்தது. அதற்கும் அந்த மானைச் சாப்பிட வேண்டும் என்று ஆசை.

ஆனால், சிங்கம் அதைச் சாப்பிட்டு விட்டால் அதற்கு எங்கே கிடைக்கப் போகிறது.

நரி தந்திரமாக யோசித்தது.

மெதுவாக அந்த சிங்கத்திடம் போய்

"சிங்கராஜா! ஒரு விடயம்! சொன்னா நீங்க தப்பா நினைக்கக்கூடாது" என்றது.

"என்ன சொல்கிறாய்?"

அது வந்து... ஒன்றுமில்லை... குளித்து விட்டு வரும் மானை அடித்து சாப்பிட்டால் பதவிக்கு ஆபத்து என்று சாஸ்திரம் சொல்கிறது" என்றது.

"அப்படியா?"

சிங்கம் பயப்பட ஆரம்பித்தது.

"நல்லவேளை! சரியான நேரத்தில் வந்து என்னிடம் சொன்னாய்! வா என்னுடன்... இரண்டு பேரும் பேசிக்கொண்டே போகலாம்" என்றது.

நரிக்கு மறுபடியும் சிக்கல்.

மெதுவாக இந்த சிங்கம் வேறு இரை தேடிப் போய்விடும். நாம் இந்த மானைப் பிடித்துக் கொள்ளலாம் என்பது நரியின் திட்டம்.

இதற்கிடையில் மானும் தப்பித்து போய்விட்டது.

இரண்டு பேரும் நடந்து போய் கொண்டிருந்தார்கள். நரிக்கு பசி வயிற்றைக் கிள்ளியது.

உடனடியாக எதையாவது சாப்பிட்டாக வேண்டும்.

என்ன செய்வது?

மறுபடியும் ஒரு யோசனை கூறியது.

"சிங்கராஜா! குளித்துவிட்டு வரும் மானை கொன்றால் பதவிக்கு ஆபத்தென்பது உண்மைதான். ஆனால் அதற்கும் ஒரு பரிகாரம் உண்டு.அதுவும் சாஸ்திரத்தில் இருக்கிறது" என்றது.

"என்ன பரிகாரம்?"

"நீங்கள் நடந்துபோகும் எதிரில் வரும் முதல் ஐந்து மிருகங்களைக் கொன்றுவிட வேண்டும்."

ஆனால் சாப்பிடக்கூடாது. நாள் முழுக்க விரதமிருக்க வேண்டும்.

இவையிரண்டும் இப்படிப் பேசிக் கொண்டிருக்கும்பொது பக்கத்தில் புதரில் மறைந்திருந்த ஒரு முயலின் காதில் விழுந்தது.

ஆபத்தென்று உணர்ந்த முயல் உடனே ஓடிப்போய் எல்லா மிருகங்களிடமும் இந்த தகவலைக் கூறியது.

எல்லா மிருகங்களும் முன்னெச்சரிக்கையுடன் அவை இருக்கும் இடத்தைவிட்டு வெளியே வரவேயில்லை. சிங்கமும் நரியும் அலைந்து திரிந்தன. சாப்பிடுவதற்கு ஒரு மிருகம் கூட கிடைக்கவில்லை. அந்தக் காட்டில் ஒரு பெரிய யானை இருந்தது.

அதனிடம் ஓடிப்போய் முயல் நிலையைச் சொல்லியது.

எல்லாம் இந்த நரி பண்ணும் வேலைதான் என்பதைப் புரிந்து கொண்டது.

இரு... இரு உனக்கு ஒரு வழி பண்ணுகிறேன் என்று மனதுக்குள் கறுவிக் கொண்டே அந்தச் சிங்கத்திடம் சென்றது.

சிங்கத்தைத் தனியாக அழைத்தது.

ஒரு நரியைக் கொண்டால் ஐந்து மிருகங்களைக் கொல்வதற்குச் சமம் என்றது.

"நல்ல நேரத்தில் நல்ல யோசனை சொன்னீர்கள்" என்று கூறிய சிங்கம் நரியின் பக்கம் திரும்ப ஆரம்பித்ததாம்.

அதன் பின்பு அங்கு என்ன நடந்திருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை.

இது குழந்தைகளுக்காகச் சொல்லப்படும் கதை.

''கெடுவான் கேடு நினைப்பான்'' என்று நீதி விளக்கமும் கொடுப்பார்கள்.

இன்றைக்கு மனிதர்களிலும் இதுபோல் சிங்கம், நரி, யானை, முயல் எல்லோரையும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

காட்டில் ஒரு புலி வந்தால் இது புலி என்று தெரியும்.

ஒரு நரி வந்தால் பார்த்தவுடனே இது நரி என்று தெரியும். ஒரு கரடி வந்தால் அதன் தோற்றத்தைப் பார்த்தே வருவது கரடி என்று நாம் தெரிந்து கொள்ளலாம். உடனே நம்மைக் காப் பாற்றிக் கொள்ளலாம்.

ஆனால் நாட்டுக்குள் வந்துவிட்டால் எதிரே வருவதில் எது புலி எது நரி எது கரடி என்று புரிந்து கொள்ள முடியாது. ஒரு வீட்டில் அம்மாவும் அப்பாவும் பேசி; கொள்வதை பிள்ளை கவனித்து கொண்டிருந்தான்.

அப்பா சத்தம் போடுகிறார்.

"எவ்வளவு நேரமாக இங்கே உட்கார்ந்து கொண்டு கரடிபோல் கத்திக் கொண்டிருக்கின்றேன். உனக்கு கொஞ்சமாவ்து புரிகிறதா?"

உள்ளேயிருந்து அம்மா:

"எனக்கு கரடியின் பாஷையெல்லாம் புரியாதுங்க!"

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சிலைகள் விசமிகளால் உடைப்பு!

# கல்வாரி மலையிலுள்ள தேவாலயத்தில் சம்பவம்




(குருமன்காடு)

வவுனியாவாழ் கிறிஸ்தவ மக்களின் வழிபாட்டுத் தலமாகிய வரலாற்றுச் சிறப்புமிக்க பெரியகோமரசன்குளம் கல்வாரி மலையில் உள்ள சிலைகள் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத சில விசமிகளால் அடித்து உடைத்து சேதமாக்கப்பட்டள்ளன.

இந்த வரலாற்று சிறப்புமிக்க மலைப் புகிதியில் விளங்கும் இவ் ஆலயத்தில் பதினைந்து பகுதிகளாக சிலைத் தொகுதிகள் அமைக்கப்பட்டிருந்தன.

அவற்றுள் எட்டுத் தொகுதி சிலைகளே இவ்வாறு விசமிகளால் அடித்து உடைக்கப்பட்டுள்ளன.

இந்த எட்டு சிலைகளில் யூதர்களின் சிலைகளே அதிகமாக அடித்து உடைக்கப்பட்டிருந்தது.

இது குறித்து வவுனியா பொலிஸ நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (6-250)

# 5 குளங்களின் நீர்மட்டம் குறைவடைந்து செல்கிறது

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது நிலவும் வரட்சியினால் முத்தையன்கட்டு நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் உள்ள 5 குளங்களின் நீர்மட்டம் வேகமாக குறைவடைந்து செல்வதாக முத்தையன்கட்டு நீர்ப்பாசனத் திணைக்களம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தெரிவித்துள்ளது.

23 அடி கொள்ளளவுள்ள உடையார்கட்டு குளத்தில் 1 அடி 6 அங்குலமாகவும், 12 அடி கொள்ளளவு கொண்ட கணுக்கேணிக்குளம் 9 அடியாகவும், 14 அடி கொள்ளளவு கொரண்ட மருதமடுக்குளம் 5 அங்குலமாகவும், 21 அடி கொள்ளவுள்ள விசுவமடுக்குளம் 4 அடி 6 அங்குலமாகவும், 16 அடி கொள்ளவுள்ள மடவாளசிங்கன் குளம் 3 அடி 4 அங்குலமாகவும் நீர் உள்ளதாக திணைக்களத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

மேற்படி குளங்களில் கணுக்கேணிக்குளம் ஊற்றெடுக்கும் குளமாக இருப்பதினால் அதனுடைய நீர்மட்டம் ஓரளவு அதிகமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (6-250)

# முல்லை நெய்தல் அபிவிருத்தி ஒன்றியம் மீண்டும் உதயம்

(முல்லைத்தீவு)

கரையோர கிராமங்களை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் முல்லைத்தீவில் முல்லை நெய்தல் அபிவிருத்தி ஒன்றியம் எனும் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு கரையோர பிரதேசங்களை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் 1990 இல் இவ்வமைப்பு உருவாகி பின்னர் நாட்டில் ஏற்ப ட்ட யுத்த சூழ்நிலையால் செயலிழந்தது.

மீண்டும் முல்லைத்தீவு கரையோர புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்களின் முயற்சியுடன் முல்லைத்தீவு கரையோர கிராமங்களை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகனின் வேண்டுகோளுக்கு அமைய கரைதுறைப்பற்று பிரதேச செயலர் தி.திரேஸ்குமாரின் பூரண ஒத்துழைப்புடன் கடந்த 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் கரையோர கிராம மக்களின் பூரண ஒத்துழைப்புடன் நிலையான ஓர் பலம் வாய்ந்த அமைப்பாக தோற்றம் பெற்றது. இதற்கமைய இதன் போசகராக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், தலைவர் ம.குணசிங்கராஜா, உபதலைவர்களாக யோ. யூட்நிமலன், செ.இரத்தினம் , செயலாளர் தே.ஸ்ரீமோகன், உப செயலாளர் திருமதி. புஸ்பானந்தன் இமக்குலேற்றா, பொருளாளர் மி.அன்ரனியூட், ஆலோசகர்களாக ம.அன்ரனி ஜெயநாதன், சி.சிவமோகன், து:ரவிகரன், மி.யேசு ரெஜினோல்ட், அ.பாலுமத்துயூஸ் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்தோடு 26 கரையோர கிராமங்களுக்கும் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளமைகுறிப்பிடத்தக்கது (6-267)

# மயான வீதியை புனரமைக்குக!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி திருநகர் பொதுமயானத்திற்கு செல்லும் வீதியை முழுமையாகத் திருத்தித் தரும்படி பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அமரர்கள் பூங்கா எனப்படும் குறித்த மயானம் இந்துக்கள் மற்றும் கிறிஸ்தவர்களினது முக்கியமான பொது மயானமாகும்.

இதற்கான வீதியும் வீதியின் அருகாகச் செல்லும் வடிகால்களும் முழுமையாக செப்பனிடப்படாமையால் மயானத்துக்குச் செல்லும் பொது மக்கள் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

கிளிநொச்சி திருநகர் புனித தெரேசா ஆலயத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள இப்பொதுமயானத்திற்கு செல்லும் குறித்த வீதியானது வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தில் வீதி அபிவிருத்தித் திணைக்களம் பொறுப்பேற்று கொங்கிறீட் வீதியாக புனரமைத்தது.

அதேவேளை அந்த வீதியின் ஒரு பகுதியான பழைய வைத்தியசாலைக்குப் பின் பகுதியிலுள்ள சுமார் 40 மீற்றர் தூரம் திருத்தப்படவில்லை.

மேலும் திருத்தப்பட்ட வீதியின் அருகாமையிலுள்ள வடிகால்கள் சீரமைக்கப்படவில்லை.கொங்கிறீட் போடப்பட்ட வீதியின் அருகாமைக்கு கிரவல் போட்டு நிரவி இறுக்கப்படவில்லை.

இவ்வீதி பொதுமக்கள் மயானத் தேவைகளுக்குப் பயன்படுத்தும் அதி முக்கிய வீதியாகும்.

கிளிநகர், மருதநகர், இரத்தினபுரம், கரடிப்போக்கு, பெரிய பரந்தன், கணேசபுரம் பகுதி மக்கள் தமது உறவுகளின் பூதவுடல்களை இறுதிக் கிரியைக்காக இந்த மயானத்திற்கே கொண்டு வருகின்றனர்.இதற்கு குறித்த இவ்வீதி மட்டுமே பாவனையில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக கடந்த கரைச்சிப் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது. அதற்கு பதிலாக பிரதேச அபிவிருத்தி சபைத்தலைவர், கரைச்சி பிரதேச சபைத்தலைவர், கரைச்சிபிரதேச செயலர் ஆகியோர் முன்னிலையில் வீதி அபிவிருத்தித்திணைக்களத்தினரால் விரைவில் திருத்தித் தருவதாக வாக்குறுதி வழங்கப்பட்டது.

ஆனால் இன்றுவரை எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இந்தவிடயம் தொடர்பாக திருநர் வடக்கு மக்களின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் சம்பந்தமான கலந்துரையாடலில் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் நா.வேலாயுதம் இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

மழைகாலம் ஆரம்பமாவதற்கு முன்னர் இந்த வீதிக்கான வேலையை விரைவுபடுத்தி செய்து தருமாறு இவ் வீதியைப் பயன்படுத்தும் பொது மக்கள் அனைவராலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது. (254)

# பப்பாசி செய்கையும் வறட்சியால் பாதிப்பு

(குருமன்காடு)

தற்போது நிலவும் கடும் வறட்சியான கால நிலையில் வவுனியாவிலுள்ள பப்பாசி செய்கையாளர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் பப்பாசி செய்கை அதிகரித்து வருவதோடு மீள்குடியேற்ற மக்களின் வாழ்வாதார தொழிலாகவும் காணப்படுகின்றது.

எனினும் தற்போது கடும் வெப்பம் நிலவுதால்- நோய்த்தாக்கம் மற்றும் நீர் பற்றாக்குறை என்பன வற்றால் பப்பாசி செய்கை வெகுவாக குறைந்துள்ளது.

மீள்குடியேறிய பகுதிகளை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட பப்பாசி செய்கையானது அம்மக்களின் பொருளாதாரத்தில் பெரும்பங்கு வகித்து வந்தது.

இந்நிலையில் தற்போது நிலவும் வறட்சி காரணமாக பப்பாசி செய்கையாளர்கள் பாரிய பொருளாதார இழப்பை எதிர்நோக்கியுள்ளனர்.

வெளிநாட்டு ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு செய்கை பண்ணப்பட்ட பப்பாசி செய்கையானது தற்போது உள்ளூரிலும் பெரும் கிராக்கியாக உள்ள நிலையில் வறட்சியின் தாக்கம் செய்கையாளர்களை பெரும் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது.

இந்நிலையில் தமக்கான மாற்றுத் திட்டங்களை வழங்குவது தொடர்பில் விவசாய திணைக்கள அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என பப்பாசி பயிர்ச் செய்கையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (6-250)




# வாகனங்களை நிறுத்த பொலிஸார் தடை!


வவுனியா, ஹொரவப்பொத்தானை வீதியில் உள்ள பிரதான மரக்கறிச் சந்தைக்கு முன்பாகவுள்ள பகுதிகளில் வாகனங்கள் நிறுத்துவதற்கு வவுனியா போக்குவரத்துப் பொலிஸாரால் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை தொடக்கம் அப்பகுதியில் கடமையில் நிறுத்தப்பட்டுள்ள போக்குவரத்துப் பொலிஸார் இருவர் இலுப்பையடி, பிரதான மரக்கறி சந்தைப் பகுதி ஆகிய இடங்களில் வீதியோரங்களில் வாகனங்களை நிறுத்தவிடாது விரட்டுகின்றனர். சிலரிடம் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை அப்பகுதியில் வைத்து விசேட அதிரடிப் படையினரின் பவல் வாகனம் மோட்டர் சைக்கிளில் பயணித்த பெண் ஒருவர் மீது மோதியதில் அவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். இந் நிலையிலேயே பொலிஸார் வாகனங்களை நிறுத்த தடைவிதித்துள்ளனர்.

இச் செயற்பாட்டினால் பிரதான சந்தைப் பகுதியியில் மரக்கறி வகைகளை கொள்வனவு செய்ய வரும் வாடிக்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மரக்கறி வியாபாரிகளின் வியாபாரம் பாதிப்படைந்துள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர். (6-250)

# வாய்க்காலில் கழிவு நீர்; வவுனியா மக்கள் விசனம்



வவுனியா ஏ-9 வீதியில் அமைந்துள்ள பிராந்திய சுகாதார திணைக்களத்தின் எதிர் பக்கத்தில் அமைந்துள்ள வாய்க்காலில் கழிவு நீர் தங்கியுள்ளதால் டெங்கு பரவும் அபாயம் உள்ளாதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கழிவு நீர் தங்கியுள்ள வாய்க்காலில் பழைய போத்தல்கள் ,ரின்கள் முதலான கழிவு பொருட்களும் போடப்பட்டுள்ளதால் அப் பகுதியில் துர்நாற்றம் வீசுவதோடு டெங்கு மலேரியா என்பவை பரவக்கூடிய சூழல் காணப்படுகின்றது. இதே வேளை கழிவு நீர் வாய்க்கால் அருகில் பலகாலமாக மரம் வெட்டப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. இதனால் அப்பிரதேசம் கழிவு பொருட்களை கொட்டும் இடம் போல காட்சியளிக்கின்றது இதனை அகற்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு காரணம் என்ன? கடைகள்.வீடுகளில்நீர் தங்கி நின்றால் நடவடிக்கை எடுக்கும் சுகாதார அதிகாரிகள் இதனை கண்டு கொள்ளாமைக்கு காரணம் என்ன என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (6-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவியைக் கொலை செய்த குவைத் நாட்டு பிரஜை கைது

(கொழும்பு)

குவைத், சல்மியா பகுதியிலுள்ள வீட்டில் இலங்கையரான தனது முன்னாள் மனைவியை குவைத் பிரஜையொருவர் தலையில் பலமுறை அடித்துக் கொலை செய்துள்ளதாக அராப் நியூஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த குவைத் பிரஜை, தனது முன்னாள் மனைவியுடன் தொடர்பு கொண்டு தமது பிரச்சினைகள் பற்றி கதைப்பதற்கு தனது வீட்டுக்கு வரும்படி அழைத்துள்ளார்.

இந்நிலையில் அவரது வீட்டுக்குச் சென்ற அப்பெண்ணுடன் இடம்பெற்ற உரையாடல் பெரும் தர்க்கமாக மாறி சந்தேகநபர் பெண்ணின் தலையில் பலமுறை அடிக்க, அப்பெண் மயங்கிவிட்டார்.

சந்தேகநபர் உள்நாட்டமைச்சின் நடவடிக்கை அறைக்கு விடயத்தைக் கூறி துணைமருத்துவர்களும், பாதுகாப்பு துறையினரும் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். ஆனால், அவர்கள் பாதிக்கப்பட்டவரை சோதித்த போது அவர் இறந்து போயிருந்தார். அதனையடுத்து, அப்பெண்ணின் உடல் புலனாய்வு மருத்துவ திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதனையடுத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டு சல்மியா பொலிஸ நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

இன்னுமொரு சம்பவத்தில் பஹஹீல் இரண்டு இந்திய பிரஜைகள், அவர்களுள் ஒருவரின் இலங்கையரான மனைவியை கொலை செய்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அச்செய்தி சேவை மேலும் தெரிவித்துள்ளது. (6)

# யாழ். மாநகர எல்லைக்குள் மட்டும் 4ஆயிரத்து 300 கட்டாக்காலி நாய்கள்

## இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த விசேட செயற்றிட்டம்

யாழ்ப்பாணத்தில் நவநாகரிக பொருட்களின் சில்லறை விற்பனையாளர்களான ஓடெல் நிறுவனம் நேற்று முன்தினம் மிருகப் பாதுகாப்புத்திட்டத்தை தொடக்கிவைத்துள்ளது.

கட்டாக்காலி நாய்களின் இனப்பெருக்கத்தை மனிதாபிமான முறையில் கட்டுப்படுத்துவது மற்றும் அவற்றால் ஏற்படும் விசர் நாய் கடி போன்ற தீங்குகளில் இருந்து மக்களைப் பாதுகாப்பது என்பனவற்றை இலக்காகக் கொண்ட நீடித்து நிலைக்கும் ஒரு சமூக நலத்திட்டமாக இது முன்னெடுக்கப்படுகின்றது.

ஓடெல் நிறுவனம் அதன் எம் பார்க் வேலைத்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாநகர சபையுடன் இணைந்து இந்தத் திட்டத்தை அமுல் செய் கின்றது.

இந்த விடயத்தில் எம்பார்க் மேலும் இரண்டு அமைப்புக்களுடன் கைகோர்த்துள்ளது. டோக்ஸ்டார் (Dogstar) மன்றம் மற்றும் சுனாமி மனித மிருக கூட்டமைப்பு (TAPA) என்பனவே அந்த அமைப்புக்களாகும்.

தெருநாய்களைப் பிடித்து அவற்றின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்துதல் தடுப்பு மருந்தேற்றி விடுதலை செய்வது தான் (CNVR) இந்த திட்டமாகும்.

யாழ்ப்பாண நகரில் சுமார் 4 ஆயிரத்து 300 தெரு நாய்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றுள் சுமார் என்பது வீதத்தை அதாவது சுமார் 3 ஆயிரத்து 500 தெரு நாய்களை இந்தத் திட்டத்தின் கீழ் கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு பிரிட்ஜிட் பார்டொட் மன்றம் (The Brigitte Bardot Foundation) இனப் பெருக்கத்தை கட்டுப்படுத்துதலுக்கு உதவ முன்வந்துள்ளது.

இந்த மன்றம் பிரான்ஸில் உள்ள முன்னணி மிருகப் பாதுகாப்பு அமைப்பாகும். யாழ்ப்பாண மாநகர சபையின் அழைப்பின் பேரிலேயே இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் இந்தத்திட்டத்தை தொடக்கி வைத்த ஓடெல் நிறுவனம் மற்றும் எம்பார்க் என்பனவற்றின் ஸ்தாபகர் ஒடாரா குணவர்தன யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஊடகவியலாளர்கள் மத்தியில் கருத்து தெரிவிக்கையில் எம் பார்க்கின் பணிகளை ஏனைய பங்காளி அமைப்புக்களோடு இணைந்து யாழ்ப்பாணத்தில் தொடக்கி வைப்பதில் தான் பெரும் மகிழ்ச்சி அடைவதாக தெரிவித்தார்.

இலங்கையின் ஏனைய பாகங்களில் இதுபோன்ற CNVR திட்டங்களை எம்பார்க் ஏற்கனவே முன்னெடுத்துள்ளது. கட்டாக்காலி நாய்களால் பரவும் நோய்களை சமூக மட்டத்தில் குறைக்கவும் இந்த நாய்கள் விடயத்தில் மக்களின் மனோபவத்தை மாற்றவும் இது வழிவகுத்துள்ளது. நாம் யாழ்ப்பாண மாநகர சபையிடம் இருந்து இதற்கான வேண்டுகோளைப் பெற்றுக் கொண்டதும் தெரு நாய்கள் மீதான எமது கருணை பற்றிய செய்தியை யாழ்.பிராந்திய மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லவும் தெரு நாய்கள் பற்றிய நல்லதோர் புரிந்துணர்வை யாழ். பிராந்தியத்தில் ஏற்படுத்தவும் இதை ஒரு சிறந்தவாய்ப்பாகநாம்கருதினோம்.கடந்த காலங்களில் நாம் பணியாற்றிய சமூகங்கள் மத்தியில் எமது வேலைத்திட்டங்களில் சிறியவர்களும் வளர்ந்தோரும் காட்டிய ஆர்வம் எமக்கு பெரும் உற் சாகமூட்டுவதாய் அமைந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6)

# தனது அருகில் வந்து அமருமாறு றோசியை அழைத்த சபாநாயகர்!

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் றோஸி சேனாநாயக்கவை தனது அருகில் வந்து அமருமாறும் இல்லாதுவிடின் அவர் மற்றவர்களுடன் சேர்த்து நாடாளுமன்ற செயன்முறைகளை குழப்புவார் என்றும் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.

நாடாளுமன்ற அமர்வு நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றுகொண்டிருந்த போது நாடாளுமன்ற உறுப்பினர் றோஸி சேனாநாயக்க தனது நண்பர்களான் சுஜீவா சேனசிங்க மற்றும் ஹர்ஷ டி சில்வா ஆகியோருடன் கலந் துரையாடுவதை அவதானித்த பின்னரே அவர் இவ்வாறு கூறியுள் ளார்.

நீங்கள் எனது அருகில் இருந்தால் உங்களுக்கு நல்லது. இல்லாது விடின் ஏனையோருடன் பேசிப் பேசி நேரத்தை வீணாக்கி விடுவீரகள என்று சபாநாயகர் தெரிவித்துள்ளார.

இதன்போது, மேற்படி [illegible] கதைப்பதை நிறுத்திவி[illegible] தியாக இருந்துள்ளனர். (6)

## புலம்பெயர்ந்தவர்களின் வாழ்வியலை சித்திரிக்கும்

# மாறுதடம் திரைப்படம் இன்று திரையரங்கில்




மாறுதடம் எனும் புலம்பெயர் தமிழர் தம் வாழ்வியலைச் சித்திரிக்கும் கலைத்துவ சினிமாப்படம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். ராஜா திரையரங்கில் இலவச காட்சியாக காண்பிக்கப்படவுள்ளது.

சுவிட்சர்லாந்து வாழ் ஈழத் தமிழரான இயக்குநர் ரமணதாஸ் இன் நெறியாளுகையில் ஓசை பிலிம்ஸ் எனும் தயாரிப்பு நிறுவனத்தின் இரண்டு வருட கால முயற்சியில் உரு வான இத்திரைப் படத்தில் ஈழத்துக்கலைஞர்களதும் புலம்பெயர் கலைஞர்களதும் நடிப்பு, திரை ஆக்கம் என்பனவற்றில் பணியாற்றியுள்ளார்கள்.

மேற்குலக நாடுகளில் ஏலவே திரையிடப்பட்ட மாறு தடம் ஈழத்தில் வெள்ளியன்று திரைக்கு வருகின்றது.

இத்திரைப்பட வெளியீட்டு நிகழ்ச்சி பேராசிரியர் இரா. சிவசந்திரன் தலைமையில் வெளியிடப்படவுள்ளது.

இரண்டு மணித்தியாலங்கள் காட்சிப்படுத்தப்படும் இத்திரைப் பட நிகழ்வின் இறுதியில் படம் பற்றிய விமர்சன உரைகள் இடம்பெறும். இதில் அ.யோகராசா, க.சட்ட நாதன், திருமதி பாலகுமாரி ஆகியோர் பங்குகொள்கின்றனர். மாறுதடத்தின் முதற்காட்சி இலவசமாக அழைக்கப்பட்ட விருந்தினருக்குக் காண்பிக்கப்படும். (6)

# பிரிவுத்துயர் பகிர்வு




### தொம்மை அந்தோனிப்பிள்ளை

யாழ்.நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தொம்மை அந்தோனிப்பிள்ளை (EY9797) நேற்று முன்தினம் புதன்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் திருப்பலி நாளை சனிக்கிழமை புனித பரலோகமாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

### திருமதி பொன்ராஜா விஜயகுமார் மெற்றில்டா



87/1,பிரதான வீதி,யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மல்லாவி சந்தை வீதியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பொன்ராஜா விஜயகுமார் மெற்றில்டா நேற்று முன்தினம் புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.



### முருகேசு சண்முகநாதன்

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் டென்மார்க் Horsens ஐ வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சண்முகநாதன் கடந்த 21 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு Horsens Sygehus,Sundvej 30,8700,Horsens,Denmark என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.

### திருமதி நடேசு மனோன்மணி



புங்குடுதீவு 10 ஆம் வட்டாரம் கண்ணகிபுரத்தைப் பிறப்பிடமாகவும் கனடா Bramton ஐ வசிப்பிடமாகவும் கொண்ட நடேசு மனோன்மணி கடந்த 22 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணிக்கு Meadowvale Visitation Centre, 7732 Mavis Road,Brampton,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.




### திருமதி நாகலிங்கம் மனோன்மணி

அச்சுவேலி வடக்கு,அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் இல.09,அரசடி லேன்,'வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் மனோன்மணி கடந்த 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### கணபதிப்பிள்ளை செல்வச்சந்திரன்



சுன்னாகம் கந்தரோடை மேற்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Stockach ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை செல்வச்சந்திரன் கடந்த 21 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 9.30 மணிக்கு Friedhof Leichenhalle,Ludwigshafener StraBe 36,78333 Stockach,Germany என்னும் முகவரியில் நடைபெறும்.




### திருமதி பிரான்சிஸ் கெப்சிபா

முரசுமோட்டையைப் பிறப்பிடமாகவும் இங்கிலாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட பிரான்சிஸ் கெப்சிபா கடந்த 17 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு Bethany Baptist Church,Western Road,Southall,UB25DS,UK என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்த நிறுத்தம் செய்ய மாட்டோம்




இஸ்ரேலுடனான யுத்த நிறுத்த உடன்பாட்டுக்கு தாம் தயாராக இல்லை என ஹமாஸ் அமைப்பு அறிவித்துள்ளது.

பாலஸ்தீனத்தின் ஒரு பகுதியான காஸா, ஹமாஸ் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. அவர்களுக்கும், இஸ்ரேலுக்கும் இடையே கடந்த 15 நாட்களாக கடும் சண்டை நடந்து வருகிறது. இதுவரை ஆகாயம் மார்க்கமான தாக்குதல் நடத்தி வந்த இஸ்ரேல் தற்போது தரைவழி தாக்குதலை தொடங்கி உள்ளது.

இதுவரை நடந்த போரில் பாலஸ்தீனத்தில் 649 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இஸ்ரேல் தரப்பில் 32 இராணுவ வீரர்களும், 3 பொது மக்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

இருதரப்பினரும் போரை நிறுத்தும்படி ஐ.நா. சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. இஸ்ரேல், காஸா பகுதியில் போர் குற்றங்களில் ஈடுபட்டு வருவதாக ஐ.நா. சபையின் மனிதவுரிமை பிரிவு தலைவர் நவிப்பிள்ளை குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதற்கிடையே போர் நிறுத்தம் செய்ய நாங்கள் தயாராக இல்லை என்று ஹமாஸ் இயக்க தலைவர் ஹாலித் மெஷால் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது,

நாங்கள் போரை நிறுத்த வேணடுமென்றால் எங்கள் மீது திணிக்கப்பட்டுள்ள பொருளாதார தடையை இஸ்ரேல் விலக்கி கொள்ள வேண்டும். எகிப்து இடையேயான ரபா எல்லையை திறக்க வேண்டும். இஸ்ரேல் சிறையில் உள்ள பாலஸ்தீனர்கள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும்.

இதை செய்யாமல் நாங்கள் போர் நிறுத்தம் செய்ய முடியாது. அதை மீறினால் எங்கள் மக்களின் உயிர்தியாகத்துக்கு அர்த்தம் இல்லாமல் போய் விடும் என அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, அமெரிக்கா உட்பட உலக நாடுகள் அனைத்தும் இந்தப போரினை நிறுத்துமாறு வலியுறுத்தி வருகின்றன. தொடரும் இந்தத் தாக்குதல் போர்க் குற்றமாகக் கருதப்படுவதற்கு வாய்ப்புள்ளது என்று ஐ.நா மனித உரிமைக் கழகத் தலைவர் நவிபிள்ளை ஒரு எச்சரிக்கை அறிக்கையையும் வெளியிட்டார்.

## ஹமாஸ் அமைப்பு அறிவிப்பு



ஆனால் இதனை மறுத்துள்ள இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது.

இதனால் ஐ.நா மனிதவுரிமைக் கமிஷன் இஸ்ரேல் மீது விசாரணை நடத்தும் தீர்மானம் ஒன்றின் மீது நேற்று முன்தினம் வாக்கெடுப்பு நடத்தியது.

47 உறுப்பினர்களைக் கொண்ட இந்த சபையில் 17 நாடுகள் ஒதுங்கியிருக்க 29 நாடுகள் இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ளன.

பிரிக்ஸ் நாடுகள் என்று அழைக்கப்படும் பிரேசில், ரஷ்யா, சீனா மற்றும் தென்னாப்பிரிக்க நாடுகளுடன் இந்தியாவும் இந்தத் தீர்மானத்திற்கு தனது ஆதரவைத் தெரி வித்துள்ளது. அமெரிக்கா இந்தத் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்துள்ளது. ஐரோப்பிய நாடுகள் வாக்களிக்காமல் ஒதுங்கிவிட்டன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# தாய்வானை தாக்கிய சூறாவளி



தாய்வானையும் ரம்மசுன் சூறவளி தாக்கியுள்ளது. பிலிப்பைன்ஸசில் கடந்த வாரம் வீசிய ரம்மசுன் சூறாவளி புயலில் சிக்கி 97 பேர் இறந்தனர்.

சீனாவையும் இந்த சூறாவளி விட்டுவைக்கவில்லை. அங்கு சூறாவளியில் சிக்கி 46 பேர் உயிரிழந்தனர். 25 பேரை காணவில்லை.

இந்த நிலையில் தாய்வானை நேற்று முன்தினம் புயல் தாக்கியது.

பயங்கர சூறாவளி காற்று வீசியதோடு பலத்த மழையும் பெய்தது.

இதனால் சந்தைகள் மற்றும் பாடசாலைகள் மூடப்பட்டன. பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டது. சூறாவளியில் சிக்கி ஒருவர் உயிரிழந்தார். பல இடங்களில் சேதம் ஏற்பட்டது.

கடற்கரை அழகை படம் எடுக்கச சென்ற சுற்றுலா பயணி ஒருவர் மாயமாகி உள்ளார்.

மீட்புப்பணிகளில் தாய்வான் இராணுவ வீரர்கள் ஈடுபட்டு வருகிறார்கள்.

# புகையிரதம் - பேருந்து மோதியதில் 20 பாடசாலை மாணவர்கள் பலி

(ஐதாராபாத்)

புதிதாக உதயமாயிருக்கும் தெலுங்கானா மாநிலத்தில் பாடசாலைக்கு குழந்தைகளை ஏற்றி சென்ற வாகனம் மீது நந்தடு-செகந்திராபாத் பயணிகள் புகையிரதம் மோதியது. இந்த விபத்தில் சிக்கி 18 பேர் பலியாயினர்.

இந்த கோரச்சம்பவம் நடந்த இடத்தில் மீட்பு பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளது. பலிஎண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

மேடக் மாவட்டம் மாசியாபேட் என்ற இடத்தில் காலையில் பள்ளிக்கு சென்ற வாகனம் மீது புகையிரதம் மோதியது. இதில் வாகனம் தூக்கி வீசப்பட்டது. டூப்ரான் என்ற பகுதியில் உள்ள தனியார் பாடசாலைக்கு மாணவர்கள் சென்று கொண்டிருந்தனர்.

பேருந்தில் 35 மாணவர்கள் இருந்தனர். சம்பவ இடத்திலேயே 15 குழந்தைகள் இறந்தனர்.

ஏனையோருக்கு அருகில் உள்ள அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இன்னும் உயிர்பபலி அதிகரிக்கக்கூடும் என மருத்துவமனை வட்டாரம் தெரிவிக்கிறது.

இந்தியாவில் நடக்கும் விபத்துக்களில் 40 சதவீதம் ஆள் இல்லா புகையிரதக்கடவையினால் தான் என்று ஒரு புள்ளி விபரம் தெரிவிக்கிறது.

# பிச்சை எடுத்த கோடீஸ்வரர் கைது

அனைத்து வசதிகளும் படைத்த ஒருவர், தான் ஏழை எனக் கூறி பிச்சை எடுத்த காரணத்தால் கைது செய்யப்பட்டுள்ளார். சவுதி அரேபியாவில் அண்மையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சவுதி அரேபியாவில் பிச்சை எடுப்பது தடை செய்யப்பட்ட குற்றமாகக் கருதப்படுகின்றது. இங்கு சந்தேகத்திற்குரிய சூழ்நிலையில் பிச்சை எடுத்ததாக மதீனா பொலிஸார் சமீபத்தில் ஒருவரைக் கைது செய்தனர். இவரைப் பற்றி விசாரிக்கும் போது இவர் ஒரு கோடீஸ்வரன் என்பது தெரியவந்துள்ளது.

பாதுகாப்பு அதிகாரிகள் இவரது குடும்பத்திலிருந்து 1.2 மில்லியன் சவுதி ரியால் மதிப்புள்ள சொத்துகளைப் பறிமுதல் செய்துள்ளனர். வளைகுடா நாடுகள் ஒன்றிலிருந்து அவர் முதலீட்டாளர் உரிமம் ஒன்றையும் பெற்றிருந்ததாகக் கூறப்படுகின்றது. இவரது மனைவி, மூன்று குழந்தைகள் உட்பட அனைவரும் சவுதியில் முறையான அனுமதியின்றி தங்கியுள்ளனர்.

அனைத்து வசதிகளும் நிரம்பிய ஆடம்பரமான குடியிருப்பு ஒன்றில் இவர்கள் வசித்து வந்துள்ளனர். சொந்தமாகக் கார் ஒன்றும் வைத்திருந்த இந்தக் குடும்பம் உள்ளூர் மற்றும் வெளியூர் போக்குவரத்துக்கு காரைப் பயன்படுத்தியுள் ளனர் என்று பொலிஸார் தகவல் தெரிவித்துள்ளனர். இதனைத் தொடர்ந்து இந்த மனிதனின் சட்ட விரோத நடவடிக்கைகள் குறித்து ஒரு விரிவான விசாரணையைத் தொடங்கியுள்ளதாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

# மதம் மாறும்படி கிறிஸ்தவர்களை மிரட்டுகிறது ஐ.எஸ்.ஐ.எஸ்.அமைப்பு



ஈராக்கின் மொஅல் பகுதியிலுள்ள கிறிஸ்தவர்களை முஸ்லிம் மதத்திற்கு மாறும் படி ஐ.எஸ். ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு மிரட்டல் விடுத்து வருகின்றது.

ஈராக் நாட்டில் உள்நாட்டுக் கலவரம் மூண்டதையடுத்து அந் நாட்டின் பல்வேறு நகரங்களை ஐ.எஸ். ஐ.எஸ். கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றி வருகின்றனர்.

அதில் முக்கியமானது கிறிஸ்தவர்கள் அதிகம் வசிக்கும் மொசுல் பகுதி. அங்குள்ள கிறிஸ்தவர்களை மதமாற்றத்திற்கு தயாராகுங்கள் அல்லது மரணத்திற்கு தயாராகுங்கள் என ஐ.எஸ்.ஐ.எஸ். கிளர்ச்சியாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மொசுலில் உள்ள முக்கிய இடங்களை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியுள்ளதாக தெரிகிறது.

அதே போல் மொசுல் நகருக்கு தெற்கே 15 கி.மீ தொலைவில் உள்ள பகுதியில் கிறிஸ்தவர்களுக்கு சொந்தமான மடத்தை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியுள்ளனர்.

கிளர்ச்சி ஏற்படுவதற்கு முன்னர் அந்நாட்டில் பெரும்பகுதி மக்கள் அமைதியாக வாழ்ந்து வந்த நிலையில் தற்போது அங்கு நாள்தோறும் மோதல் நடைபெறுவது அதிர்ச்சி அளிக்கின்றது.

அந்நகரில் வசிக்கும் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் நாட்டை விட்டு வெளியேறி வருவது குறிப்பிடத்தக்கது.



அண்மையில் இஸ்ரேல் சென்றிருந்த அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன்கெர்ரி அந்நாட்டு பிரதமர் பெஞ்சமின் நெட்டன்யாகவை சந்தித்த போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்ன சொல், பேசிய பேச்சு, திறமைக்கு மதிப்பு இதற்கு அரசியல்வாதிகளின் மனச்சாட்சிக்கு வெகு தூரம்

– அகிலன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஜனாதிபதித் தேர்தலில் பொருத்தமான பொதுவேட்பாளர் யார்?

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடக் கூடிய பொருத்தமான பொதுவேட்பாளர் என்ற கருத்து முன்வைக்கப்பட்டபோது அது தொடர்பான விமர்சனங்கள் எதிர்மாறாக இருந்தன.

அதேநேரம், அத்தகையதொரு எண்ணம் தனக்கு அறவே இல்லை என்று முதலமைச்சர் கூறியதோடு அந்தக் கதை அப்படியே அடிபட்டுப் போனது.

இருந்தும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளர் என்ற விடயம் அடிபட்டு போவுதென்பது தமிழ் மக்களின் பலவீனமான அரசியலையே சுட்டி நிற்கும்.

அதாவது, நடைபெறப் போகும் ஜனாதிபதித் தேர்தலில் பொருத்தமான ஒரு பொது வேட்பாளர் நிறுத்தப்பட வேண்டும் என்பதும் அந்தப் பொது வேட்பாளர் தமிழராகவோ அல்லது முஸ்லிம் இனத்தவராகவோ இருக்க முடியாது என்பதும் தெளிவான முடிபுகள்.

இந்த இரு இனம் சார்ந்தவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டாலும் அவருக்கு கட்டுப்பணம் மீளவும் கிடைக்காது என்பது நிறுத்திட்டமான உண்மை.

எனவே, கட்டுப்பணத்தை இழக்கக் கூடியவரை ஜனாதிபதித் தேர்தலை நிறுத்துவது என்பது பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்ற நோக்கத்தை சிதைப்பதாக இருக்கும்.

அப்படியானால், ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடக் கூடிய பொதுவேட்பாளர் ஒரு சிங்களவராகவே இருக்க முடியும். சிங்களவராக இருக்கக் கூடிய பொதுவேட்பாளர் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றால் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பார் என்ற உறுதிமொழியைத் தருவது யார்? என்ற கேள்வி எழும்.

இங்குதான் நாம் ஒரு உண்மையைப் புரிந்து கொள்ளவேண்டும். அதாவது இப்போது தமிழர்களுக்காகப் பேசுகின்ற கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் அவரும் எங்களுக்கு எதனையும் தரமாட்டார் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

சுருங்கக்கூறின், சிங்கள இனம் சார்ந்த எவர் ஆட்சி அதிகாரத்திற்கு வந்தாலும் அவர்களின் முதல் பணி தமிழர்களுக்கு எதிராக எவ்வகையான சட்டவாக்கங்களைக் கொண்டு வருவதென்பதாகவே இருக்கும்.

எனவே, ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து பொது வேட்பாளரை நிறுத்துவது என்பது ஆட்சி மாற்றத்திற்கானது அல்லது தங்கள் எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கானது.

எனவே, ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்தி அவரை வெல்ல வைப்பதன் மூலம் தமிழர் பிரச்சினை தீருமென்றல்ல என்பது இப்போது தெளிவாகியிருக்கும்.

இந் நிலையில் எதிர்க்கட்சிகள் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராக நிறுத்தக் கூடியவர் யார் என்று ஆராயும் போது, யார் என்று தெரிவு செய்வதைவிட யாரை பொது வேட்பாளராக நிறுத்தக் கூடாது என்று அவர்களை விலத்தி சென்று சரியானவரை இனங்காண்கின்ற முறையே இங்கு பொருத்தப்பாடாக இருக்கும்.

இந்த முறைமையின் கீழ் முதலில் ரணில் விக்கிரமசிங்க விலத்தப்பட வேண்டும். இதனைத் தொடர்ந்து முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, ஓய்வு பெற்ற நீதியரசர் சரத் என்.சில்வா ஆகியோர் பொருத்தமற்றவர்கள் என்ற பட்டியலில் சேர்க்கப்பட,

முன்னாள் நீதியரசர் திருமதி ஷிராணி பண்டாரநாயக்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆகியோர் எஞ்சியுள்ளனர். இந்த இரு பெண்களில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவே ஜனாதிபதித் தேர்தலில் பொருத்தமான பொதுவேட்பாளர் என்ற முடிபுக்கு வர முடியும்.

எதுவாயினும் இந்த முடிவையும் பெரும்பான்மை இனம் பிரேரித்து வழிமொழிந்தால் மட்டுமே புலிச் சாயப் பூச்சில் இருந்து சந்திரிகாவும் தப்பிக்கொள்ள முடியும்.

# ஆடி அமாவாசை நம் மூதாதையர்க்கு நன்றிக்கடன் செலுத்தும் நன்னாள்

(கொழும்பு)

மாதந்தோறும் வரும் அமாவாசையும் பௌர்ணமியும் எமது பிதா வழியினரையும் மாதா வழியினரையும் நன்றியுடன் மனதிருத்தி விரதங்கள், தர்ப்பணங்கள், வழிபாடுகள் செய்யும் நன்நாட்களாக நம்முன்னோர் வகுத்துள்ளனர். கிரகங்களிற் சூரியனைப் பிதாவாகவும் சந்திரனை மாதாவாகவும் நினைத்து வழிபடுவது இந்து சமயத்தவர்களின் வழக்கமாகவும் சூரியன் வடதிசை நோக்கும் உத்தராயண தை மாதத்தில் வரும் அமாவாசையும் சூரியன் தென்திசை நோக்கும் தெட்சணாயன ஆடி மாதத்தில் வரும் அமாவாசையும் பிதிர்க்கடன் செய்து பிதாவழியினரை வழிபடச் சிறந்த நாட்களாகப் போற்றப்படுகின்றன.

துஷ்ட தேவதைகளுக்குப் பரமவைரியான மகாவிஷ்ணுவின் உடம்பிலிருந்து உண்டான காரெள்ளும் தர்ப்பையும் கொண்டு எள்ளும் நீரும் இறைத்துத் தர்ப்பணம் செய்து தான தர்மங்கள், இறை வழிபாடுகள் செய்தும் முன்னோர்க்கு நன்றிக் கடன் செலுத்துவது ஆடி அமாவாசை தினத்தின் முக்கிய கடமையாகும்.

இந்த நாளிலே மக்கள் தம் உணவில் கார்த்துவட்டிக்காய் சேர்த்துக் கொள்வார்கள். கார்த்துவட்டிக்காய் குற்றங்களை நிவர்த்தி செய்யும் தன்மை உள்ளது என்பது மக்களின் நம்பிக்கையாகும். ஆடி அமாவாசைமட்டுமன்றி ஆடி மாதத்தில் ஆடிப் பிறப்பு, ஆடிச் செவ்வாய், ஆடிப்பூரம் ஆடிக் கார்த்திகை, ஆடிவெள்ளி வரலட்சுமி வழிபாடு என்று இறைவழிபாட்டிற்கு முதன்மை கொடுக்கும் மாதங்களிற் பீடமாதமாக உயர்வுடன் ஆடி மாதத்தை நம்முன் னோர் வகுத்துள்ளனர்.

மேலும் ஆடி மாதத்திலேயே உயிர்த் தொழிலாகிய உழவுத் தொழிலையும் ஆரம்பித்தார்கள். ஆடி உழவு கூடி உழுவீர் எனவும் ஆடிவிதை தேடி நடுவீர் எனவும் ஆடி மாதத்தில் உழவுக்கும் தொழிலுக்கும் சிறப்பிடம் தந்தார்கள். இறை வழிபாட்டிற்கும் தொழிற் சிறப்பிற்கும் முதன்மை தந்து ஆடி மாதத்தைப் பீடமாதமாகப் போற்றியமையாற்றான் இம்மாதத்தில் ஏனைய சுப கருமங்களைச் செய்யாதிருந்தார்களேயன்றி ஆடி மாதம் பீடை மாதம் என ஒதுக்கிவிடவில்லை.

இன்றைய மக்கள் ஆடி மாதத்தின் தனித்துவமான சிறப்புக்களை மறந்து இம்மாதத்தின் பீடசக்திவழிபாடுகளை உணராது பீடை பிடித்தமாதம் சுபகாரியங்கள் செய்யலாகாது என விடுகின்றனர்.

ஆடிச்சிறப்பினை நவாலியூர் சோமசுந்தரபுலவர் மிக அழகாக,

**ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை**
**ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே**

என விழித்து ஆடிச்சிறப்பினை எல்லோரும்கொண்டாடவேண்டும் எனஅழைக்கின்றார். பருவகாலம் பொய்த்ததனால் மக்கள் தம் பண்பாட்டையும் மாற்றாது உறுதியுடன் இறைவழிபாடு செய்து நலம் பெறவேண்டும்.

நீர்வை மணி

# கொன்சலிற்றா உயிரிழப்பதற்கு முன்னர் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருந்தாரா?

## அறிக்கை கோரி யாழ்.நீதிமன்று உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குருநகர் யுவதி ஜேரோமி கொன்சலிற்றா உயிரிழப்பதற்கு முன்னர் பாலியல் துஷிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்தாரா என்பது சம்மந்தமாக பொலிஸார் முழுமையான விசாரணை மேற்கொண்டு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 9 ஆம் திகதிக்கு முன்னர் மன்றிற்கு அறிக்கை சமரப்பிக்குமாறு யாழ்.நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொன்சலிற்றாவின் மரணம் தொடர்பாக சட்டவைத்திய அதிகாரியினால் மன்றிற்கு சமர்ப்பிக்கப்பட்டஅறிக்கை மற்றும் வாக்குமூலங்களின் அடிப்படையில் அவர் நீரில் மூழ்கிய காரணத்தினாலேயே இறந்துள்ளார் என்றும் நீதிமன்றம தீர்ப்பளித்துள்ளது.

யாழ்.மறைக் கல்வி நிலையத்தில் கல்வி கற்பித்து வந்த ஜேரோமி கொன்சலிற்றா என்னும் யுவதி கடந்த ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு காணாமல் போயிருந்த நிலையில் மறுநாள் மாலை யாழ்.பெரிய கோயிலுக்கு அருகில் உள்ள கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

யுவதியின் மரணத்திற்கு யாழ்.ஆயர் இல்லத்தினை சேர்ந்த இரண்டு பாதிரியார்கள் செய்த பாலியல் தொந்தரவே காரணம் என்று யுவதியின் பெற்றோர் வாக்குமூலம் அளித்திருந்தார்கள்.

மேலும் உயிரிழந்த யுவதியின் மரணச் சடங்கு நடைபெறும் போது சடலத்துடன் ஊர்வலமாக யாழ்.ஆயர் இல்லத்திற்கு முன்னார் வந்து ஆர்ப்பாட்டம் ஒன்றிலும் அப்பகுதி மக்கள் ஈடுபட்டிருந்தனர்.

இதனடிப்படையில் கொன்சலிற்றாவின் உயிரிழப்புச் சம்பவம் தொடரபாக பொலிஸாரினால் யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதுவரை காலமும்நடைபெற்வழக்கு விசாரணைகளின் போது உயிரிழந்த யுவதி பயன்படுத்திய கைத்தொலைபேசி மற்றும் கைத்தொலைபேசிக்கு வந்த அழைப்புக்கள் மற்றும் குறுந்தகவர்கள் பெறப்பட்டு மன்றிற்கு சமர்ப்பிககப்பட்டிருந்தது. அதே போன்று உயிரிழந்த யுவதியின் பெற்றோர், குற்றஞ்சாட்டப்பட்ட பாதிரியார்கள் ஆகியோர் மன்றிற்கு அழைக்கப்பட்டு அவர்களுடைய வாக்குமூலங்கள் பெறப்பட்டிருந்தன.

கடந்த முறை நடைபெற்ற வழக்கு விசாரணையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சட்டவைத்திய அதிகாரி சி.சிவரூபன் மன்றிற்கு அழைக்கப்பட்டு அவரிடமும் இருந்து வாக்கு மூலங்களினை நீதவான் பெற்றிருந்தார்.

இந்நிலையில்நேற்று வியாழக்கிமை குறித்த வழக்கு மீண்டும் விசாரணைக்காக யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி பி.சிவகுமார் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. இதன் போது சட்டவைத்திய அதிகாரியால் மன்றிற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை மற்றும் அவரிடம் இருந்து பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் கொன்சலிற்றா நீரில் மூழ்கியதனாலேயே மூச்சுத்திணறி உயிரிழந்துள்ளார் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று நீதவான் தீர்ப்பளித்திருந்தார்.

மேலும் குறித்த யுவதி உயிரிழப்பதற்கு முன்னர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்தாரா என்று சந்தேகம் ஏற்படின் அது தொடர்பாக முழுமையான விசாரணைகளை மேற்கொண்டு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 9 ஆம் திகதி நடைபெறவுள்ள அடுத்த வழக்கு விசாரணைக்கு முன்னர் மன்றில் சமர்ப்பிக்குமாறும் நீதவான் மேலும் உத்தரவிட்டிருந்தார். (செ-4)

### அமைதியின் சொற்கள்

வாழ்க்கை என்பது ஒருமுறை ஏற்படும் சம்பவம் என்று தெரியுமா? அதில் வெற்றி பெறு. ஒவ்வொரு மூச்சும் ஒருமுறை நிகழும் நிகழ்வே

*(பிரேம் ராவத்)*

# கடலில் மூழ்கி சீனப்பிரஜை பலி

(யாழ்ப்பாணம்)

திக்வல்லை, கடலில் மூழ்கி சீன பிரஜையொருவர் பலியாகியுள்ளது டன் மற்றுமொரு சீன பெண்ணொருவர் ஆபத்தான நிலையில் மாத்தறை, பதிகமை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக திக்வல்லை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் சோ சங் என்ற 54 வயது நபரே பலியாகியுள்ளார். சுற்றுலா பயணமொன்றை மேற்கொண்டு மாத்தறைக்கு சென்ற 16 பேர் அடங்கிய குழுவில் மேற்படி இருவரும் உள்ளடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இக்குழுவினர், கண்டி, நுவரெலியாவிற்கு பயணித்த பின்பு மாத்தறைக்கு சென்றுள்ளதாகவும் திக்வல்லையில் உள்ள உல்லாச விடுதியில் தங்கியிருந்ததாகவும் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் தற்போது பதிகமை வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப் பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (6)

### இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

#### சொர்க்கம் வேண்டுமா?

★ பெரும் பாவியை குறித்து புறம் பேசுவது குற்றமாகாது. தான் மறைவாக செய்கின்ற பாவங்களை வெளியில் சொல்பவனைக் குறித்து புறம் பேசுவது குற்றமாகாது.

★ மனைவியை திருப்திப்படுத்துவதறகாக பொய் சொல்லலாம். போர்க்களத்தில் எதிரியை தந்திரத்தால் வெல்வதற்காக பொய் சொல்லலாம்.

★ அல்லாஹ்வுக்கு மிக பிரியத்திற்குரிய தளம் பள்ளிவாசலாகும். அவனுக்கு மிக மிக வெறுப்புக்குஉரிய இடம் கடைவீதியாகும்.


★ சொர்க்கம் வேண்டுமா? விருப்பம் கொண்டவர் பெற்றோர்களை சந்தோஷப்படுத்தவும்.

★ நீங்கள் இரவில் அதிகமாக தூங்காதீர்கள். ஏனென்றால் அதிகமாக தூங்கினால் கியாமநாளில் ஏழையாக எழுப்பப்படுவீர்கள்.

★ பொறாமை மனிதனுடைய நன்மைகளை அழித்து விடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாய விளையாட்டு கிளஸ்கோவில் நேற்று ஆரம்பம்



20 ஆவது பொதுநலவாய விளையாட்டுக்கள் ஸ்கொட்லாந்தின் மிகப்பெரும் நகரமான கிளாஸ்கோவில் நேற்று முன் தினம் புதன்கிழமை இரண்டாவது மகாராணி எலிசபெத் தலைமையில் செல்டிக் பார்க்கில் கோலாகலமாக ஆரம்பமானது.

போட்டிகளானது 24 ஆம் திகதி முதல் ஒகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி வரை 11 நாட்கள் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் இலங்கை உட்பட 71 நாடுகளை சேர்ந்த 4 ஆயிரத்து 500 விளையாட்டு வீரர்கள் 18 விளையாட்டுக்களில் பங்குபற்றவுள்ளனர். இதில் இலங்கையைச் சேர்ந்த சுமார் 89 வீரர்கள் பங்குபற்றவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்போட்டியில் 261 பதக்க நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. விசேட தேவையுடையோருக்கான பல விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறவுள்ளதுடன் 22 தங்கப் பதங்கங்களும் வழங்கப்படவுள்ளன.

2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ஆம் திகதி கொழும்பில் கூடிய பொதுநலவாய விளையாட்டுக்கள் கூட்டமைப்பு வெற்றிபெற்ற நகராக ஸ்கொட்லாந்தின் பெயரை அறிவித்தமை குறிப்பிடத்தக்கது.(க)

# கைதடி வளர்மதி வெற்றி

மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழகத்தின் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் வெற்றிக் கிண்ணத்தை கைதடி வளர்மதி கைப்பற்றியது.

மட்டுவில்வளர்மதிசனசமூகநிலையம் 49 ஆவது ஆண்டு நிறைவையொட்டி தென்மராட்சிப் பிரதேச கழகங்களுக்கு இடையில் கிரிக்கெட் போட்டிகளை நடத்தியது.

இதன் இறுதியாட்டம் ஞாயிற்றுக்கிழமை மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய வீஸ்ரார் அணி நிர்ணயிக்கப்பட்ட 16 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 117 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சசி 48 ஓட்டங்களைப் பெற்றார். கைதடி வளர்மதியின் பந்து வீச்சில் நளன் 2 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கைதடி வளர்மதி விளையாட்டுக்கழகம் 16 ஆவது இறுதிப்பந்து வரை போராடி 8 விக்கெட்களை இழந்து 118 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

இதில் நளன் 38 ஓட்டங்க ளைப் பெற்றார். போட்டியின் நாயகனாக சசி, தொடரின் நாயகனாக நளன் ஆகியோர் தெரிவாகினர். (க)

# பலாலி விண்மீனை வென்றது ஊரெழு றோயல் வி.கழகம்




நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய அணிக்கு 5 பேர் கொண்ட உதை பந்தாட்டப் போட்டியில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

இப் போட்டி கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு மின்னொளியில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்றது.

இப் போட்டியில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகமும் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகமும் மோதியது.

ஆரம்பம் முதலே போட்டியை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் அடுத்தடுத்து கோல்களைப் போட்டு முன்னிலையிலிருந்தது. இறுதியில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் 4 கோல்களைப் பெற பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணியால் கோல்களெதனையும் பெற முடியவில்லை.

இதனால் இப் போட்டியில் 4:0 என்னும் கோல் கணக்கில் வெற்றி பெற்று ஊரெழு றோயல் விளை யாட்டுக் கழகம் சம்பியனாகியது. (க-23)

# யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான காற்பந்தாட்ட சுற்றுப்போட்டி

## புனித ஹென்றியரசர் சம்பியன்



இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் 170 ஆவது நிறைவு ஆண்டினைக் கொண்டாடும் முகமாக யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 17 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையில் நடத்திய காற்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இளவாலை புனித ஹெனறியரசர் அணி சம்பியனாகியது.

மேற்படி சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இரவு மின்னொளியில் இடம்பெற்றது.

இறுதிப்போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி மோதியது.

முதல்பாதியாட்டத்தில்எஸ்.அனோஜன் அடித்த கோல் மூலம் ஹென்றியரசர் அணி 1:0 என்ற ரீதியில் முன்னிலை பெற்றது.


எனினும் இரண்டாவது பாதியாட்டத்தில் இரு அணிகளும் எவ்வித கோல்களையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இறுதியில் ஹென்றியரசர் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (க)

# இன்றைய போட்டிகள்

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டு சங்கம் யாழ்ப்பாண இலங்கை வங்கி , யாழ்ப்பாண வர்த்தக வங்கி,யாழ்ப்பாண மக்கள் வங்கி ஆகியவற்றின் ஆதரவுடன் 2014 ஆம் ஆண்டுக்கான மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை கைதடி விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இன்று முதல் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை இப் போட்டிகள் நடைபெறவுள்ளன. இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ள போட்டியில் கைதடி சரஸ்வதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அளவெட்டி பாரதி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் கைதடி விநாயகர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நவாலி சென். றொக் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)



தேசிய இளைஞர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் கொழும்பு டொறிங்டன் திடலில் இடம்பெற்ற தேசிய குத்துச் சண்டைப் போட்டியில் 3 ஆம் இடம்பெற்ற பிரமந்தனாறுப் பகுதியைச் சேர்ந்த விற்றாலிற்நிக்கலஷ (வயது 24) கிளிநொச்சி மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரனால் கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில்நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. பயிற்றுவிப்பாளர் எவரது உதவி யுமின்றி சுயமாகவே கற்றுக்கொண்ட இவர் தேசியமட்டத் திறந்த போட்டியில் கலந்துகொண்டே மூன்றாம் இடத்தை பெற்றுக்கொண்டார்.

# உடுவில் மத்திய வி.கழகத்தின் மென்பந்தாட்ட சுற்றுப் போட்டி

## இணுவில் கலைஒளி- சம்பியன்

உடுவில் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்திய 5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட 6 பேர் பங்கு கொள்ளும் மென்பந்து சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் இணுவில் கலை ஒளி விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுச்சம்பியன் ஆனது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை உடுவில் மத்திய விளையாட் டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் இணுவில் இந்துவிளையாட்டுக்கழகஅணியை எதிர்த்து இணுவில் கலை ஒளி விளையாட்டுக்கழக அணிமோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இணுவில் இந்து விளையாட்டுக்கழக அணி 6 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 38 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் லோசன் 13 ஓட்டங்களையும் சக்தி 9 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் இணுவில் கலை ஒளி விளையாட்டுக்கழக அணி சார்பில் சுரேந்திரன் 2 இலக்குகளையும் கோகுலன், தாசன் ஆகியோர் தலா ஓர் இலக்கினையும் வீழ்த்தினர்.

39 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இணுவில் கலை ஒளி விளையாட்டுக்கழக அணி 3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் எந்த வித இலக்குகள் இழப்பின்றி வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் சுரேந்திரன் ஐந்து ஆறுகள் அடங்கலாக 32 ஓட்டங்களையும் மோகன்ராஜ் 2 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றார்.

ஆட்ட நாயகனாக கலை ஒளி விளையாட்டுக்கழக அணி வீரன் சுரேந்திரன் தெரிவானார். தொடர் ஆட்ட நாயகனாக இணுவில் கலை ஒளி விளையாட்டுக்கழக அணி வீரன் [illegible] தெரிவானார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹேல சதம் இலங்கை சிறப்பாட்டம்


இலங்கையின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் மஹேல ஜெயவர்த்தனவின் சிறப்பான சதம் கை கொடுக்க தென்னாபிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல்நாள் நிறைவில் இலங்கை அணிவலுவான நிலையில் உள்ளது.

இலங்கை- தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணிகளுக்கு இடையேயான 2-வது டெஸ்ட் போட்டி நேற்று கொழும்பில் தொடங்கியது. நாணய சுழற்சியில் வென்ற இலங்கை அணித் தலைவர் மத்யூஸ் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

அதன்படி முதலில் துடுப்பெடுதாடிய இலங்கை அணிக்கு தரங்கா- சில்வா ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். தரங்கா 11 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார்.

அடுத்து வந்த சங்கக்காரா, ஸ்ரெய்ன் வீசிய முதல் பந்திலேயே இம்ரான் தஹிரிடம் பிடி கொடுத்து டக் அவுட் ஆனார்.

3-வது விக்கெட்டுக்கு சில்வாவுடன் ஜெயவர்த்தனா ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி ஓரளவுக்கு தாக்குப்பிடித்தது. இலங்கை அணி 115 ஓட்டங்களை எடுத்த போது சில்வா 44 ஓட்டங்களில் டுமினியின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.



4-வது விக்கெட்டுக்கு ஜெயவரத்தனாவுடன் அணித்தலைவர் மத்யூஸ் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி நங்கூரம் பாய்த்த மாதிரி நிலையாக நின்று விளையாடியது. ஜெயவர்த்தனா சதமும், மாத்யூஸ் அரை சதமும் அடித்தனர்.

அரை சதம் அடித்த மத்யூஸ் 63 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்த வந்த விதனாகே 13 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

ஒருபுறம் விக்கெட் வீழ்ந்தாலும் மறுமுனையில் ஜெயவர்த்தனா ஆட்டமிழக்காமல் நிலைத்து நின்று விளையாடினார்.

இதனால் முதல் நாள் முடிவில் இலங்கை அணி 5 விக்கெட் இழப்பிற்கு 305 ஓட்டங்களை குவித்துள்ளது.

ஜெயவர்த்தனா 140 ஓட்டங்களையும், திக்வெல்லா 12 ஓட்டங்களையும் எடுத்து களத்தில் உள்ளனர்.

தென்னாபிரிக்க அணி சார்பில் ஸ்டெய்ன், டுமினி தலா 2 விக்கெட்டுக்கள் வீழ்த்தினர்.

மஹேல ஜெயவர்த்தன டெஸ்ட் அரங்கில் தனது 34 ஆவது சதத்தை பூர்த்தி செய்தார். போட்டியின் இரணடாம் நாள் ஆட்டம் இன்றாகும். (க)

## இந்தியாவுக்கு அவமானம்

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளுக்கான அதிகாரபூர்வ பாடலில் இந்தியாவின் தேசிய கொடி தலைகீழாகக் பிடிக்கப்பட்டுள்ளது தற்போது சர்க்சையை ஏற்படுத்தியுள்ளது.

Let the Games Begin என்று தலைப்பிடுள்ள அந்த பாடல் கிளாஸ்கோ குழந்தைகள் 2014-க்கான யுனிசெஃபின பாடலும் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், அனைத்து நாட்டு தேசியக் கொடிகளும் இடம்பெற்றுள்ள இந்தப் பாடலில் இந்திய தேசிய மூவர்ணக் கொடி தலைகீழாகக் காண்பிக்கப் பட்டுள்ளது தற்போது சர்ச்சையாகியுள்ளது. (க)

## சம்பியன் லீக் செப்ரம்பர் ஆரம்பம்

12 அணிகள் பங்கேற்கும் சாம்பியன்ஸ் லீக் 20 ஓவர் கிரிக்கெட் போட்டி இந்தியாவில் வருகிற செப்ரம்பர் 13-ந்தேதி தொடங்கி அக்டோப்ர் 4-ந்தேதி வரை நடைபெறும். ஐதராபாத், பெங்களூர், சண்டிகர் மற்றும் ராய்ப்பூர் ஆகிய 4 இடங்களில் போட்டிகள் நடைபெறும்.

சாம்பியன்ஸ் லீக் போட்டியில் இந்தியாவில் இருந்து நான்கு அணிகளும், அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்காவில் இருந்து தலா 2 அணிகளும் பாகிஸ்தான், இலங்கை, மேற்கிந்தியதீவுகள் மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளில் இருந்து தலா ஒரு அணியும் இடம்பெறும்.

இதில் பங்கு பெறும் 12 அணிகளில் 11 அணிகள் விவரம் அறிவிககப்பட்டுள்ளது. 12-வது அணியாக தற்போது கரீபியன் பிரிமியர் லீக்கில் சாம்பியன் பட்டம் வெல்லும் அணி தகுதி பெறும்.

13-ம் திகதி இருந்து 16-ம் திகதி வரை தகுதிச் சுற்று நடைபெறும். 17-ம் திகதி இருந்து லீக் போட்டிகள் தொடங்கும். (க)

## மீண்டும் விமான விப...

ணம் மறைந்துவிட்டது. இதை அடுத்து அவசரகால நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டு, விமானத்தை தேடும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டனர்.

இந்நிலையில், மாயமான விமானம் நைஜரில் விழுந்து நொறுங்கியது கண்டுபிடிக்கப்பட்டது. விமானத்தில பயணம் செய்த 116 பேரும் இறந்துவிட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. சமீபத்தில் போர் நடைபெற்று வரும் உக்ரைனில் மலேசிய விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டது. அதில் பயணித்த 298 பேரும் இறந்தனர்.

இதேபோல் அதே நிறுவனத் தின மற்றொரு விமானம் கடந்த மார்ச் மாதம் நடுவானில் மாயமானது.

அது இதுவரை கண்டுபிடிக்கப் படாத நிலையில், இப்போது அல்ஜீரிய விமானம் விபத்துக்குள்ளானது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## இஸ்ரேல் மீது சர்வதேச....

போது இஸ்ரேல் சர்வதேச மனித உரிமை மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்களை புரிந்திருப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளதாக ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் நவிபிள்ளை தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தின் முடிவில் காஸாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களின் போது இடம்பெற்ற போர்க குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் குறித்து விசாரணை செய்வதற்கு சுதந்திரமான சர்வதேச விசாரணைக் குழுவொன்றை அமைப்பதற்கான தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக இந்தியா, சீனா மற்றும் ரஷ்யா உள்ளிட்ட 29 நாடுகள் வாக்களித்துள்ளன. அதேவேளை, இத்தீர்மானத்தை எதிர்த்து அமெரிக்கா மட்டும் வாக்களித்தது. அத்துடன் இந்த வாக்கெடுப்பின் போது 17 நாடுகள் நடுநிலை வகித்தன.

ஜெனிவாவில் கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் கொண்டு வரப்பட்ட இதேபோன்ற இலங்கைக்கு எதிரான தீர்மானம் மீதான வாக்கெடுப்பில் பங்கேற்காது இந்தியா தவிர்த்திருந்தது.

குறிப்பிட்ட ஒரு நாட்டை இலக்கு வைத்து கொண்டு வரப்படும் தீர்மானங்களை ஆதரிப்பதில்லை என்பது இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கை என்று அப்போது இந்தியத் தரப்பில் நியாயம் கூறப்பட்டிருந்தது.

இந்நிலையில், இஸ்ரேலுக்கு எதிரான விசாரணைக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## பொதுநலவாய விளையாட்டு போட்டி முதலாவது தங்கம் இங்கிலாந்துக்கு

மகளிருக்கான ரதலோன் ஓட்டப் போட்டியில் 10 கிலோமீற்றர் துரம் கொண்ட இலக்கை ஒரு மணி 58 நிமிடம் 6 வினாடிகளில் இலக்கை அடைந்த இங்கிலாந்தின ஜொடியோ முதலிடத்தை பெற்று முதல் தங்கப் பதக்கத்தை வென்ற வீரங்கனை என்ற பெருமையை தனதாக்கினார்.

சைக்கிள் ஓட்டம் மற்றும் நீச்சல் ஆகிய வற்றை உள்ளடக்கிய இப்போட்டி நேற்று நடை பெற்றது.

வெள்ளிப்பதக் கத்தை கனடாவின் கிறிஸ் டீனும் (1:59:01) வெண்கலப் பதக்கத்தை இங்கிலாந்தின் மற்றுமொரு வர்ாங்கனை விக்கி கொலண்டும் (1:59:11) தமதாக்கினர். (க)




## அனுமதிக்க மறுத்தோமா?

### எதுவும் தெரியாது என்கிறார் அக்பருதீன்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது இழைக்கப் பட்ட மனிதவுரிமை மீறல்கள் குறித்து விசாரணை நடத்தும் ஐ.நா விசாரணைக் குழுவுக்கு நுழைவு அனுமதி வழங்க இந்தியா மறுத்ததா என்பது தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது என்று இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சையட் அக்பருதீன் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் நேற்று புதன் கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் ஐ.நா விசாரணைக் குழுவுக்கு இந்தியா நுழைவு அனுமதி வழங்க மறுத்துள்ளதா என்று கேள்வி எழுப்பப்பட்ட போதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.


இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இது தொடர்பில் நான் எந்தவொரு தகவலையும் இந்தியப் பத்திரிகைகளில் பார்க்கவில்லை. இந்தியாவுக்கு வெளியில் இருந்து வெளிவரும் பத்திரிகை ஒனறில் தான் இது தொடர்பில் செய்தி வெளியாகியுள்ளது.

இந்தியாவுக்கு வெளியில் இருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்றில் வெளியான செய்தி குறித்து நான் கருத்து வெளியிட வேண்டியதில்லை. ஆனால், எமது அணுகுமுறை குறித்துக் கூறுகிறேன்.

இலங்கைக்கு எதிரான இந்தத் தீர்மானம் குறித்து நாம் கவலை கொண்டுள்ளோம், இத்தீர்மானம் மீதான வாக்கெடுப்பில் நாம் பங்கேறகவில்லை.

இலங்கை மீது விசாரணையை நடத்தக் கோரும் தீர்மானத்தின் பந்திக்கு எதிராக நாம் கருத்துத் தெரிவித்திருக்கிறோம். எனவே இந்த விடயத்தில் எமது நிலைப்பாடு தெளிவாகவுள்ளது.

இந்நிலையில், அத்தகைய கோரக்கைகள் எதுவும் விடுக்கப்பட்டதா என்பது எனக்குத் தெரியவில்லை.



ஆனால், இத்தகைய சூழலில் நிலைமைகளை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

முன்னைய நடைமுறைகள் மற்றும் அனுபவங்களின் அடிப்படையில் எமது அணுகுமுறைகள் நன்றாகவே வகுக்கப்பட்டவை. ஆயினும் நீங்கள் குறிப்பிடும் செய்தி உண்மையா என்பது தொடர்பில் நான் அறியவில்லை என்று மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நா...

ணர்களும், 13 உறுப்பினர்களும் இடம்பெற்றுள்ளனர்.

இந்த ஐ.நா. விசாரணைக் குழு இந்தியாவுக்குள் வந்து விசாரணை நடத்த எதிர்ப்பு தெரிவித்து இந்தியா அவர்களுக்கு விசா வழங்க மறுத்து விட்டதாக, இலங்கை மனித உரிமை ஆணையர், பிரதிபா மகாநாம ஹேவா தெரிவித்திருக்கிறார்.

இந்த விசாரணைக்கு இலங்கை ஒத்துழைக்க மறுத்ததால், இலங்கையின் நெருங்கிய நாடுகளிலே இருந்து விசாரணையைத் தொடங்க ஐ.நா. குழு முடிவு செய்தது. அந்த அளவில் இந்தியா மிகவும் முக்கியமான நாடு. ஆனால் இந்தியா விசாரணைக் குழுவையே அனுமதிக்கவில்லை.

இந்தியா ஐ.நா. குழுவுக்கு விசாவை மறுத்திருப்பது, இந்திய தலைமையிடமிருந்து கிடைத்திருக்கும் ஒரு முக்கியமான அடையாள்மாகக் கருதுவதாக இலங்கை மனித உரிமை ஆணையர் தெரிவித்திருக்கிறார். இதனால், ஐ.நா. விசாரணைக் குழு தெற்காசிய நாடுகளுக்கு வெளியிலே விசாரணையை நடத்த முடிவு செய்துள்ளது.

உலக அளவில் நியூயோர்க், பாங்கொக், ஜெனிவா ஆகிய மூன்று இடங்களில் மையங்களை அமைத்து, அங்கிருந்தவாறு இலங்கையில் உள்ள சாட்சிகளிடம் இணையதளம், செயற்கைக்கோள் மற்றும் தொலைபேசி இணைப்புகள் மூலம் விசாரணையை நடத்தி வருகிறது.

இந்நிலையில் ஐ.நா. விசாரணைக் குழு இந்தியா வர விசா மறுக்கப்பட்டிருப்பதாக ஊடகங்களில் வெளியான செய்தியை சுட்டிக் காட்டி பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியுள்ள முதலமைச்சர் ஜெயலலிதா, இது உண்மையாக இருக்கும் பட்சத்தில், அது இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக கொடூரமான செயல்களில் ஈடுபட்ட இலங்கை அரசு தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கும தமிழ்நாட்டு மக்களுக்கு கசப்பான ஏமாற்றமாக இருக்கும்.

எனவே நீங்கள் தயவு செய்து இந்த பிரச்சினையில் தலையிட்டு, இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து நியாயமான, நேர்மையான விசாரணை நடைபெறுவதை உறுதிசெய்யும் வகையில் ஐ.நா. விசாரணைக் குழு இந்தியா வர விசா வழங்க தேவையான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளார். (செ-11)

## அமைச்சர்...

இக்கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிடுகையில், "எனது முகநூல் கணக்கில் 21 ஆயிரம் விசிறிகள் தமது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

அதேவேளை, எனது முகநூல் கணக்கின் பெயரில் இயங்கி வந்த ஐந்து போலி முகநூல் கணக்குகளில் தவறான தகவல்கள் இடப்பட்டதுடன், அது மக்களை தவறாக வழி நடத்தவும் பயன்படுத்தப்பட்டன.

எனது உத்தியோகபூர்வ முகநூல் கணக்கில் எந்த வகையிலும் மத, கலாசார, அரசியல் மற்றும் சமூகங்களை அவமதிக்கும் வகையில் எவ்வித கருத்துகளும் பதிவு செய்யப்படவில்லை.

எனது முகநூல் கணக்கு முடக்கப்பட்டதன் பின்னணியில் சில ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்கள் இருப்பதாக சந்தேகிக்கிறேன்என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## ஞானசார...

தன் காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் அவர்கள் விளக்கியுள்ளனர்.

அதேவேளை இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள ஞானசார தேரர்,

பலமுறை தனது முகநூல கணக்கு இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டு வந்ததுடன் இறுதியில் இதனை முற் றாக நீக்கியுள்ளதாக கூறினார்.

தனது முகநூல் கணக்கு மாத் திரமல்ல, தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் தேசிய அடிப்படையில் செயற்படும் பலரது முகநூல் கணக்குகள் நீக்கப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மற்றும் வெளிநாடுகளில் இருந்து இயங்கும் முஸ்லிம் அடிப்படைவாத அமைப்புகள் தொடர்ந்து தமக்கு எதிராக முகநூல் அதிகாரிகளுக்கு வழங்கிய அறிக்கைகள் காரணமாக தனது கணக்கு நீக்கப்பட்டது என்றும் அவர் கூறியுள்ளார். (செ-11)

## காஸா...

முறைகள் காரணமாக ஏற்பட்டுள்ள உயிர் அழிவுகள், சொத்து சேதங்கள், அங்கு ஏற்பட்டுள்ள துன்பமான நிலைமை குறித்து இலங்கை அரசாங்கம் கவலை கொண்டுள்ளது.

வன்முறைகளில் குழந்தைகள் உட்பட அப்பாவி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு நாள் கடந்து செல்லும் போது அப்பாவிகளில் உயிர் இழப்புகளை காணமுடிகிறது.

வன்முறை மற்றும் பொதுமக்களின் இழபபுக்கு காரணமான அனைத்து தாக்குதல் நடவடிக்கைகளையும் இலங்கை கண்டிக்கின்றது.

அமைதியான முறையில் பேச்சுவார்த்தைகளை நடத்தி பிராந்தியத்தில் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டும் என்ற எமது உறுதியான நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்துகிறோம்.

பேச்சுவார்த்தை மூலமான தீர்வுக்கு சாத்தியமுள்ளது என்று இலங்கை நம்பிக்கை கொண்டுள்ளதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இலங்கை அரசாங்கம், பாலஸ்தீனத்தின் மீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களை நடத்தி பொதுமக்களை கொன்று வரும் இஸ்ரேலை இதுவரை கண்டிக்கவோ, அந்த நாட்டின் மீது குற்றம் சுமத்தவே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## பொது...

விளையாட்டுத் துறை அமைச்சருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இக்கடிதத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னர் மேற்கொண்ட விஜயங்களின் போது, விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான அமைப்புக்களைக் கட்டுப்படுத்த பிரித்தானிய அரசாங்கம் தவறியதாலேயே, அவர் பொதுநலவாய நிகழ்வில் பங்கேற்பதில்லை என்று முடிவு எடுத்ததாக கூறப்பட்டுள்ளது.

பிரித்தானியாவில் விடுதலைப் புலிகள் இயக்கம் இன்னமும் தடை செய்யப்பட்டுள்ள அமைப்பு என்பதையும் இக்கடிதத்தில் பீரிஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் ஜனாதிபதியும், தானும் பயணம் செய்திருந்த போது, இலங்கைக்கு எதிராக நடத்தப்பட்ட வன்முறைப் போராட்டங்களை கட்டுப்படுத்தாமல் சட்டத்தை நடை முறைப்படுத்தும் பிரித்தானிய அதிகாரிகள் அது தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என பீரிஸ் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பயணம் செய்த வாகனம் மீது போத்தல்கள் மற்றும் கொள் கலன்கள் வீசப்பட்டதாகவும் அவர் இக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். அதேவேளை, இது அரசாங்கத்துடன் தொடர்புடைய விடயம் என்றும், இம்முடிவு குறித்து தமக்கு அறியத் தரப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கிளாஸ்கோ பயணம் கைவிடப்பட்டமை குறித்து கருத்து வெளி யிட்டுள்ள இலங்கைக்கான பிரித்தானியத் தூதரகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

2012ஆம்ஆண்டு ஜூன் மாதம் இடம் பெற்ற பிரித்தானிய மகாராணியின்வைர விழாவில் கலந்து கொள்ளச் சென்றிருந்த போது, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ புலம்பெயர் தமிழர்களின் கடும் எதிர்ப்புக்கு முகம் கொடுக்க நேர்ந்தது குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் புலிகளுக்கு சார்பான அமைப்புக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தத் திட்டமிட்டுள்ளதால், அடுத்த மாதம் இடம் பெறவுள்ள பொதுநலவாய ஆராதனை நிகழ்வில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்து கொள்வது பாதுகாப்பற்றது என்று உணர்வதாக பிரித்தானிய அரசாங்கத்துக்கு அறி விக்கப்பட்டுள்ளது. (செ-11)

## தமிழர்கள்...

பங்கை விழுங்கியுள்ளது.

அனைத்து துறைகளிலும் இந்தியா உட்புகுந்துள்ளது. இலங்கையின் மருந்து சந்தை இந்தியாவின் கைகளிலேயே உள்ளது.

மோட்டார் வாகனங்களில் அதிகளவான பங்கு இந்தியாவிற்கே உள்ளது. கிழக்கு மாகாணத்தில் பெரும் பகுதியை இந்தியா விழுங்கியுள்ளது.

சம்பூரில் இடம்பெயர்ந்த மக்களை திருகோணமலையில் உள்ள அகதி முகாமுக்கு விரட்டி விட்டு அவர்களின் நிலங்களை இந்தியாவுக்கு வழங்கியுள்ளனர்.

வடக்கில் ரயில் பாதைகளை நிர்மாணிக்கும் பொறுப்பு இந்தியாவுக்கு வழங்கப்பட்டுளளது காங்கேசன்துறைதுறை முகத்தின் அபிவிருத்தி பணிகள் இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இலங்கையின் பெறுமதிமிக்க கனியவளமான புல்மோட்டை இல்மனைட் கனியத்தை இந்தியாவிடம் ஒப்படைக்க பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் உள்ள துரையப்பா விளையாட்டு மைதானத்தின் புனரமைப்பு பணி கூட இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மக்கள் மீது இந்தியாவுக்கு உண்மையான கரிசனை இருந்தால், ஏன் வடக்கு மீனவர்களின் மீன்வளத்தை கொள்ளையிட இந்தியா படகுகளை அனுப்புகிறது?.

ஜெயலலிதாவுக்கு வடக்கு மக்கள் மீது உண்மையான அக்கறை இருந்தால் ஏன்மீன்வளததை கொள்ளையிட முயற்சித்து வருகிறார்?.

அதேபோல் இலங்கையின் இன்றைய அரசாங்கத்தினால் மக்களின் எந்த பிரச்சி னைக்கும் தீர்வை வழங்க முடியாது எனவும் அனுர குமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார். (எ-11)


விற்பனையாகின்றது!
LOGIC
மாணவர்களுக்கான
'விஞ்ஞானமுறை'
ஆசிரியர் எஸ்.எஸ்.மனோகரன்
கிடைக்குமிடங்கள்:-
✦ BEACON கல்வி நிலையம் வெலிங்டன் சந்தியடி, யாழ்ப்பாணம்.
✦ வினைல்ஸ் கல்வி நிலையம் சுன்னாகம்
✦ உடுவில்
(சி-7984)



ஆவரங்கால் நடராஜ இராமலிங்க சுவாமி கோயில்
அம்பாள் மஹோற்சவம்-2014
6-ந் திருவிழா உற்சவம்
(26.07.2014 சனிக்கிழமை)
மாலை நிகழ்வுகள்
✦ மாலை 6 மணிக்கு வசந்தோற்சவம் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து இலங்கை, இந்தியப் புகழ் தவில் வித்துவான்களின் நாதஸ்வரத் தவில் இசைச் சங்கமம் இடம்பெறும்.
கலைஞர்கள்
நாதஸ்வரம்
இந்தியா: மாம்பழம் சிவா, வெங்கடேசன், B.S.ரமேஸ்
இலங்கை: P.S.பாலமுருகன்
தவில்
இந்தியா: மன்னார்குடி MR வாசுதேவன், KG கல்யாணசுந்தரம், V.M கணேசன், M.அசோக்குமார்
இலங்கை: T. உதயசங்கர், N.R.S சுதாகரன் (குழுவினர்), B.நர்மதன், P.S.செந்தில்
அனைவரும் கலந்து கொண்டு அம்பாளின் அருளைப் பெற்றுக் கொள்ள வேண்டுகின்றோம்
சிவன் தேவஸ்தானம்
6-ந் திருவிழா உபயகாரர்
(7115)



அரியாலை சனசமூக நிலையம்
65 வது ஆண்டு நிறைவு விழா
காலை 6.00 மணி - வீதி ஓட்டம் (ஆண்கள்) - 10மைல்
காலை 7.00 மணி - சைக்கிள் ஓட்டம் (பெண்கள்) - 10மைல்
காலை 7.30 மணி - சைக்கிள் ஓட்டம் (ஆண்கள்) - 50மைல்
காலம் :- 27-7-2014 ஞாயிற்றுக்கிழமை
இடம் :- நிலைய முன்றல் (புங்கன்குளம் சந்தி, அரியாலை.)
பங்கு பற்ற விரும்பும் வீரர்கள் காலை 6.00 மணிக்கு சமூகம் தரவும்

185, புங்கன்குளம் வீதி, அரியாலை
தொடர்புகளுக்கு - 077 645 38 62, 077 751 30 99



வேலையாட்கள் தேவை
மணிக்கூட்டு வீதி, ஸ்ரான்லி வீதியில் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் Ice Cream Shop & Vegetarian Restaurant க்கு பின்வரும் பதவிகளுக்கு வேலையாட்கள் கோரப்படுகின்றனர்.
- முகாமையாளர்
- காசாளர்
- Bill Clark
- Suppliers
- உதவியாளர்
- வரவேற்பாளர்
- Sweet Makers
- சிற்றுண்டி தயாரிப்பாளர்
- Tea Makers
- Cleaners
- Technicians


முன்அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
வேலைத்திறமைக்கேற்ப ஊதியம் வழங்கப்படும்.
மேற்படி பதவிகளுக்கு தகைமையுடையோர் 27.07.2014 ஞாயிற்றுக்கிழமை 9 - 4 மணிவரை நேர்காணலுக்கு இல.09, சிவன்கோவில் வீதி, யாழ்ப்பாணம் (பழைய Central Nursing homeக்கு முன்பாக) சமூகம் தரவும்.
(ஆண், பெண் இருபாலாரும்) (7101)
தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல.
0778249585, 0779985970.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.07.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org